# உதயன்

விலை ரூபா 15.00


www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 02 புதன்கிழமை (16.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 202


# யுத்தக் குற்றச் சர்வதேச விசாரணை

# இலங்கை அரசு இரட்டை வேடம்

## ஐ.நா. அதிகாரி அல்ஸ்டன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 16

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணை இலங்கையில் நடத்தப்படக் கூடாது எனவும், பலஸ்தீன நிவாரணக் கப்பல்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை அரசு வலிறுத்தியுள்ளதன் மூலம் அதன் இரட்டை வேடம் அம்பலமாகின்றது.

இவ்வாறு ஐக்கிய நாடுகளின் சட்டவிரோதப் படுகொலைகள் தொடர்பான விசேட பிரதிநிதி பிலிப் அல்ஸ்டன் குற்றம்சாட்டியுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மை குறித்து சந்தேகம் எழுந்துள்ளது என்றும், குறித்த ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் நியமனம் தொடர்பிலும் திருப்தி கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிப் பொலிஸ் மா அதிபரை கைதுசெய்ய நீதிமன்று பணிப்பு

கொழும்பு, ஜூன் 16

சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு ஆள்களை அனுப்பிய சந்தேக நபர்கள் இருவரைக் கைதுசெய்யத் தவறியதன் காரணமாக பிரதிப் பொலிஸ் மா அதிபரைக் கைதுசெய்யுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவுக்கு இதுதொடர்பான அறிவித்தல் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் இன்று விடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## யுத்தக் குற்ற ஆதாரங்கள் இருந்தால் உள்நாட்டில் நடவடிக்கை எடுங்கள்!

### சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கு கோத்தபாய சவால்

கொழும்பு, ஜூன்

இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்ற ஆதாரங்கள் இருந்தால் உள்நாட்டில் சட்ட நடவடிக்கை எடுங்கள் பார்க்கலாம் - என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்குச் சவால் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு - இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றன என்று கூறப்படும் யுத்தக் குற்றங்களுக்கு தகுந்த ஆதாரங்களை முன்வையுங்கள். சர்வதேச ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு இலங்கை நீதிமன்றங்களுக்கு முன்னால் யுத்தக் குற்ற ஆதாரங்களைச் சமர்ப்பியுங்கள்.

பொலிஸார் மூலமாகவும், சட்டத்தரணிகள் மூலமாகவும் இந்த ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியும். இலங்கை நீதி முறைமையின் கீழ் அவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார் அவர். (அ-சி)

## சாவகச்சேரி, வவுனியா நீதிவான்கள் இருவரும் திங்கள் முதல் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட நீதிமன்றங்களில் பணிபுரியும் நீதிபதிகளுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நீதிச் சேவை ஆணைக்குழுவால் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நீதிவானாகப் பணியாற்றும் ரி.ஜே. பிரபாகரன் அக்கரைப்பற்று நீதிமன்றத்துக்கும், வவுனியா நீதிவானாகப் பணியாற்றும் அலெக்ஸ்ராஜா கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்துக்கும் மாற்றப்பட்டுள்ளனர். (24ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் 6 வருடங்களின் பின் கூட்டமைப்பு எம்.பிக்கள்

முல்லைத்தீவு, ஜூன் 16

வன்னி மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் நீண்டகால இடைவெளியின் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மாவட்ட இணைப்புக்குழுவின் கூட்டம் நேற்றுக் காலை 9.30 மணிமுதல் 2 மணிவரை முல்லைத்தீவு செயலகத்தில் நடைபெற்றது.

வன்னி மாவட்ட இணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், (23ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகா கென்யா செல்ல அரசு அனுமதி மறுப்பு

கொழும்பு, ஜூன் 16

கென்யாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் முன்னாள் இராணுவத் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகா கலந்து கொள்ள அனுமதிக்க முடியாது என அரசு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா, இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் வகையில் இலங்கை நாடாளுமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. நாடாளுமன்ற (23ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாக ஸ்ரீநிதி திங்கள் தொடக்கம் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவானாகப் பணியாற்றிவரும் ஸ்ரீநிதி நந்தசேகரன் எதிர்வரும் திங்கட்கிழமை 21ஆம் திகதியன்று பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகப் பதவியேற்கிறார்.

யாழ். மாவட்டத்தில் பல நீதிமன்றங்களில் நீதிபதியாகக் கடமையாற்றிய ஸ்ரீநிதி நந்தசேகரன் பம்பலப்பிட்டி சிறுவர் நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப் பட்டு, பின்னர் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீதான குற்றச்சாட்டுக்களை அகற்ற வெளிநாட்டுப் பிரமுகர்களின் வருகை உதவும்

### கெஹலிய ரம்புக்வெல சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 16

இலங்கை தொடர்பாக சர்வதேச நாடுகளில் பரப்பப்பட்டுவரும் தவறான கருத்துகளைத் தெளிவுபடுத்துவதற்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இங்கு விஜயம் செய்வது அவசியம் என தேசிய பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிச் செயலாளர் நாயகமும், அரசியல் விவகாரங்களுக்கான சிறப்புத் தூதுவருமான லியன் பஸ்கோ இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளமை மற்றும் ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி விஜயம் செய்துள்ளமை என அண்மைக்காலமாக இலங்கைக்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகை அதிகரித்து வருகின்றது. இதற்கு ஏதேனும் அழுத்தம்தான் காரணமா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு தேசிய பாதுகாப்புக்கான ஊடக நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் (23ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நீதிமன்றிலோ, இலங்கை நீதிமன்றிலோ எவருமே என்னை ஆஜர்படுத்தமுடியாது

### டக்ளஸ் தேவானந்தா அடித்துக்கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 16

''சென்னை சூளைமேடு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் இந்திய நீதிமன்றத்திலோ அல்லது இலங்கை நீதிமன்றத்திலோ என்னை எவருமே ஆஜர்படுத்த முடியாது'' - இப்படி ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் தனக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது என்றும் அவர் சொன்னார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

1986இல் இடம்பெற்ற சூளைமேடு துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பில் 1987ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் 2.11 பிரிவின் கீழ் எனக்கு இலங்கை ஜனாதிபதியால் மன்னிப்பு வழங்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு மே மாதம் நான் இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்டபோது இது தொடர்பான ஆவணத்தில் கைச்சாத்திட்டேன்.

முன்னாள் போராளிகளுக்கு மன்னிப்பு வழங்கி அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் விடயத்தில் இலங்கைக்கு இந்திய அரசு உதவும் என்று (23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காயச் செய்கைக்கு காப்புறுதி; யாழ்ப்பாணத்திலும் விரைவில் நடைமுறை

யாழ்ப்பாணம், ஜூன் 16

நாட்டில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் வெங்காயப் பயிர்ச் செய்கைக்கான காப்புறுதித் திட்டம் யாழ்ப்பாணத்திலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் யாழ். மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

இது கமநல சேவை நிலையப் பிரதேச ரீதியான கால அட்டவணைக்கு ஏற்ப அமுல்படுத்தப்படும். அரை ஏக்கர் நிலப் பரப்புக்கு மேல் தனிப் பயிராகச் செய்கை பண்ணப்படும் பயிர்களுக்கே இந்தக் காப்புறுதி வழங்கப்படும்.

மிகையான மழையினால் ஏற்படும் அழிவு, கட்டுப்படுத்தப்படாத நோய் என்பவற்றால் முழுப்பிரதேசமும் பாதிக்கப்படும் போது ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்றும் ஒரு ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபா தொடக்கம் 80 ஆயிரம் ரூபா வரை காப்புறுதி செய்துகொள்ள முடியும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

பயிர்ச்செய்கையாளர்கள் தமது கமநல சேவை நிலையங்களினூடாகக் காப்புறுதி வசதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

# கொழும்புத்துறை கரையோரப் பகுதி வீடுகளுக்குச் செல்ல படையினர் அனுமதி

கொழும்புத்துறை, ஜூன் 16

அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வந்த கொழும்புத்துறை துண்டிச் சந்திக்கும் கொழும்புத்துறை துறைமுகத்திற்கும் இடைப்பட்ட கரையோரப் பகுதி வீடுகளுக்குச் செல்ல பாதுகாப்புத் தரப்பினர் அனுமதியளித்துள்ளனர்.

இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தமது வளவுகள், உடைந்த வீடுகளைச் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

அநேகமான வீடுகள் சேதமடைந்து குடியிருக்க முடியாத நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இதனை அண்மித்த எழிலூர் பகுதிக்குச் சென்றுவர இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை என அக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஒ-135)

# பொத்துவிலில் குடும்பஸ்தர் நேற்று சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூன் 16

அம்பாறை, பொத்துவில் பிரதேசத்தில் நேற்று குடும்பஸ்தர் ஒருவர் இனந் தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பொத்துவில் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு நேற்று அதிகாலை சென்ற ஆயுததாரிகள் அவரை சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் 47 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே பலியானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ- 10)

## மாதாந்த உதவித்தொகை

யாழ்ப்பாணம், ஜூன் 16

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் மாற்று ஆற்றலுடையோருக்கான மாதாந்த உதவித்தொகைக் கொடுப்பனவு சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் இக்கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

பிரதேசத்தைச் சேர்ந்த ஏழு பேருக்குத் தலா 3 ஆயிரம் வீதம் மாதாந்தம் இக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

## ஸ்ரான்லிக் கல்லூரியின் புதிய அதிபராக இன்று பதவி ஏற்கிறார்



யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம், மத்திய மகா வித்தியாலயத்தின் (ஸ்ரான் லிக் கல்லூரியின்) புதிய அதிபராக வே.ஞானகாந்தன் இன்று பதவியேற்கிறார்.

இன்று காலை 9.30 மணிக்கு அவருக்கு கல்லூரிச் சமூகத்தினரும் பழைய மாணவர்களும் முன்னாள் அதிபர்களும் பெற்றோர்களும் சிறப்பாக வரவேற்பு வழங்க ஏற்பாடாகி உள்ளது. இந்த வர வேற்பில் கல்வி அதிகாரிகளும் கலந்து கொள்வர்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் பல வருடங்கள் அதிபராகக் கடமையாற்றி அதன் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் பெரிதும் உழைத்தவர் அதிபர் வே.ஞானகாந்தன். (அ)

# கிளிநொச்சி கனகபுரம் ம.வியில் நாளை இலவச மருத்துவ முகாம்

## சகல நோயாளர்களும் சிகிச்சை பெறலாம்

கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சி, கனகபுரம் மகாவித்தியாலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான இந்த மருத்துவ முகாமில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவிக்கிறார்.

நாளைய மருத்துவ முகாமில் பொது மருத்துவம், கண், பல் மற்றும் காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மகப்பேறு, பெண் நோயியல் மருத் துவம்,இருதய நோய், புற்று நோய் உட்பட அனைத்து மருத்துவ சேவைகளும் நடைபெறும் என்று கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஈ. தேவநேசன் அறிவித்துள்ளார்.

மேற்படி நோய்கள் தொடர்பான வைத்திய நிபுணர்கள் நவீன உபகரணத் தொகுதிகளுடன் சமுகமளித்துச் சிகிச்சையளிக்க உள்ளதனால் இதில் பங்குகொண்டு பயனடையுமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். கிளிநொச்சியிலிருந்து பாடசாலை வரை வாகன வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## சாவகச்சேரி இந்துவில் பொருளியல் பாட விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 16

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சி.ஈ உர்தரப் பரீட்சையில் பொருளியல் பாடத்திற்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட இலவசக் கருத்தரங்கு எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களால் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதால் கலந்துகொள்ளவுள்ள மாணவர்கள் சீருடையுடன் வருகை தருமாறு இந்துக் கல்லூரி அதிபர் அ. கயிலாயபிள்ளை அறிவித்துள்ளார். (ஒ-207)

# சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

## ஜேர்மன் தூதுவர் நேற்றுக் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

ஜேர்மன் தூதரகத்தால் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு 17.59 லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன.

ஜேர்மனின் இலங்கைத் தூதுவர் ஜேன்ஸ் புளொட்னர், திருமதி மீகி புளொட்னர் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டு கல்லூரி விளையாட்டு அணிகளின் தலைவர்களிடம் உபகரணங்களை ஒப்படைத்தனர்.

கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கிளையின் தலைவர் சு.இளம்பிறைநாதன், செயலாளர் மயூரன், பொருளாளர் எம். இராஜகோபாலபிள்ளை, யாழ்.பல்கலைக்கழக பௌதிகத்துறைத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பெரு விளையாட்டு உபகரணங்களும் உள்ளக விளையாட்டு உபகரணயங்களும் நிகழ்வில் கையளிக்கப்பட்டன. (ஒ- 207)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*33 வருட ஆசிரிய சேவையில் எமது பாடசாலையில் 13 வருடங்கள் கடமையாற்றி, உப அதிபராக சிறப்பாக சேவையாற்றி 15.06.2010 அன்று ஓய்வு பெற்ற*

திருமதி

**லலிதா சண்முகலிங்கம்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் நீண்ட ஆயுளுடன் நலமாக வாழ இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,*

**யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை**



## பவிசாறு பூங்கனிச் சோலை மலிவு விற்பனை

கறுவா, ஜம்பு, கராம்பு, Red Lady பப்பா, மிளகுச்செடி, இந்தியன்முருங்கை, கொழும்பு வெற்றிலைக்கொடி, ஒட்டுத்தோடை, ஒட்டுத்தேசி, ஒட்டுப்பிலா, ஒட்டுமா, மகோகனி, காட்டுத்தேக்கு, 3வருடத்தில் பயன்தரக்கூடிய தென்னை, 5 வருடத்தில் பயன்தரக்கூடிய ஊர்த் தென்னை, ஒட்டு றோஸ், கடதாசிப் பூக்கண்டு, நல்ல இன வாழைக்குட்டிகள், கதலி, இதரை, கப்பல், செவ்வாழை, நல்ல இன மரவள்ளிக்கட்டை (அடுக்குமொனியன் ஒரு கட்டையில் 8 - 12 கிலோ வரை விளையக்கூடியது. பிளாஸ்ரிக் சாடிகள் மற்றும் அனைத்து வகையான பூக்கண்டு இனங்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விசேட விலைக் கழிவுடன் வேண்டிய எண்ணிக்கையில் மரக்கன்றுகள் எம்மால் வழங்கமுடியும்.

பவிச்சாறு பூங்கனிச்சோலை, 311/1, பலாலி வீதி, கோண்டாவில் யாழ்ப்பாணம். 021 222 8199, 0718475629


## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள்

# யாழ். பல்கலைக்கழகத்திற்குள் நுழைய முடியாது திரும்பிச் சென்றமைக்கு மாணவர் ஒன்றியம் வருத்தம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

தென்னிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களும் மாணவர் ஒன்றியப் பிரதி நிதிகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் நுழையமுடியாது திரும்பிச்சென்றமைக்கு, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், மாணவர்கள் சார்பாக வருத்தம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

கடந்த 12.06.2010 அன்று தென்னிலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் யாழ். பல்கலைக்கழகத்திற்கு நட்புறவு ரீதியாகவும் வன்னி மாணவர்களுக்குத் தமது உதவிகளை வழங்கும் நோக்கிலும் எமது பல்கலைக்கழகத்திற்கு வந்தனர். ஆனால் இவர்களின் உதவிகளைப் பெறவிடாது தடுத்தும், அவர்களை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சந்திக்கவிடாது தடுத்து ஆகக்குறைந்தது பல்கலைக்கழக மாணவர்கள் என்ற ரீதியிலாவது எமது பல்கலைக்கழகத்திற்குள் உட்புகுவதற்குக் கூட அனுமதிக்காது எமது பல்கலைக்கழக நிர்வாகம் தடை போட்டது. இதற்கு அவர்கள் தெரிவித்த காரணம் உயர்மட்ட உத்தரவு என்பதுதான்.

இப்பிரச்சினையை அனைத்து நிர் வாக மட்டத்திலும் அரசியல் ரீதியான கண்ணோட்டத்தில் பார்த்து, அரசியல் பிரச்சினையாகவே கையாண்டார்கள். ஆனால் இதை நாம் மாணவர் பிரச்சினையாகவே பார்க்கிறோம். அரசியல் பின்புலங்களும் அதன் குறுக்கீடுகளும் எமக்குத் தேவையில்லை. ஒவ்வொரு தனிநபருக்கும் தனிப்பட்ட அரசியல் பின்புலம் உண்டு. எமக்கு அதுபற்றிக் கவலையில்லை. மாணவர்கள், மாணவர்கள் என்ற ரீதியில் மட்டுமல்ல மனிதர்கள் என்ற ரீதியில் கூட நடத்தப்படவில்லை.

எனவே, அப்பிரச்சினையினூடு எமக்கு இயல்பாகவே சில வினாக்கள் எழுகின்றன. இனிவரும் காலங்களில் எவ்வாறு எமது பல்கலை மாணவர்கள் பிற பல்கலைக் கழகங்களுக்குச் செல்வது? விளையாட்டு மற்றும் கலை விழாக்களில் கலந்துகொள்ளும் போது எவ்வாறு எமது மாணவர்கள் பிற பல்கலைக்கழக விடுதிகளில் தங்குவது? மாணவர்கள் மட்டுமல்ல, விரிவுரையாளர்களும் தமது மேற்படிப்புக்களை எவ்வாறு தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களில் தொடர்வது? இதை விடவும் தற்போது தென்னி லங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் எமது தமிழ் மாணவர்களுக்கு ஏதேனும் அசம்பாவிதங்கள் நடைபெற்றால் எமது பல்கலைக்கழக நிர்வாகம் பதில் கூறுமா?

### அரசியல் பேதங்களை உருவாக்குவது ஆரோக்கியமானதல்ல

மாணவர்கள் மத்தியில் அரசியல் பேதங்களை உருவாக்குவது ஆரோக்கியமானது அல்ல. அவ்வாறாயின் எமது பல்கலைக்கழக மேல் மட்ட நிர்வாகத்தால் எமது பல்கலைக்கழக வளாகத்தினுள் இது வரை இடம்பெற்ற அரசியல் கூட்டங்கள் எவ்வாறு இடம் பெற்றன?

ஜனநாயகத்தையும் இன நல்லுறவையும் விரும்பும் நாம், எம் மக்களின் தற்போதைய நிலையினைப் பயன்படுத்தி யாரும் அரசியல் செய்ய முயல்வதை ஒருபோதும் அனுமதிக்க மாட் டோம். ஆனால் மாணவர்கள் என்ற ரீதியில் எம்முடன் உறவுப் பாலம் அமைக்க முயல்பவர்களை நாம் ஏன் ஒதுக்க வேண்டும்?

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளை நிர்வாகம் தடுத்து நிறுத்த, தென்னிலங்கை அரச ஊடகங்கள் மாணவர்களாகிய நாம் அவர்களைத் தாக்கி விரட்டியதாகச் செய்தி வெளியிட்டன. உண்மையிலேயே மீண்டும் இனங்களிடையே முறுகலை ஏற்படுத்தி அதில் அரசியல் ஆதாயம் காணும் முயற்சியாகவே நாம் இதனைப் பார்க்கிறோம்.

எது எப்படியிருப்பினும், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் யாழ். பல்கலைக்கழகத்திற்குள் நுழைய முடியாது திரும்பியதும் உதவிப்பொருள்கள் மாணவர்களுக்கு வழங்காமலும் சென்றது எமக்கு வருத்தமளிக்கின்றது. இதற்காக நாம் எமது மாணவர்கள் சார்பாக எமது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


## கண்ணீர் அஞ்சலி



*எமது வாழ்வக பொதுச் சபை அங்கத்தவர்களின் ஒருவரான இ.சிவரூபன் (பிரதித் திட்டப் பணிப்பாளர், நிக்கொட்) அவர்களின் தந்தை*

**சரவணமுத்து இராமநாதன்**

*அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த துயரடையும் அதேவேளை அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் பிள்ளைகள் மற்றும் உறவுகளோடு எம்மையும் இணைத்துக்கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைவதாக.*

*சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.*

*வாழ்வக சமூகத்தினர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# ஓ! அந்த மூன்று விவகாரங்கள்!!

இலங்கை குறித்துப் பேசும் வெளிநாடுகள், (அதாவது அவற்றின் தலைவர்கள்) வெளிநாடுகளின் ராஜ தந்திரிகள் மற்றும் மிக முக்கியமான தலைவர்களின் வாயிலிருந்து இப்போதெல்லாம் வெளிவருவது மூன்று முக்கிய தலைப்புக்களே. அவை குறித்த கருத்துக்கள், நிலைப்பாடுகள், விமர்சனங்கள் நாளாந்தம்- காலையிலும், பகலிலும், இரவிலும் என்று பல திசைகளிலிருந்தும் - குவிந்த வண்ணமாக இருக்கின்றன.

என்னடா இது, அந்தக் கருத்துக்கள் அல்லது விவகாரங்கள் என்னவென்று சொல்லாமல் இவர் இழுத்தடிக்கிறாரே என்று அங்கலாய்க்காதீர்கள்.

இலங்கையில் நீண்ட நாள் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, வன்னி மக்களின் மீள்குடியமர்வு, போர்க் குற்ற விசாரணை விவகாரம் ஆகிய மூன்றுமே இப்போது சர்வதேச மட்டத்தில் அலசப்படும் இலங்கை குறித்த முக்கிய விவகாரங்கள். அவை மூன்றையும் தவிர்த்து எமது நாட்டின் வேறு எந்தப் பிரச்சினையையும் சர்வதேச மட்டத்தில் முன்னணிக்குக் கொண்டு வர முடியாதநிலை.

ஜப்பான் நாட்டின் விசேட பிரதிநிதி யசுசி அகாஷி இலங்கைக்கு ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று வரவிருந்தார். அவரும் அரசாங்கத்தைச் சேர்ந்த தலைவர்களையும் எதிர்க் கட்சியினரையும் சந்தித்துப் பேசவிருக்கிறார். மேற்சொன்ன மூன்று விடயங்களே அவரது பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சங்களாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் (இவர் முன்னர் இலங்கையில் அமெரிக்கத் தூதராகப் பணியாற்றியவர்) இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் மூன்று முக்கிய விவகாரங்கள் தொடர்பாகவே கருத்து வெளியிட்டிருக்கிறார்.

வன்னியில் மக்களை மீளக்குடியமர்த்துவது, இலங்கையில் நியமிக்கப்பட்டுள்ள தேசிய நல்லிணக்க ஆணைக்குழு (போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுதல் என்ற கோரிக்கையினை ஈடு செய்யும் ஓர் அமைப்பு), தமிழர்களுக்குரிய அரசியல் தீர்வு என்பன குறித்து இப்போது மட்டுமன்றி அடிக்கடி ஆக்கபூர்வமான, காட்டமான கருத்துக்களை வெளிப்படுத்தி வருபவர் அவர்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், தமிழக முதல்வர் கருணாநிதிக்கு எழுதிய கடிதத்தில் - தாம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தையின்போது இலங்கைத் தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் என்பதனையும் வன்னி அகதிகள் மீள்குடியேற்றம் குறித்தும் பேசியதாக அறி வித்திருக்கிறார்.

போர்க்குற்ற விசாரணை, இலங்கையில் நியமிக்கப்பட்டுள்ள தேசிய நல்லிணக்க ஆணைக்குழு என்பன குறித்துப் பேசுவதற்கு இந்தியாவுக்கு அருகதை இல்லை என்பது பரகசியம். விடுதலைப் புலிகளைத் தோற்றகடிக்க வேண்டும் என்பதில் இலங்கை அரசுடன் இந்தியா கைகோர்த்து உழைத்தது என்பதால் போர்க்குற்றம் குறித்து இந்திய அரச பிரமுகர்கள் வாய் திறப்பதில்லை.

இப்போது வருகிறார், எப்போது வருவார் எனத் தெரிவிக்கப்பட்ட - எதிர்பார்க்கப்பட்ட - ஐக்கிய நாடு கள் சபையின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான தலைமை அதிகாரி லியன் பஸ்கோவும் பல மாத கால தாமதத்தின் பின்னர் இப்போது இலங்கை வருகிறார்.

போர்க்குற்றங்கள் குறித்து பொறுப்புக் கூற வேண்டும் என்ற நிலைப்பாட்டை இலங்கை தட்டிக் கழித்து வந்த வேளையில், அது குறித்து ஐ.நாவின் செயலாளர் நாயகம் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழுவொன்றை நியமிக்க முடிவு செய்ததை எமது நாடு விரும்பாதிருந்ததால் லியன் பஸ்கோவின் இலங்கை விஜயம் தாமதமாகி வந்தது.

இப்போது தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமித்து விட்டதால் ஐ.நா.செயலாளருக்கு ஆலோசனைக்குழு தேவையில்லை என்ற இலங்கை அரசின் வாதத்தை ஐ.நா. ஏற்றுக்கொள்ளாத நிலையில் லியன் பஸ்கோ இங்கு விஜயம் செய்கிறார்.

ஆரம்பத்தில் கூறப்பட்ட சர்வதேசப் 'பிரபல்யம்' பெற்ற மூன்று முக்கிய சமாச்சாரங்களில் ஒன்றான போர்க்குற்ற விவகாரத்தை, இலங்கையில் தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் தோற்றுவிப்பு சமப்படுத்துமா என்பதனை நேரில் ஆராய்வதும் அதன் 'பீத்தல்'களைக் கண்டறிவதுமே அவரது விஜயத்தின் நோக்கமாக இருக்கலாம். இனிமேல் தான் தெரியும் அது.

எப்படியோ, சுற்றிச் சுற்றிச் சுப்பரின் கொல்லைக்குள் என்ற பேச்சு வழக்கு வாசகம் போன்று வெளிநாட்டுத் தலைவர்கள், ராஜதந்திரிகள் இலங்கை குறித்துப் பேசுவதும், விவாதிப்பதும் இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட முக்கிய தலைப்புகளே - விவகாரங்களே!

இவை மூன்றுக்குமான தீர்வும் முடிவும் எப்போது? எத்தனை தரப்புக்கள் வந்தாலும், பேசினாலும் இப்போதைக்கு இல்லை என்பதே தெளிவாகத் தென்படுகிறது.

# தமிழர் தரப்புப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்

## ஜே.வி.பி. குழுவினரிடம் நல்லை ஆதீன முதல்வர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஜூன் 16

இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட தமிழர் தரப்புப் பிரதிநிதிகளுடனேயே அரசு பேச்சுக்களை நடத்த முன்வரவேண்டும். இதனை ஜே.வி.பி., அரசிடம் வலியுறுத்த வேண்டும் என நல்லை ஆதீன முல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையிலான குழுவினர் நேற்று மதியம் நல்லை ஆதீன முதல்வரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அப்போதே ஆதீன முதல்வர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், அனுரகுமார திஸநாயக்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான இராமலிங்கம் சந்திரசேகரன், நிமல் ரத்னநாயக்க மற்றும் கட்சி உறுப்பினர் விமுத்தி பண்டார தென்னக்கோன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைவரம், வடபகுதிக்கு வரும் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் நிலைமை ஆகியன தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் கடந்த இரண்டு நாள்களாக யாழ்ப் பாணம், கிளிநொச்சிப் பகுதி மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது கேட்டறியப்பட்ட விடயங்கள் தொடர் பாகவும் இதில் ஆராயப் பட்டது.

நேற்றுக் காலை யாழ். ஆயர் இல்லத்துக்குச் சென்ற ஜே.வி.பியின் குழுவினர் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்., கிளிநொச்சி மாவட்ட மக்களின் தற்போதைய நிலைவரம், வடபகுதியின் கரையோர மக்களின் வாழ்வாதார முயற்சிகளின் சவால்கள் மற்றும் மீள்குடியேறிய கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்களின் நிலைமை, கைதுசெய்யப்பட்ட - காணாமற் போனோரின் நிலைப்பாடுகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது.

ஜே.வி.பி. குழுவினர் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர். யாழ். ஒஸ்மானியக் கல்லூரியில் மீளக்குடியேறிய முஸ்லிம் மக்களையும் அவர்கள் சந்தித்துக் குறைநிறைகளைக் கேட்டறிந்தனர்.

மானிப்பாய், அளவெட்டி, சுன்னாகம், காரைநகர் எனப்பல்வேறு பகுதி மக்களையும் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நாம் இன, மத, மொழி கடந்து மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என அரசுக்கு அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம். ஆனால் அரசு அதனைக் கருத்தில் எடுக்கவில்லை. வடபகுதி மக்கள் கடந்த காலங்களில் பட்ட துன்பங்களையே தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றனர். எனவே, அவர்களின் அவல நிலைமையைக் கண்டறிவதற்கே வடபகுதிக்கு விஜயம் செய்தோம் - என்றார் இராமலிங்கம் சந்திரசேகரன். (50-14)

# உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரியில்;

## தொகுதிவாரியாக 70 வீதம், விகிதாசாரம் 30 வீதம்

கொழும்பு, ஜூன் 16

எதிர்வரும் ஜனவரி மாதம் இடம் பெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் புதிய தேர்தல் முறையின் கீழ் மேற்கொள்ளப்படவிருப்பதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவராகவும் குணவர்த்தன இருந்து வருவது தெரிந்ததே.

வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் முடிவுற்றதன் பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்திற்கான சீர்திருத்தங்கள் தொடர்பான சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

நாடாளுமன்றத்தின் தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டதின் பின்னர் அடுத்த வருடம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை அரசு நடத்த விரும்புகின்றது. இந்தச் சட்டமூலங்கள் சட்ட நிபுணர்களால் தயாரிக்கப்பட்டு இப்பொழுது சட்டமா அதிபரினால் ஆராயப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. தேர்தல் சீர்திருத்தங்களின் முக்கிய அம்சங்களின் படி 70 வீதமான உறுப்பினர்கள் தொகுதிவாரியாகத் தெரிவுசெய்யப்படுவார்கள். 30 வீதமானவர்கள் விகிதாசார முறைப்படி தெரிவு செய்யப்படுவார்கள் என்று அமைச்சர் கூறினார். (ப)

# மீன்பிடித் திட்டம் ஒன்றில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுகிறது சீன நிறுவனம்

கொழும்பு, ஜூன் 16

நந்திக்கடல் ஏரியில் மீன்பிடித் திட்டமொன்றில் முதலீடு செய்வதற்குச் சீன நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது. இத்தகவலை மீன்பிடி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்தவருடம் மே மாதம் நந்திக்கடல் பகுதியிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்குமிடையில் இறுதிக்கட்ட மோதல் இடம்பெற்று முடிந்தது.

நந்திக்கடல் பகுதியில் சீனாவில் பிரபல்யமான மீன் ரகம் ஒன்றை வளர்ப்பதற்குக் குறித்த சீன நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளதாம். சீன நிறுவனம் விரும்பும் மீன் வர்க்கம் மட்டுமின்றி வேறு இன மீன்களையும் வளர்க்கவும் இலங்கை அரசு விரும்புவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நந்திக்கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்கு இருந்து வரும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும்படி பாதுகாப்பு அமைச்சைத் தாம் கேட்டுக் கொள்ளவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இப்பகுதியில் பயங்கரவாத நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தமையால் மீன்பிடிக்கும் தொழில் தடைசெய்யப்பட்டிருந்தது. (ப)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 03 | 17.06.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி | : ஷஷ்டி |
| | பி.இ. 04.41 வரை |
| நட்சத்திரம் | : மகம் |
| | பி.இ. 02.43 வரை |
| சுபநேரம் | : 07.23 - 08.53 |
| ராகுகாலம் | : 01.23 - 02.53 |

# விசேட தேவை உடையோருக்கு தலா 10 ஆயிரம் ரூபா நிதியுதவி

நாவற்குழி,ஜூன்16

கொழும்பிலுள்ள அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகம், வலி.கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் உள்ள 10 விசேட தேவை உடையோ ருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் நிதியை அனுப்பி வைத்துள்ளது.

பின்வரும் பெயர், முகவரியை உடையவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அடையாள அட்டையுடன் வருகை தந்து காசோலையைப் பெற்றுமாறு பிரதேச செயலர் சி.ஏ. மோகன்ராஸ் அறிவித்துள்ளார்.

சிங்கராசா சிவகுமார் (ஊரெழு கிழக்கு, சுன்னாகம்), கற்கண்டு அமுதலிங்கம் (சர்வோதயா வீதி, ஆவரங்கால்), செல்லர் சுப்பிரமணியம் (வசந்தபுரம், இருபாலை), கதிரவேலு பற்குணசிங்கம் (பூதர்மடம், கோப்பாய் வடக்கு), பூதன் தேவராசா (சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி), நீற்றா சின்னத்தம்பி (ஊரெழு கிழக்கு, சுன்னாகம்), சுந்தரலிங்கம் செல்வரத்தினம் (ஆனந்தகானம், ஊரெழு கிழக்கு), சந்திரசேகரம் அருண்பிரசாத் (வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய் தெற்கு), கந்தசாமி கமல்ராஜ் (ஆனந்தகானம்,ஊரெழு கிழக்கு), டனிரதன் அருந்தவராணி (நலன்புரி நிலையம் யோகபுரம், உரும்பிராய்) (50-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாசமிகு சு.சண்முகசுந்தரம் (செல்லமுத்தூஸ், S.R-Tex) அவர்களின் அருமைத் தாயார்

திருமதி
**சுப்பிரமணியம் செல்லமுத்து**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி ரெக்ஸ்
157, 158 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சாந்தி ரெக்ஸ்
உரிமையாளரும்,
ஊழியர்களும்.

(C/568202)


# VISA - வீசா
## Consultancy Service

**UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,**

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

**SIC,** 734, Hospital Road, Jaffna.


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்.மேலை வண்ணை விசுவேச விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

நவாலி, ஜூன், 16

நவாலி அட்டகிரி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா இன்று புதன் முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-100)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 16

அல்லாரை அறுகம்புலம் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

ஜூன் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.கேசவன் அவர்களின் அன்புத் தந்தை

## விஜயரட்ணம்

அவர்கள் 12.06.2010 சனிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அங்கத்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகள்
யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்.
40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/568398)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாசமிகு சு.சண்முகசுந்தரம் (செல்ல முத்தூஸ், S.R-Tex) அவர் களின் அருமைத் தாயார்

திருமதி
**சுப்பிரமணியம் செல்லமுத்து**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னை Tex
இல.11, நவீனசந்தை, சாவகச்சேரி.

மம்மி சில்க்ஸ்
இல.13,நவீனசந்தை, சாவகச்சேரி.

உரிமையாளரும்,
ஊழியர்களும்.

(C 568203)

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் செல்லமுத்து



காரைநகர், பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி சுப்பிரமணியம் செல்லமுத்து 14.06.2010 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சுப்பிரமணியத்தின் (பாலத்துறை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகரத்தினம், இராஸலிங்கம், யோகேஸ்வரி, சண்முகசுந்தரம் (செல்லமுத்தூஸ், நெல்லியடி, S.R.Tex, கொழும்பு), சபாநாயகம் (செல்லமுத்தூஸ் மருந்தகம், சுன்னாகம்), இராஜேஸ்வரி (கனடா), மாகாதேவன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் சரஸ்வதி, ருக்குமணிதேவி, நாகேந்திரன், சுகந்தி, ஞானதேவி, ஏகாம்பரம் (கனடா), ஜெகதீஸ்வரி (லண்டன்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2010) புதன்கிழமை நெல்லியடி முருகமூர்த்தி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.3 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.சண்முகசுந்தரம்
(மகன்)

செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை.
தொ.பே.: 021 2263238, 0777792963.



**புதிய அதிபர் அவர்களை மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.**

எமது பாடசாலையில்23 வருடங்களுக்கு மேலாக ஆசிரியராய் , பிரதி அதிபராய் பாடசாலையின் வளர்ச்சியில் அதி உயர்அற்பணிப்புடன் பணியாற்றிய

**திரு.சு.தியாகலிங்கம்** அவர்கள்
(B.A.SP.Trd, Dip in Edu, MEd, SLPS)

பதவி உயர்வு பெற்று இப் பாடசாலையில் அதிபராகக் கடமை ஏற்பதையிட்டு மனம் மகிழ்ந்து பாராட்டி வரவேற்கின்றோம்.

யாழ் இந்து ஆரம்ப பாடசாலை,

அதிபர், மாணவர்கள்,
ப.மா.சங்கம், பா.அபி.சங்கம்
பாடசாலைச் சமூகம்

# மரணசாதன அதிகாரப் பத்திர அலுவலரால் வெளியிடப்பட வேண்டிய அறிவித்தலின் படிவம்
## மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்
## குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் 529(2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட இறந்தவரான ஆளின் மரணச் சொத்துத் தொடர்பில்,விருப்பாவணத்தை எண்பிப்பதற்கான/ மரண சாதன அதிகாரப் பத்திரத்திற்கான/மரண சாதன நிர்வாகப் பத்திரத்தின் அளிப்புக்கான/ மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களின் வழங்குகைக்கான பின்வரும் விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஒரு விருப்பாவணம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தி அல்லது இதற்கான V ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட ஆள்களுக்கு மரண சாதன அதிகாரப் பத்திரத்தின் அல்லது விரும்பாவணமொன்று இணைக்கப்பட்டோ இணைக்கப்படாமலோ மரண சாதன நிர்வாகப் பத்திரத்தின் அளிப்பிற்கென மரபுரிமையாண்மை சான்றிதழ் ஒன்றின் வழங்கலுக்கென கட்டளையொன்று ஆக்கப்படுவதற்கு ஆட்சேபனையுடைய ஆள் எவரும் 2010 ஆம் ஆண்டு ஆனி மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் (சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன்) அத்தகைய ஆட்சேபனையை எழுத்தில் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

அட்டவணை

| நிரை I | நிரை II | நிரை III | நிரை IV | நிரை V | நிரை VI |
|---|---|---|---|---|---|
| மாவட்ட நீதிமன்றம் பதிவு இலக்கம் | இறந்தவரின் பெயர் | இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா | விண்ணப்பகாரரின் பெயரும், முகவரியும் | பயனாளிகளின் அல்லது மரபுரிமையாளர்களின் பெயர்களும் இறந்தவருக்கு அவர் கொண்ட உறவு முறையும் | சம்மதமளிக்கும் மரபுரிமையாளர்கள் |
| மல்லாகம் தத்துவம் 45/10 | இந்திரகுமார் பெண் பங்கயச் செல்வி | இல்லை | 1. குருநாதன் ஸ்ரீகணநாதன் 2. பெண் செல்வமலர் பிரான்பற்று வீதி, சங்கானை | கந்தசாமி இந்திரகுமார் கணவன். | கந்தசாமி இந்திரகுமார் |

திகதி: 21.04.2010

(98519)

ஒப்பம்/ மரண சாதன அதிகாரப் பத்திர அலுவலர்,
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

## கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை 88 ஆவது அனைத்துலக கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளை நடத்தவுள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு எனக் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதியும், 4 ஆம் திகதியும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலை மாணவர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரின் சிபார்சுடன் இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியும்.

அதேவேளை கூட்டுறவுப் பணியாளர்கள், அங்கத்தவர்கள், மகளிர் குழுவினர், பாலர் பாடசாலை சிறார்கள் ஆகியோர் இப்போட்டி சம்பந்தமாகப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சுவிஸ் தூதுவர் றாத் பிலிங் அம்மையார் நேற்று யாழ். ஆயரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. தூதுவரை யாழ். ஆயரின் செயலாளர் அருட்திரு விஜின்ரஸ் அடிகள் வரவேற்பதை முதல் படத்திலும், யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை சுவிஸ் தூதுவருடன் கலந்துரையாடுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள் : தமிழினியன்)

# கிராம அலுவலர் வெற்றிடங்களுக்கு வடக்கு-கிழக்கில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்களை மீள நியமிக்குக!

## அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்16

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வெற்றிடமாகவுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு அந்த மாகாணங்களில் கடமையாற்றி ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்களை மீள நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றி ஓய்வுபெற்ற பல கிராம உத்தியோகத்தர்கள் மீள்நியமனத்தில் கடமையாற்றுவதற்கு விண்ணப்பித்துக் காத்திருக்கின்றனர். எனவே வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வெற்றிடமாகவுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு அவர்களை மீள நியமனம் வழங்கி பணிக்கமர்த்துமாறு எமது சங்கம் கேட்டுக்கொள்கின்றது. எனினும் ஏனைய மாகாணங்களிலிருந்து ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்களுக்கு இங்கு மீள் நியமனம் வழங்கிப் பணிக்கமர்த்துவதை எமது சங்கம் ஆட்சேபிக்கிறது - என்றுள்ளது. (50-14)

# வீதி அகலிப்புக்காக நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூன்16

பருத்தித்துறை வீதி அகலமாக்கல் பணிகள் இடம்பெற்றுவருவதால் மின் கம்பங்களை இடம் மாற்றும் நடவடிக்கைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை பின்வரும் இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று சுன்னாகம் மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு மற்றும் வடமராட்சி பிரதேசம் முழுவதும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (50-9)

# யாழ்.-பூநகரி படகுச்சேவை தினமும் நான்கு தடவைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்16

யாழ்ப்பாணத்துக்கும் பூநகரிக்கும் இடையிலான படகுச் சேவையின் நேர அட்டவணை வடமாகாண பொதுநிர்வாகச் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்திற்கும் பூநகரிக்குமிடையிலான படகுச் சேவை ஒருநாளைக்கு நான்கு தடவைகள் நடத்தப்படும்.

காலை 6.30 மணி, முற்பகல் 10.30 மணி, பிற்பகல் 12.30 மணி, பிற்பகல் 2.30 மணி ஆகிய நேரங்களில் யாழ்.மணியம் தோட்டத்தில் இருந்து பூநகரி மண்ணித் தலைக்கு படகுச் சேவை இடம்பெறும்.

அதேபோன்று காலை 7.30 மணி, முற்பகல் 10.30 மணி, பிற்பகல் 12.30 மணி, பிற்பகல் 3.30 மணி ஆகிய நேரங்களில் பூநகரி, மண்ணித்தலையிலிருந்து யாழ்.மணியந்தோட்டத்துக்கு படகுச் சேவை இடம்பெறும்.

யாழ்ப்பாணத்திற்கும் பூநகரிக்கும் இடையிலான படகுச் சேவை கடந்த 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-9)

# குமுதினி படகுச் சேவை இன்று வழமைக்குத் திரும்பும்?

யாழ்ப்பாணம்,ஜூன்16

குமுதினி படகுச்சேவை இன்று புதன்கிழமை வழமைக்குத் திரும்பும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

படகின் சுக்கான் கழன்று கடலில் வீழ்ந்துள்ளதால் இந்த சுக்கானை சுழியோடிகளைக் கொண்டு மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் கடும்காற்று, கடல்கொந்தளிப்பு போன்ற காரணங்களினால் கடந்த இரண்டு தினங்கள் இந்த சுக்கானை மீட்பதற்கான முயற்சிகள் பயனளிக்கவில்லை.

இந்த சுக்கான் மீட்கப்பட்டு இன்று புதன்கிழமை நண்பகலுக்கு முன்னர் குமுதினியின் சேவை வழமைக்குத் திரும்பிவிடும் என அந்த அதிகாரி நம்பிக்கை தெரிவித்தார். (50-224)




# இளைஞர், யுவதிகளுக்கான கணனிப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்16

தீவக வலயத்தில் கணனி வள நிலையத்தில் கணனி பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியில் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர், யுவதிகள் சேரமுடியும் எனவும் இதற்கு அவர்கள் கணனி வள நிலைய முகாமையாளருடன் தொடர்புகொண்டு கற்கைநெறியை மேற்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற பயிற்சிகள் தீவகத்தில் புங்குடுதீவு, நயினாதீவு நெடுந்தீவு, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, ஊர்காவற்றுறை, காரைநகர் பிரதேசங்களிலும் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் இப்பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளின் கணணிக் கற்கை நிலையங்களில் இப்பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் இளைஞர், யுவதிகள் பாடசாலைகளின் அதிபர்களுடன் தொடர்புகொண்டு பயிற்சியில் இணைந்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (50-267)

# சிகிரியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மல்லாகம் ம.வி.மாணவன் தடுப்புக் காவலில்

## விடுவிக்க நடவடிக்கை இல்லையென மாணவர்கள் கவலை

யாழ்ப்பாணம்,ஜூன்16

கல்விச் சுற்றுலா சென்றபோது சிகிரியாப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மல்லாகம் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன் கடந்த 22 நாள் களாகத் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளார். இவரை விடுவிக்க இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்த மாணவனின் சக மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

மூன்று வாரங்களுக்கு முன்னர் மல்லாகம் மகாவித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும், அதிபரும் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு தென்னிலங்கைக்குச் சென்றிருந்தனர்.

இந்தக் குழுவினர் சிகிரியாவுக்கும் சென்றனர். அப்போது அங்கு மலையில் உடைந்திருந்த கல் ஒன்றை எடுத்து குறித்த மாணவன் கீழே போட்டதாகவும், அதனைத் தொடர்ந்து அந்த மாணவன், அங்கிருந்த சிலர் கொடுத்த தகவலின் அடிப்படையில் சிகிரியாப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுத் தம்புள்ளை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வெசாக் தினத்தையொட்டி உரிய அலுவலர்கள் இல்லாமையால் இந்த மாணவனின் செயலினால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பீடு செய்ய முடியவில்லை என சிகிரியாப் பொலிஸார் தரப்பில் அப்போது கூறப்பட்டிருந்தது. எனினும் மாணவன் கைதாகி இன்றுடன் மூன்று வாரங்கள் கழிந்துவிட்டன. எனினும் அவரை விடுவிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறப்பட்டது.

இந்த மாணவன் சிறைச்சாலையிலும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை ஆசிரியர்கள் மாணவனைக் கைவிட்டு வந்த நிலையில் பெற்றோர் மாணவனை மீட்பதற்கான நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். (50-68)

# குடாநாட்டில் அனைத்துப் பாடசாலைகளிலும் நேற்று டெங்கு ஒழிப்பு சிரமதானம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்16

யாழ்.மாவட்டத்தில் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக நேற்று அனைத்துப் பாடசாலைகளிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு ஆரம்பமான சிரமதானப்பணிகள் பிற்பகல் வரை நீடித்தன.

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பரவும் இடங்களைத் துப்புரவு செய்யுமாறு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கேட்டுக்கொண்டதற்கிணங்க அனைத்துப் பாடசாலைகளிலும் ஆசிரியர்களும், மாணவர்களும் மேற்படி சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

இதன் பிரகாரம் பாடசாலைக் கட்டடம், பாடசாலை வளவு மற்றும் அதன் சுற்றுப்புறச்சூழல் என்பவற்றிலுள்ள குப்பை கூளங்கள் மற்றும் செடி, கொடிகள் என்பன மாண வர்களால் வெட்டப்பட்டு குவிக்கப்பட்டதுடன் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் உள்ளூராட்சி சபைகள் ஈடுபட்டன.

அத்துடன் இச்சிரமதானப் பணிகளை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டார். (50-16-224)

# சமாதான யாத்திரைக் குழுவினருக்கு சுட்டிபுரம் ஆலயத்திலும் வரவேற்பு

தென்மராட்சி கிழக்கு,ஜூன்16

தென்னிலங்கையில் இருந்து வட பகுதிக்கு சமாதான பாத யாத்திரையாக வந்த 20க்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் நேற்று முன்தினம் வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு விஜயம் செய்து அம்பாளை தரிசனம் செய்து அங்கு இடம்பெற்ற விசேட பூசையிலும் கலந்து கொண்டனர்.

இவர்களை வரவேற்று உபசரித்த ஆலய பிரதம குரு இவர்களுக்கான விசேட [illegible]களையும் செய்திருந்தார். இவ்வைபவத்தில் பெரும் திரளான பொது மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பின்பு இவர்களுக்கான வரவேற்பு வைபவமும் இடம்பெற்றது. இவ்வைபவத்தில் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களும், பிரதேச கிராம அலுவலர் ந.இராஜகுமாரனும் வரவேற்புரை நிகழ்த்தினர். இவர்களின் வரவுக்காக பிரதேச படைமுகாம் பொறுப்பதிகாரி மற்றும் இராணுவத்தினர், கொடிகாமம் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட்ட பொலிஸ் தரப்பினர் தமது பங்களிப்பை வழங்கியதுடன் உரிய பாதுகாப்பையும் வழங்கினர். (50- 122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து

## பதவி வெற்றிடம் -

பொது முகாமையாளர்

மேற்படி பதவிக்கு 2010.06.15 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்துடன் பின்வரும் திருத்தங்களையும் சேர்த்து வாசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

01. பொது முகாமையாளர் சம்பளத்திட்டம் : 101/5 = $\frac{12,450-16,450}{190\times10-210\times10}$ என்பதுடன்

காலத்திற்குக் காலம் சுற்றுநிருபங்கள் மூலம் வழங்கப்படும் அனைத்துப் படிகளும் எனவும்,

தகைமைகள்: என்ற பந்தியின் " அ" பகுதியில்

கூட்டுறவுச் சங்க ஊழியர் 4 ஆம் சம்பளத் திட்டப் பதவியொன்றில் என்பதை 6 ஆம் சம்பளத்திட்டப் பதவியொன்றில் எனவும்,

கூட்டுறவுச் சங்க 5 ஆம் சம்பளத்திட்டப் பதவியொன்றில் என்பதை 7 ஆம் சம்பளத்திட்டப் பதவியொன்றில் எனவும் திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

க.தேவேந்திரன்
தலைவர்
2010.06.15

(சி-568204)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
09
11
1939



மறைவு
18
05
2010

### அமரர் வீரவாகு நடராசா (உஷா நடராசா)

(சமாதான நீதிவானும் முன்னாள் மரணவிசாரணை அதிகாரியும்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை ( 17.06.2010) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 6 மணியளவில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் சபீண்டீகரண நிகழ்விலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரரது மரணச் சடங்கின்போது சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் சபீண்டீகரண அழைப்புகள் கிடைக்கப்பெறாதவர்கள் இவ்வழைப்பை ஏற்று இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின் றோம்.

'வசந்தம்'
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
021 226 4960

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## விற்பனைக்கு

இல.160, குடியேற்றத்திட்டம்,
திருநெல்வேலியில் அமைந்துள்ள 2 பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778697295, 0779037198

## தவறிவிட்டது

ஸ்ரீலோகநாதன் கோகிலதீரன் என்பவரது (870412134V) எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கடந்த 05.06.2010 சனிக்கிழமை சுழிபுரத்துக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 0773222661

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கோணாவளை லேன்,
திருநெல்வேலியில் 5 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
ஜீ. கஜந்தன்-0774239789

## விற்பனைக்கு

தரமான ஊர் தென்னை நாற்றுக்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: மனிசாறு நுங்கசரிச்சோலை,
பலாலி வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 8199, 0718475629

## கார் விற்பனைக்குண்டு

இலக்கம் 13 ஸ்ரீ 2157 வெள்ளை நிற Mitsubishi Lancer car விற்பனைக்குண்டு.
தொடர்பு:
சி.சுந்தரலிங்கம்,
இணுவில் கந்தசாமி கோயிலடி,
இணுவில் மேற்கு,
0772567260

## தவறிவிட்டது

தாழ்வுபாடு, மன்னாரைச் சேர்ந்த இதயராசன் அன்ரனி அருள்ராஜ் என்பவருடைய ஆள் அடையாள அட்டை (923262903V)பரந்தன் சந் திக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 13.06.2010 அன்று தவ றிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொ.பேயுடன் தொடர்பு கொள்ளவும் .
தொ.பே.: 021 222 6930,
0776687748

## பொது நிதி முகாமைத்துவம்

அரச உத்தியோகத்தர்களின் போட்டிப் பரீட்சை, வினைத்திறமை காண் தடைப் பரீட்சை ஆகியவற்றுக்காக பயன்படக்கூடிய நிதிப் பிரமாணங்களை உள்ளடக்கிய பொது நிதி முகாமைத்துவம் என்ற நூல் வினா – விடை வடிவில் வெளிவந்துள்ளது.
தொடர்பு: திருமதி ஜெ.கில்பேட் குணம்,
41/60, ஆஸ்பத்திரி முன் வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர்.
தொ.பே.: 0770821563

## வவுனியாவில் பதவி வெற்றிடம்

எமது கணனி நிறுவனத்துக்கு உதவிமுகாமையாளர் மற்றும் கணனி விற்பனையாளர், உதவியாளர்கள் உடன் தேவை.

தொடர்பு:

**Gateway Computer (pvt) Ltd.**
Vavuniya, Branch
0777585920

## முக்கிய அறிவித்தல்

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து)

மேற்படி வைத்தியசாலைச் சங்கத்தின் புனரமைப்பு பொதுக் கூட்டம் 26.06.2010 சனிக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் தெல்லிப்பழை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும். 2010.04.16 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் அங்கத்துவம் பெற்றவர்களை இக்கூட்டத்துக்குத் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நியமன இயக்குநர் சபை,
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

நா.தவநாதன்
தலைவர்

சு.ஏழுர்நாயகம்
செயலாளர்

க.இராதாகிருஷ்ணன்
பொருளாளர்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாசமிகு
சு.சண்முகசுந்தரம்
(செல்லமுத்தூஸ், S.R -Tex)
அவர்களின் அருமைத் தாயார்

### திருமதி சுப்பிரமணியம் செல்லமுத்து

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.16, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
13A, நவீனசந்தை, சாவகச்சேரி.

யாழ். ரெக்ஸ்
உரிமையாளரும்,
ஊழியர்களும்.

(C/568400)

## மரண அறிவித்தல்



### திருமதி இராமமூர்த்தி பொன்மாணிக்கம்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமமூர்த்தி பொன்மாணிக்கம் கடந்த 13.06.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நெல்லிவனம் - மங்களம் தம்பதியரின் பேர்த்தியும் காலஞ்சென்ற வீராச்சாமி மற்றும் ராஜம்பாள் தம்பதியரின் அன்பு மகளும் ராமமூர்த்தியின் அன்பு மனைவியும் அமரர் சிவசுப்பிரமணியம் (பெரியதம்பி), முருகானந்தம் (நடுவிலான்), சண்முகானந்தம்(சின்னையா), காளிதாஸ் (காளி), அமரர் சிவதாஸ் (சிவா), சிவகுமார் (சுகந்தன்), ஜெயக்குமார் (பாபு) ஆகியோரின் அன்புத் தாயும் மனோராணி, பிறேமகலா, ஹேமலதா, வனராணி, ஜெயா ஆகியோரின் அன்பு மாமியும் ராஜகாந்தத்தின் அன்புச் சகோதரியும் அற்புதராசாவின் அன்பு மைத்துனி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2010) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணிக்கு தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
கோண்டாவில் மேற்கு.

(99525)

தகவல்:
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### முத்துலிங்கம் அருந்தவராசா

(ஓய்வுபெற்ற லிகிதர் - பரு. நீதிமன்றம் - சக்கடத்தார்)

தொண்டைமானாறு - கொத்தியகாட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் அருந்தவராசா (ஓய்வுபெற்ற லிகிதர்) 15.06.2010 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கம் - செல்வம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும் பரமேஸ்வரியின்(பரமக்கொடி) அன்புக் கணவரும் ஸ்ரீகாந்தன், மதியழகன், ஸ்ரீமதிதேவி, சத்தியவாணி, மணிவண்ணன், மலர்விழி, மான்விழி, அமரர் இராஜராஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வதனபாஸ்கரி, தமிழ்ச்செல்வி, ஜெயதாஸ், கிருஸ்ணதாஸ் (Popular Motors உரிமையாளர்,கொழும்பு), விஜயேந்திரன், நந்தகுமார், தவலோஜினி ஆகியோரின் பாசமிகு மாமனும் கண்ணா, மது , சௌமிகா, வினோத், பிரசாந், சாமினி, சாந்தன், நிசாந்தன், அகல்யா, ராஜராஜன், தர்சன், கிருத்திகா, பிரியந்தி, கீர்த்தனா, பிரவீன், பிரணவன் ஆகியோரின் பேரனும் அபிராமி, கரணி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.06.2010) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பிற்பகல் 2 மணிக்கு தொண்டைமானாறு காட்டுப்புலம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொத்தியகாடு,
தொண்டைமானாறு,

(96634)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ஆழம் குறைந்த கடலில் இழுவைப் படகு பயன்படுத்துவதைத் தடுக்கும் பிரகடனத்தை நிறைவேற்றுக

## கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளருக்கு அமைச்சர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

கடல்வளத்தைப் பாதிக்கும் இழுவைப் படகை வடபகுதியின் ஆழம் குறைந்த கடற்பரப்பில் பயன்படுத்துவதற்கும், தங்கூசி வலையைப் பாவிப்பதற்கும் தடை விதிக்கும் பிரகடனத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கத்துக்குப் பணிப்புரை விடுத்தார்.

வடபகுதியின் கடற்றொழிலை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை பண்ணையில் புதிதாக திறந்து வைக்கப்பட்ட யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

அமைச்சர் ராஜிதசேனாரத்ன தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகள், கொழும்பிலுள்ள கடற்றொழில் ஆய்வு நிறுவனமான 'நாரா' நிறுவனப் பணிப்பாளர், தென்பகுதியின் துறைசார் பிரதிநிதிகள், யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

இதில், வடபகுதியில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் தேவைகள் கடல் வளத்தைப் பேணிப்பாதுகாக்கும் நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

சுமார் ஒருமணி நேரம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து அமைச்சர் தலைமையிலான அந்தக் குழுவினர் குருநகர் இறங்கு துறையின் அபிவிருத்தி குறித்தும் நேரில் சென்று ஆராய்ந்தனர்.

அத்துடன் குருநகர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற கடற்றொழிலாளர்களுக்கான இலங்கை வங்கியின் கடன் வழங்கல் நிகழ்விலும் அவர்கள் கலந்துகொண்டனர். அதில் கிளிநொச்சி மாவட்டத்தின் கடற்றொழிலாளர்கள் உள்ளடங்கலாக 60 பேருக்கு கடன்வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முல்லைத் தீவு மாவட்டக் கடற்றொழில் நிலைமைகளை ஆராய்வதற்கு அமைச்சர், பிரதி அமைச்சர் ஆகியோர் அங்கு விஜயம் செய்தனர்.

(50-14)



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜேர்மன் தூதுவர் ஜென்ஸ் புளொட்னர் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடுவதையும், அதில் தூதுவரின் பாரியாரும் பங்கேற்றிருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்:தமிழினியன்)*

# மருத்துவ மாது மாணவிகள் பிரச்சினை; சுகாதார அமைச்சரின் கவனத்துக்கு

## பதிலை எதிர்பார்ப்பதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

குடும்ப நல மருத்துவ மாது பயிற்சியைத் தொடரும் மாணவர்களின் பிரச்சினை தொடர்பாக சுகாதார அமைச்சருக்கு அறிவித்துள்ளேன். அவரிடமிருந்து பதிலை தற்போது எதிர்பார்த்திருக்கிறேன்.

இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்.தாதியர் கல்லூரியின் குடும்பநல மருத்துவ மாது பயிற்சியைத் தொடரும் மாணவிகளின் பிரச்சினை தொடர்பாகக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாணவிகள் தமது பிரச்சினை தொடர்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமையே எழுத்து மூலம் எனக்கு அறியத்தந்தனர். அதற்கு முன்னர் இவ்வாறு ஒரு பிரச்சினை உள்ளது என்று எனக்குத்தெரியாது. தெரிந்திருந்தால் எமது மட்டத்திலேயே அதற்கான தீர்வைக் கண்டிருக்க முடிந்திருக்கும். மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்ததன் காரணமாக அங்கிருந்து எனக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. இன்று (நேற்று) பிற்பகல் 2 மணிக்கு நான் விசாரணைக்கு செல்லவேண்டியிருக்கிறது.

சுகாதார அமைச்சரிடமிருந்து பதிலை எதிர்பார்த்திருக்கிறேன். அவரது பதிலைப் பெற்றுக் கொண்டே மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைக்கு சமுகமளிக்கவுள்ளேன். மாணவிகளால் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் அந்த பெண் விரிவுரையாளர் துறைசார்மிக்க அனுபவசாலியாவார். அவரின் மாணவனாக நானும் இருந்திருக்கிறேன். இன்றைய காலத்தில் மாணவர் பருவத்திலுள்ளவர்களின் மனநிலை வித்தியாசமானது. பழைய காலத்து நிலைமை போன்று இப்போது இல்லை என்றார்.

இதே வேளை- சுகாதார அமைச்சிடமிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு எவ்விதமான பதிலும் கிடைக்கப்பெறாததால் நேற்று பிற்பகல் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற விசாரணையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை எனக் கூறப்பட்டது.

(50-14)

# டெங்கு நோய் அறிகுறி காணப்படுபவர்கள் உடனடியாகத் தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்க

## சுகாதாரப் பகுதியினர் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

கொழும்புத்துறை, ஜூன் 16

டெங்கு நோய்க்குரிய அறிகுறி காணப்படுபவர்கள் தாமதிக்காமல் உடனடியாகத் தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டு வருகின்றது. யாழ்.மாநகர சபையினரும், சுகாதாரத் திணைக்களத்தினரும் இந்த விழிப்புணர்வு பிரசாரத்தை பொது மக்கள் கூடும் இடங்களில் மேற்கொண்டு வருகின்றனர்.

டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளமையாலும் அதனால் மரணம் ஏற்படும் சம்பவங்கள் இடம்பெறுவதாலும் இந்த அறிவிப்பு விடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபை சுகாதாரப் பகுதியால் கடந்த 14 ஆம் திகதி முதல் ஒருவார காலத்திற்கு விசேட டெங்கு ஒழிப்புத் திட்டச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் ஒலிபெருக்கிகள் வழியாக டெங்கு ஒழிப்பு தொடர்பான அறிவுறுத்தல்களும் செயற்பாட்டுத் திட்டங்களும் விழிப்புணர்வு ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின் றன.

பாடசாலைகள், அலுவலகங்கள், பொது இடங்கள், வீட்டு வெற்றுக்காணிகள் என்பவற்றை சுத்தமாக வைத்திருக்குமாறும், குப்பை கூழங்களை புதைத்தோ, அழித்தோவிடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறுமாதப் பகுதியில் பல உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளதுடன் 5ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

மக்கள் சுற்றுச் சுழலை துப்புரவாக வைத்துள்ளார்களா என்று அவதானிக்க சுகாதாரப் பகுதி ஊழியர்கள் வீடுவீடாக வந்து அவதானித்துள்ளனர். சூழல் துப்புரவின்றிக் காணப்படும் வீட்டு உரிமையாளர்களுக்கு 25ஆயிரம் ரூபா அபராதம் அல்லது 6 மாத சிறைத் தண்டனை விதிக்க நேரிடும் என்றும் அறிவுறுத்தப்படுகின்றது.

சுகாதாரப்பகுதியினர் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(50-135-224)

# வீதியோரப் பற்றைகளை அழிக்க புதிய புல்வெட்டும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 16

பிரதான வீதிகளின் இரு மருங்கிலும் படர்ந்துள்ள புற்கள், பற்றைகள் என்பன வெட்டி அகற்றப்படவுள்ளன.

இந்தப் புற்கள், பற்றைகளை வெட்டி அகற்றுவதற்கு நான்கு புல்வெட்டும் இயந்திரங்கள் எடுத்துவரப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தப் புல்வெட்டும் இயந்திரங்களைப் பயன்படுத்தி வீதியோரங்களில் படர்ந்திருக்கும் பற்றைகள், புற்கள் என்பன வெட்டி அழிக்கப்படவுள்ளன.

குடாநாட்டின் பல பிரதான வீதியோரங்களில் பற்றைகள் அடர்ந்து வளர்ந்து காணப்படுகின்றன. இவற்றினால் போக்குவரத்துக்குச் சிரமம் ஏற்படுவதோடு வாகன விபத்துக்களும் இடம்பெறுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(50-224)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## லிப்ற் - 2 திட்டத்துக்கு கிராமங்கள் தெரிவு

'கெயார்' நிறுவனத்தின் அனுசரணையுடனும் 'சீடா' நிறுவனத்தின் நிதியுதவியுடனும் வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் லிப்ற்- 2 திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

பின்வரும் கிராம சேவையாளர் பிரிவும், திட்ட இலக்கு கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கோப்பாய் தெற்கு (இராமநாதன் கலட்டி), உரும்பிராய் மேற்கு (அன்னுங்கை, சோழன் தோட்டம், சிவகுலவீதி), புத்தூர் கிழக்கு(சொக்கத்திடல்),அச்செழு (வேவிபுரம், அச்சுவேலி மேற்கு - செல்வநாயகபுரம், அச்சுவேலி தெற்கு - கரதடி, மாவடி, புத்தூர் வடக்கு - மந்திரி மலை, வேம்பாபுலம்),

இக்கிராமங்களில் சமூகமட்ட அமைப்புக்களின் ஊடாக பொது மக்களுடனான கலந்துரையாடல் இடம் பெற்று வருகிறது. அவர்களின் முழுமையான பங்குபற்றலுடன் பயனாளிகள் தெரிவும், சமூக முன்னெடுத்தல் குழுக்களை உருவாக்கும் நிகழ்வுகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.

பிரதேச செயலரின் வழி நடத்தலின் கீழ் கிராம சேவகர், சமுர்த்தி முகாமையாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவைகள் உத்தியோகத்தர் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.(50-121)



டெங்குநோயைக் கட்டுபடுத்துவதற்காக யாழ்.மாவட்ட [illegible] நேற்று இடம்பெற்ற சிரமதானப் பணியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பாடசாலை வளாகம், சுற்றாடல் என்பவற்றில் மாணவர்கள் சிரமதானத்தில் ஈடுபட்டுள்ளதைப் படங்களில் காணலாம். *(படங்கள்: தமிழினியன், சுகந்தன், நந்தன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதேச டெங்கு கட்டுப்பாட்டுக் குழுவின் கலந்துரையாடல் அண்மையில் வேலணைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அருணா புண்ணியமூர்த்தி உரையாற்றுவதையும், வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர், வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் ஆகியோர் நிகழ்வில் அமர்ந்திருப்பதையும், டெங்கு நுளம்புப் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்துதல் சம்பந்தமான விளக்கத்தினை சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பொறுப்பதிகாரி எஸ். சச்சிதானந்தம் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: லக்ஸ்மன்)*


**தவறிவிட்டது**

தருமபுரம், கிளிநொச்சி எனும் முகவரியுடைய தேவதாஸ் ஜெயசீலி என்பவருடைய தே. அ.அட்டை (895732729V) கோயில் வீதியில் தவறியுள்ளது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தேவதாஸ் ஜெயசீலி, கருணா நிலையம் (அருள் ஆச்சிரமம் முன்பாக), 16/1, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P 0213211096 [99509]

**வீடு வாடகைக்குத் தேவை**

கச்சேரி , நல்லூர்ப் பகுதியில் மாநகர சபை எல்லைக்குள் சிறிய குடும்பத்தினர் வசிப்பதற்கு வாடகைக்கு வீடு தேவை.

தொடர்பு:- 0776510174 (99514)


# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா



காளிகோயிலடி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா கடந்த (11. 06. 2010) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் பாக்கியம், தங்கம்மா, முத்துச்சாமி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் செல்லத்துரை காலஞ்சென்ற நடராசா மற்றும் முத்தையா (கனடா), காலஞ்சென்ற திருநாவுக்கரசு (K.T அரசு) ஆகியோரின் மைத்துனியும் கந்தசாமி, கனகேஸ்வரி, கிருபாசக்தி, கமலேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற நவமலர் , மங்களேஸ்வரி, கனகரத்தினம், குகதாசன் (பஹரேன்), இராஜலிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் மாமியும் மதுரா, இராகுலன் (பிரான்ஸ்), திருச்செந்தூரன் (லண்டன்), திருமாலினி, துவாரகா, ஸோபிகா, தஷிந்தன் (பிரான்ஸ்), திருமகள், மயூரன்(பஹரேன்), ஹோவர்த்தனன் (டோகா), மாதவன், கலைமகள், கௌதமன் (டென்மார்க்), சஞ்சீவன் (டென்மார்க்), மீரா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2010) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

காளிகோயிலடி,உடுவில், சுன்னாகம்.
T.P.0212240997 (99510)

# சமூக சேவைத் திணைக்களம் மலசலகூடம் அமைக்க உதவி

நாவற்குழி, ஜூன் 16

வடமாகாண சமூக சேவைத் திணைக்களம் ஊனமுற்ற நிலையிலுள்ள வறிய குடும்பங்களில் அல்லது பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் சிலவற்றுக்கு மலசல கூட வசதியை ஏற்படுத்தும் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

பிரதேச செயலகப் பிரிவுகளில் பயனாளிகள் தெரிவைச் சமூக சேவைகள் அதிகாரிகள் மேற்கொண்டு முடித்துள்ளனர்.

மாகாண விசேட நிதித் திட்டத்தின் கீழ் தலா ஒருலட்சம் ரூபா கொடுப்பனவு மலசலகூடம் அமைப்பதற்கென 3 கட்டங்களாக வழங்கப்படவுள்ளது.

மலசலகூடம் இல்லாத சொந்தக் காணியை உடைய வறியவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளே இந்நிதியைப் பெறவுள்ளனர். (50-121)


**AIR INDIA EXPRESS**
குறைந்த கட்டணத்தில்!

| | செல்ல மட்டும் | சென்று திரும்ப |
|---|---|---|
| சென்னை | Rs. 6,340 /- | Rs. 12,538/- |
| திருச்சி | Rs. 6,940/- | Rs. 14,055/- |

• 37Kg பொதிகள் அனுமதிக்கப்படும்




15 அல்லது அதற்கு மேல் குழுவினராக செல்பவர்களுக்கு விசேட விலையில்.

air·india express

www.airindiaexpress.in

2010ஜுன் 17ம் திகதி திறக்கப்படவுள்ளது
The World of Hayleys Showroom

இல.47 14/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 2221310


# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 655 திகதி 14-06-2010

வெற்றி எண்கள்

**16 37 38 48 H** (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 22,766,350/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 22,766,350/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 2,000/= | 26,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 387 | 1,000/= | 387,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 644 | 1,000/= | 644,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15346 | 60/= | 920,760/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7212 | 40/= | 288,480/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 180711 | 20/= | 3,614,220/= |
| | | மொத்தம் | ரூ. 6,680,460/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 ஐந்தும் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 600109294-1-35 |
| நுவரேலியா | 600109440-1-36 |
| குருநாகல் | 600111627-1-32 |
| கம்பஹா | 600104689-1-29 |
| திருகோணமலை | 600100527-1-15 |
| யாழ்ப்பாணம் | 600107669-1-41 |
| புத்தளம் | 600111891-1-46 |
| மாத்தளை | 600105631-1-27 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,080,460/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 23,254,540/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2010 ஜுன் 17 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

# கொவிசெத

## உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **759**
சீட்டிழுப்பு திகதி **2010.06.14**

எழுத்து: **D**

வெற்றி இலக்கங்கள்: **29 35 48 55**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 17,752,392.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 11 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 293 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 602 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 50/= | 14336 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8068 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 204236 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 32169 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,175,620.00


அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு **ரூபா. 18,245,301.60**

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் சிவலிங்கம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவலிங்கம் 13.06.2010 ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார்.

அன்னார் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் கோபிதரன், சர்மினி, கம்சாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் கணேசலிங்கம், மனோன்மணி, மகாலிங்கம், இராகினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மங்கையர்க்கரசி, சசிகலா, இராசேந்திரம், தேவகுமாரி, இரத்தினமூர்த்தி, சிவயோகராணி, சந்திரவதனி, சிவலோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே.: 0212227819

தாவடி தெற்கு,
கொக்குவில். (99516)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையாகத் தூங்கினால் குழந்தைகள் படுசுட்டிகளாக வருவார்கள்



தினசரி முறையாகத் தூங்கும் பழக்கம்உடைய குழந்தைகள் படுசுட்டிகளாக விளங்குகின்றனர் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள ஸ்ரீ இன்டர்நேஷனல் என்ற ஆராய்ச்சி நிறுவனம் 8 ஆயிரம் குழந்தைகளிடம் இது குறித்து ஆய்வு மேற்கொண்டது.

ஆய்வுக்கு தலைமை வகித்த டாக்டர் எரிகா கெய்லர் கூறியதாவது: ஆய்வு மேற்கொள்ளப்பட்ட குழந்தைகள் 9 மாத குழந்தைகளாக இருந்தபோதிலிருந்து எவ்வாறு தூங்குகின்றன என்பது குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

அதே குழந்தைகளுக்கு 4 வயதான பின்பும் விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

தினசரி இரவு சீக்கிரமே தூங்கச் செல்வதுடன் 11 மணி நேரம் தூங்கும் குழந்தைகள், சொல்வதை விரைவாகப் புரிந்து கொள்ளுதல், மொழிகளை எளிதாகக் கற்றுக் கொள்ளுதல், கணிதத்தில் புலியாக விளங்குதல் போன்றவற்றில் படுசுட்டிகளாக விளங்குகின்றன.

குறித்த நேரத்தில் தூங்கச் செல்லாததுடன், 11 மணி நேரத்துக்கும் குறைவாக தூங்கும் குழந்தைகள் அவ்வளவு சுட்டிகளாக விளங்காததும் ஆய்வில் தெரியவந்துள்ளது.


எனவே, தினசரி இரவு சீக்கிரமே குழந்தைகளைத் தூங்கச் செய்வதன் மூலம் அவர்களுக்குத் தேவையான அளவு தூக்கத்தைப் பெற்றோர்கள் உறுதி செய்ய வேண்டும்.

தூங்குவதற்கு முன் குழந்தைகளுடன் உரையாடுவது, கதைகள் சொல்வது ஆகியவை பயனுள்ளதாக அமையும் என்றார்.

குழந்தைகளைச் சீக்கிரமே தூங்கச் செய்ய வேண்டும் என்பதையே இதற்கு முன்னைய ஆய்வுகளும் வலியுறுத்தின என்பது குறிப்பிடத்தக்கது.

தரு.

# 350 ஆண்டுகளுக்கு முன்பே செவ்வாயில் தண்ணீர்



ஹலோ ரொபோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் ஆய்வின் படி 350 கோடி ஆண்டுகளுக்கு முன்பே செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

அதன் வடக்கு துருவத்தில், அட்லாண்டிக் கடல் அளவு தண்ணீர் இருக்கிறது. இது பூமியில் உள்ள அளவுக்கு சமமானதாகும்.

செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் உள்ளதா, இல்லையா என்ற சர்ச்சை பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இதுகுறித்து விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஹலோ ரொபோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் வெளியிட்ட செவ்வாய்க் கிரகத்தின் படங்களை வைத்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

தவிர, ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்க செயற்கைகோள் வெளியிட்ட தகவல்கள் மூலமும் ஆராய்ச்சி செய்தனர்.

செவ்வாய்க்கிரகத்தில் 54 ஆறுகளின் டெல்டா படுகைகள் உள்ளன. இதனால் அங்கு ஆறுகள் உற்பத்தியாகி ஓடிக்கொண்டிருக்க வாய்ப்பு உள்ளது என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(நன்றி: தொழில்நுட்ப இணையம்).

# இராட்சத கோழி முட்டை




வீட்டில் வளர்க்கப்பட்ட ஒரு கோழி இராட்சத முட்டை ஒன்றை இட்டுள்ளது. ஜோர்ஜியாவில் இந்த அதிசய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முர்மான் மொடெபாட்ஸா என்பவர் தம் வீட்டில் வளர்த்து வந்த கோழியே இந்த இராட்சத முட்டையை இட்டுள்ளது.

முர்மானின் குடும்பத்தினர் இந்த இராட்ச முட்டையை கின்னஸ் புத்தகத்தில் பதிவதற்காகக் கையளித்துள்ளனர்.

# பெண்ணாக இருந்து ஆணாக மாறும் மீன்



ஏஞ்சல் என்று அழக்கப்படும் ஒரு வகை மீன், பெண்ணாக இருந்து ஆணாக மாறுகிறது!. ஆனால் இம்மாற்றம் ஒரு மீன் தான் விரும்பியவுடன் நடைபெறுவதில்லை. இந்த மாற்றங்கள் சில பிரத்யேகமானகாரணங்களுக்காக நிகழ்கிறது!

இந்த ஏஞ்சல்வகை மீன்கள் குழுக்களாக வாழும். ஒவ்வொரு குழுவிலும் ஒரு ஆண் மீனும் மற்றும் நான்கு பெண் மீன்கள் இருக்கும்.

ஆண் ஏஞ்சல் மீன் மட்டுமே திடகாத்திரமானதும், வலிமை மிக்கதுமாக இருக்கும். ஆண் மீன்தான் அங்குள்ள மற்ற பெண் மீன்களுக்கு முழுப் பாதுகாப்பையும் வழங்குகிறது.




அக்குழுவிற்கு காவலாளி. எப்பொழுது அந்த ஆண் மீன் இறந்து விடுகிறதோ அக்குழுவிற்கு ஒரு காவலாளி தேவைப்படுகிறார். அப்பொழுது அங்குள்ள பெண் மீன்களில் பெரிய உருவமுடைய மீன் தன்னுடைய உருவத்தை மாற்றிக்கொள்ளத் துவங்குகிறது.

முதலில் தன் உருவத்தை மிகப் பெரிதாக வளர்த்துக் கொள்ள ஆரம்பிக்கிறது.

பிறகு ஒரு வாரத்தில், அப்பெண்மீன் தன் நிறத்தை மஞ்சள் கலரில் இருந்து நீலக் கலருக்கு மற்றிக் கொள்கிறது, மெதுமெதுவாக அந்தப் பெண்மீன் தன் நடவடிக்கைகளை ஆண் மீனைப்போல் மாற்றிக் கொள்கிறது.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு அதன் உடலில் கருப்புக் கோடுகள் உருவாகிறது.

இம்மாற்றம் அந்த மீன் தற்பொழுது முழு ஆணாக மாறிவிட்டதைச் சுட்டிக் காட்டுகிறது.

# இசையை இரசித்தால் இதயத்திற்கு நல்லது



எமக்குப் பிடித்த இசையை ஆழ்ந்து அனுபவித்துக் கேட்டு ரசிப்பது; உடற்பயிற்சியும், மருந்துகளும் அளிக்கும் அதே நன்மையை எமது இதயத்திற்கு அளிக்கும். மனிதர்கள் தங்களுக்கு பிடித்தமான இசையை இரசிக்கும்போது அவர்களின் இரத்தக் குழாய்கள் விரிவடைகின்றன. இதனால் இரத்த ஓட்டம் நன்றாக நடைபெறும். இரத்தத் தேக்கம் போன்றவை இல்லாத காரணத்தினால் மாரடைப்பு, பக்கவாதம் போன்ற ஆபத்துக்கள் குறைகின்றன.

சா.சிந்துஜா, கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துக்கென பண்ணையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியை வைபவரீதியாகத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்விற்கு விருந்தினர்களாகக் கலந்துகொண்டவர்கள் மாலை அணிவித்து அழைத்துவரப்படுவதனை முதல் படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜிதசேனாரத்ன நாடாவைவெட்டிப் புதிய திணைக்கள கட்டடத்தினை திறந்துவைப்பதை இரண்டாவது படத்திலும், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள யாழ்.மாவட்டப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி வி.மகேஸ்வரன், பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே, அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன ஆகியோர் உரை நிகழ்த்துவதை அடுத்துள்ள ஐந்து படங்களிலும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

*(படங்கள்: உமா)*


## கணனி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P-4 Computer, Monitors மற்றும் கணனிப் பொருள் என்பன உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு. (விலை - 13250/=மட்டுமே)

தொடர்பு: Sky Computer System
162, Main street, Jaffna.
(சென்.சாள்ஸ் பாடசாலைக்கு அருகில்)
T.P 021 222 1417

## வீடு வாடகைக்குத் தேவை

பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணி புரிபவருக்கு (சிறிய குடும்பம்) அந்தச் சூழலை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு: 0718474113

## விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணத்தில் Hotel/Restaurant/Cool Bar இற்கும் பாவிக்கக்கூடிய கதிரை, மேசைகள், (Damro Design), Freezer, Digital Scale மிகக் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம்.
தொடர்புக்கு: 0771629806

## காணி விற்பனைக்கு

யாழ்.ஈச்சமோட்டை வீதி, சுண்டுக் குளியில் 3 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779968568

## புறொயிலர் விற்பனைக்கு

உடன் சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் கிலோ 480/=. குமரன்பாம், இல. 229, பிறவுண் வீதி, (நரியன்குண்டுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (புதன், சனி, ஞாயிறு மட்டும்).

## காணி விற்பனைக்கு

இல.43, அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு சுன்னாகத்தில் 8 பரப்பு வெறுங் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவோ, தோட்டம் செய்யவோ உகந்தது.
தொடர்புக்கு: 0714102174/ 0771622770

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No-1 தரமான Broiler கோழிக்குஞ்சுகள் 21.06.2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசு ஒழுங்கை, நல்லூர். T.P 0212226944
சூட்டி பாம்- வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம். T.P 0213216290


## சுயதொழில் கொடுப்பனவு

நாவற்குழி, ஜூன் 16

வலி.கிழக்கு-கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சுயதொழில் கொடுப்பனவின் இரண்டாம் கட்டமாக இருபாலை தெற்கு, புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த நட்ராசா செல்லம்மா என்பவருக்குரிய 7ஆயிரத்து 500 ரூபா நிதி கிடைக்கப் பெற்றுள்ளது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள இந்நிதியைப் பெற உரிய பயனாளியை சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(50-121)

## ஊனமுற்றோருக்கு சக்கர நாற்காலிகள்

நாவற்குழி, ஜூன் 16

யாழ்.மாவட்டச் செயலகம் சக்கர நாற்காலி தேவைப்படும் ஊனமுற்றோரின் விவரங்களை மிக அண்மையில் பிரதேச செயலர்களிடம் கோரிப் பெற்றது.

இதனடிப்படையில் 55 சக்கர நாற்காலிகளை ஊனமுற்றோரின் பாவனைக்கென வழங்கி உள்ளது.

(50-121)

## Calling for Tender - Teaching Hospital, Jaffna.

### Construction of 9,000 Litre Overhead Water Tank

1. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tender for *construction of 9,000 Litre Overhead Water Tank, T.H.,* Jaffna up to 10.00am on 24.06.2010. Tender form may be collected from Director, TH, Jaffna up to 19.06.2010 on payment on non refundable deposit of Rs. 1,500/-
2. Tender will be opened immediately after closing, at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenders or their authorized representative are requested to be present at the opening of Tenders.
3. Tender forms are issued only to contractors, who have a valid registration in Grade M7 and above in the field of Building Constructions and other Institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).
4. Sealed Tender may be dispatched either by registered post or be directly handed over to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 21.06.2010.
5. Tender Document may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.
6. For further details please contact Hospital Secretary, T.H., Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital, Jaffna.**
**Copy to: CECB, T H, Jaffna.**


GRATE OPPORTUNITY
TO GO ABROAD



# London & Europe

*spot Admission to London Meet college principals on Saturday 19th June @ 9.00 am onward......*

Student VISA

All Payments After VISA

*NO Need IELTS*

*College Payment, Embassy Fee, Sponsor Arrangement*

## Spot Admission to UK

சனிக்கிழமை (19.06.2010) காலை 9 மணி

யாழ்.மாணவ மாணவிகளின் நலன் கருதி....

- ★*London*இல் இருந்து நேரடியாக யாழ்.மாநகரில் கல்லூரி அதிபர்களை சந்திக்கும் வாய்ப்பு.
- ★கல்லூரிக்கான அனுமதி உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
- ★கல்லூரி சம்பந்தமான சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளமுடியும்.
- ★நீங்கள் விரும்பும் பாடநெறியைத் தெரிவுசெய்து கொள்வதற்கு அரிய வாய்ப்பு.

★London School of Management
★Regent College
College Principals: Dr.Anton, Miss.Kakent

All "A" Grade

தற்போது உள்ள உங்களின் ஆரம்ப ஆங்கில அறிவுடனே London சென்று உயர் கல்வியை தொடர்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு

- ★வெளிநாட்டு அதிபர்களை சந்தித்து உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
- ★உங்களின் கல்வி மற்றும் ஏனைய சான்றிதழ்கள் இருப்பின் கொண்டுவரவும்.
- ★அனுமதிகளை எமது யாழ். காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.
- ★பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்
- ★பதிவுகள் முற்றிலும் இலவசம்

UK Students Visa பெற்றுக்கொள்ள IELTS தேவையில்லை

இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.

*15 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த*

**அனி இன்டர்நேஷனல் எடியுகேஷன் கன்சல்டன்ட் சர்விஸ்**
269/3, பலாலி றோட், யாழ்ப்பாணம்.
Tel: 0214921831, Tele/Fax: 0214921832, Hotline:0772949007/0772949011


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) A, B, C, D என்பவற்றைப் பெயரிடுக.

A) ..........................................

B) ..........................................

C) ..........................................

D) ..........................................

2) கலம் E எவ்வாறு அழைக்கப்படும்?

..........................................

3) மேலே உள்ள கட்டமைப்புக்களால் சுரக்கப்படும் இரு ஓமோன்களைப் பெயரிடுக.

..........................................

4) மேலே கூறிய ஓமோன்களால் ஊக்குவிக்கப்படும் கருப்பை அவத்தைகள் எவை?

..........................................

B) 1) குருதி நிறப்பொருள் என்பதால் யாது விளங்குகிறீர்?

..........................................

2) பின்வரும் அங்கிக் கூட்டங்களில் உள்ள குருதி நிறப்பொருட்களைத் தருக.

1. அனலிடா: ..........................................
2. கிறஸ்ரேசியா: ..........................................
3. அம்பிபியா: ..........................................
4. ஆவேஸ்: ..........................................
5. மமலியா: ..........................................

3) ஈமோகுளோபின் ஒரு மூலக்கூறுடன் எத்தனை ஒட்சிசன் மூலக்கூறுகள் இணையும்?

..........................................

4) சுவாச நஞ்சாகக் கருதப்படும் ஒரு வாயுவைத் தருக.

..........................................

C) 1) வன்கூட்டின் பிரதான தொழில் என்ன?

..........................................


2) விலங்கு இராச்சியத்தில் காணப்படும் வன்கூட்டு வகைகளைப் பெயரிட்டு அவை காணப்படும் விலங்குக் கணங்களைப் பெயரிடுக.

| வன்கூடு | கணம் |
|---|---|
| 1. .................... | .................... |
| 2. .................... | .................... |
| 3. .................... | .................... |

3) பின்வரும் விலங்குகளின் வன்கூட்டில் காணப்படும் இரசாயனப் பதார்த்தத்தைப் பெயரிடுக.

1. **பூச்சிகள்:** ..........................................
2. **கசியிழைய மீன்கள்:** ..........................................

D) மனித உடலில் உள்ள முழு வரித்தசை ஒன்றின் குறுக்குவெட்டுமுக அமைப்பு காட்டப்பட்டுள்ளது.




1) A-G வரை பெயரிடுக.

A) ..........................................

B) ..........................................

C) ..........................................

D) ..........................................

E) ..........................................

F) ..........................................

G) ..........................................

2) வரித்தசையின் கட்டமைப்பு அலகு யாது?

..........................................

3) தசையை என்புடன் இணைக்கும் அமைப்பைப் பெயரிடுக.

..........................................

4) வரித்தசை, மழமழப்பான தசையில் இருந்து வேறுபடும் இரு கட்டமைப்பு வேறுபாடுகளைத் தருக.

| வரித்தசை | மழமழப்புத்தசை |
|---|---|
| 1. .................... | .................... |
| 2. .................... | .................... |

04. A) 1) பீடை என்றால் என்ன?

..........................................

..........................................

2) பீடைக்கட்டுப்பாட்டு முறையைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை?

..........................................

..........................................

3) இலங்கையில் பயன்படுத்தப்படும் பீடைக்கட்டுப்பாட்டு முறைகள் எவை?

..........................................

..........................................

4) மேற்கூறிய முறைகளுள் பாரம்பரியமாகப் பயன்படுத்தும் முறைகள் 5 தருக.

..........................................

..........................................

B) 1) நீர் கற்றவற்றுள் தென்னையைத் தாக்கும் பீடைகள் உள்ளடக்கப்படும் வருணங்கள் எவை?

..........................................

2) இவ்வருணப் பீடைகளுள் நிறைவுடலியில் சேதத்தை ஏற்படுத்துபவற்றைப் பெயரிடுக.

..........................................

..........................................

3) இப்பீடைகளுள் குடம்பியால் சேதத்தை ஏற்படுத்துபவற்றைப் பெயரிடுக.

..........................................

4) தென்னோலைச் சுரங்கம் தோண்டியைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணியைப் பெயரிடுக.

..........................................

C) 1) நுண்ணங்கிகளின் பருமனை அளவிடப் பயன்படுத்தும் இரு அலகுகளும் எவை?

..........................................

2) நோயை ஏற்படுத்தும் பிரதான நுண்ணங்கிக் கூட்டங்கள் எவை?

..........................................

3) பொதுமைப்பாடடைந்த பக்ரீரியாக் கலம் ஒன்றை வரைந்து பகுதிகளைக் குறிக்குக.

D) 1) ஆய்வுகூடத்தில் பின்வரும் நுண்ணங்கிக் கூட்டங்களை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் வளர்ப்பூடகங்களைப் பெயரிடுக.

1. பக்ரீரியா: ..........................................
2. பங்கசு: ..........................................

2) மேற்கூறிய வளர்ப்பு ஊடகங்களை ஆய்வுகூடத்தில் தயாரிக்கும்போது பயன்படுத்தப்பட்ட கிருமியழித்தல் முறைகளையும் அவற்றுக்குரிய உபகரணம், நேர அளவு, வெப்பநிலை என்பவற்றையும் தருக.

| முறை | உபகரணம் | நேர அளவு | வெப்பநிலை |
|---|---|---|---|
| 1. .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |
| 2. .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |

3) நகரசபை நீர் சுத்திகரிப்புச் செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் 3 பிரதான படிகளையும் ஒவ்வொரு படியில் நிகழும் முக்கிய பங்கினையும் தருக.

| பிரதான படிகள் | முக்கிய பங்கு |
|---|---|
| 1. .................... | .................... |
| 2. .................... | .................... |
| 3. .................... | .................... |

## கட்டுரை வினாக்கள்

விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01. சிறுநீரகத்தின் மொத்தக் கட்டமைப்பை விவரித்து சிறுநீர் உற்பத்திப் படிமுறைகளையும் தருக.

02. 1) உணவு பழுதடையும்போது ஏற்படும் மாற்றங்களைத் தருக.
2) உணவு பழுதடைதலில் இருந்து பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் முறைகளையும், ஒவ்வொரு முறையிலும் உள்ள தத்துவத்தையும், ஒவ்வொரு முறைக்கும் பொருத்தமான உதாரணங்களையும் தருக.

03. a) மெண்டலின் விதிகளைக் கூறுவதுடன், மெண்டலின் விகிதங்களையும் விளக்குக.
b) ஊதாநிறப் பூக்களையும் நீண்ட மகரந்த மணிகளையும் உருவாக்கும் அவரைத் தாவரம் ஒன்று, வெண்ணிறப் பூக்களையும் வட்ட மகரந்தமணிகளையும் உருவாக்கும் அவரைத் தாவரத்துடன் இனங்கலக்கப்பட்டபோது உருவாகிய தாவரங்கள் எல்லாம் ($F_1$ சந்ததி) ஊதாநிறப் பூக்களையும் நீண்ட மகரந்த மணிகளையும் உடையதாகக் காணப்பட்டன. $F_1$ சந்ததிகட்கிடையே கலப்புச்செய்த போது பின்வரும் முடிவுகள் கிடைத்தன.

| | | |
|---|---|---|
| ஊதாநிறம் நீண்டது | - | 4,830 |
| ஊதாநிற வட்டம் | - | 392 |
| வெண்ணிறம் நீண்டது | - | 390 |
| வெண்ணிற வட்டம் | - | 4,832 |

இம் முடிவுகளை விளக்குக.

04. a) இளம் இருவித்திலைத் தாவரத்தின் வேரின் முதல் உடற் கட்டமைப்பைத் தொழிலுடன் விவரிக்குக.
a) இருவித்திலைத் தாவரத் தண்டில் துணைவளர்ச்சியின்போது நடைபெறும் செயற்பாடுகளைத் தொகுக்குக.

05. மீன்வளர்ப்பு முறைகளைப் பற்றி ஓர் உரை எழுதுக.
(உமது விடை மீனின் போசணை உள்ளடக்கம், மீன்பிடி நீர்நிலைகள் என்பவற்றையும் உள்ளடக்கியதாக அமையவேண்டும்)

06. சிறுகுறிப்பு எழுதுக.
1) [illegible]ரம். 2) தாய்ப்பாலூட்டல்.
3) சுகாதாரச் சேவை-புரதம்.

-நிறைவுற்றது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தர் பொய் சொல்லச் சொன்னாரா?



நான் ஒருமுறை என்னுடைய நாட்டில் ஒரு மனிதனைச் சந்தித்தேன். அவன் மிகவும் முட்டாளாகவும், மந்தனாகவும், சுறுசுறுப்புச் சிறிதும் இல்லாமல் எதுவுமே இல்லாதவனாகவும், ஒரு மிருகம் போல் வாழ்ந்து வந்தான். அவன் என்னிடம், ''நான் கடவுளைக் காணவேண்டும். அதற்கு அவனிடம், உனக்குப் பொய் சொல்லத் தெரியுமா?'' என்று கேட்டேன். 'ஐயோ! தெரியாது' என்றான். உடனே நான், ''பொய் சொல்ல முதலில் தெரிந்து கொள். ஒரு கட்டைபோல் ஜடமாகவும், விலங்குபோல் அறிவில்லாமலும் நீ இருக்கிறாய், உன்னிடம் சுறுசுறுப்பே இல்லை. எல்லாக் காரியங்களுக்கும் அப்பாற்பட்டதும், அமைதியும் தெளிவு மயமாகவும் விளங்குவதுமாகிய நிலையை நீ இதுவரை அடையவில்லை. நல்லதையல்ல, ஒரு கெட்டதைக் கூடச் செய்ய முடியாத அளவிற்கு நீ மந்தபுத்தி உடையவனாக இருக்கிறாய்!'' என்றேன். அந்த மனிதன் ஒரு விசித்திரமானவன். அவனோடு பேசிக் கொண்டிருந்தபோது நான் கேலியாகத் தான் இதைச் சொன்னேன் என்றாலும், இதன் மூலம் நான் என்ன சொல்கிறேன் என்றால், ஒரு மனிதன் செயலைக் கடந்த நிலையை அடைய வேண்டும் என்றால் பயங்கரமான வேகத்தில் செயல் புரிவதன் மூலமே அந்த நிலையை அவன் அடையமுடியும்.

*(சொன்னவர்: விவேகானந்தர்)*

# உறவுகள் மேம்பட...



குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க.

★ நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
★ அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.
★ சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.
★ நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் குறுகிய மனப்பான்மையை விட்டு ஒழியுங்கள்.
★ உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
★ மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.
★ அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
★ எல்லோரிடத்திலும் எல்லா விடயங்களையும், அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
★ கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
★ அற்ப விடயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.
★ உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
★ மற்றவர் கருத்துக்களை செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.
★ மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
★ பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள். அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
★ பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.

வேதாத்திரி மகரிஷி.

# பிரார்த்தனை வேறு தியானம் வேறு

புத்தர் பிரார்த்திக்கச் சொல்லவில்லை. தியானிக்கச் சொல்கிறார். பிரார்த்தனை என்பது கூட ஒரு வகையில் ஆசையின் வெளிப்பாடுதான். பிரார்த்திக்கும் போது நீ ஆசைப்படுகிறாய்.



பிரார்த்தனை எப்போதும் எதிர்காலத்தில் ஒன்றை வேண்டுவது. பணம் வேண்டுமென்கிறாய். அல்லது கடவுளே வேண்டுமென்கிறாய். இரண்டும் ஒன்றேதான். ஏதாவது ஒன்றைக் கேட்கும் போது உன்னிடமிருந்து நீ நகர்ந்து விடுகிறாய்.

தியானம் என்பது ஒரு வகையில் எதையும் கேட்காதது. எந்தக் கேள்வியும் எழுப்பாதது. எந்தச் சிந்தனையும் இல்லாதது. பிரார்த்தனை சிந்தனையின் ஒரு பகுதிதான். அருமையானது தான் என்றாலும் அது சிந்தனையின் பாற்பட்டது. அழகான ஒரு சிறையும் சிறைதானே.

பிரார்த்திக்கும் மனது பேராசை பிடித்தது. பிரார்த்திக்கும் மனது எந்த நிலை மாறுபாட்டையும் அடைவதில்லை. அது அதுவாகவே இருக்கிறது. பிரார்த்தனை அந்த மனதில் இருந்துதான் பிறக்கிறது. பிறகு மனதிலிருந்து பிறிதாக அது எப்படி இருக்க முடியும்?

தியானம் என்பது மனமற்ற ஒரு நிலை. பிரார்த்தனை என்பது சமயம் பாற்பட்ட ஒரு மனதின் வெளிப்பாடு. என்றாலும் அங்கே மனமிருக்கிறது. சமயம் என்ற அருமையான உடை உடுத்தி வரும்போது அது மிக ஆபத்தானதும் ஆகிவிடுகிறது.

உன்னுடைய பிரார்த்தனை உன்னுடைய பிரார்த்தனையே அல்ல. அது உன்னுடைய ஒரு பகுதி. உன்னைக் கொஞ்சம் நீட்டி விட்டுக் கொள்வது. உன்னை விடச் சிறந்தவனாக உன்னை உன் பிரார்த்தனை ஆக்க முடியாது. தியானம் மட்டுமே உன்னை விட உன்னைச் சிறந்தவனாக்க முடியும். அதுதான் உன்னைக் கடந்த போவதற்கான ஒரே வழி.

தியானம் என்பது என்ன வென்கிறாயா? ஏதாவது ஒன்றைப் பற்றித் தியானிப்பது தியானம் அல்ல. .... என்ற ஆங்கில வார்த்தை தவறாகப் புரிந்து கொள்ள வைத்து விடுகிறது. தியானம் என்ற வார்த்தை எதைக் குறிக்கிறதோ அதைக் குறிக்க ஆங்கிலத்தில் சரியான வார்த்தை 'சம்மசதி.' இதைத்தான் தியானம் என்று மொழி பெயர்க்கிறார்கள். சரியான மனப்பாங்குடையவனாக இருத்தல். விழித்திருத்தல் உணர்வோடிருத்தல், ஜாக்கிரதையாக இருத்தல், கவனித்திருத்தல். உணர்வோடிருத்தல். ஜாக்கிரதையாக இருத்தல் . கவனித்திருத்தல் சாட்சியாக இருத்தல் சம்மசதியைக் குறிக்கச் சரியான வார்த்தை என்று எதுவும் இல்லை.

சம்மசதி என்றால் உள்ளடக்கம் ஏதுமில்லாத உணர்வு இருத்தல் என்று பொருள். சிந்தனை ஏதும் இருப்பதில்லை. ஆசை ஏதும் இருப்பதில்லை .கடவுளைப் பற்றியோ வேறு எந்த உயர்ந்த எதைப் பற்றியோ எந்தச் சலனமும் இருப்பதில்லை. வேறு எந்த சிந்தனையும் இல்லாத நிலை. இயற்கை, அதன் அழகு, பைபிள், குரான், வேதங்கள், அவற்றில் இருக்கும் பிரமாதமான சிந்தனைகள் என்று எதுவும் தியானத்தின் போது இருப்பதில்லை. சிந்தனையே இருப்பதில்லையே.

எந்தக் குறிப்பிட்ட வடிவத்தையும் உருவகப் படுத்திக் கொள்வதில்லை. மந்திரங்களைச் சொல்வதெல்லாம் மனத்தள விலான விஷயங்கள். தியானத்துக்கு எந்த மந்திரமும் இல்லை. எதுவும் செய்யாமல் இருப்பது தான் தியானம். மனம் முற்ற முழுக்க வேறுமையாகிவிடுகிறது. வெறுமையாகிப் போன அந்த வெளியில் நீ இருக்கிறாய். போவதற்கு என்று எந்த இடமும் இல்லாத ஒரு வகையான உயிர்ப்பு. பரிசுத்தமான இருப்புத்தான் அது. தனக்குள் சாவகாசமாக இருக்கும் ஓர் இருப்பு. நிச்சலனமாக உனக்கே சொந்தமான வீட்டுக்குள் இருப்பது. அது தான் புத்தருடைய தியானத்தின் பொருள்.

சுகிசிவம்.

# உலகம் இவ்வளவுதான்

ஒரு முறை இது நிகழ்ந்தது. ஒரு முதிய பாதிரியார் இருந்தார். அவரிடம் பாவ மன்னிப்புக் கேட்க வருகிறவர்களெல்லாம் தாங்கள் ஒழுக்கம் தவறியதாகச் சொல்லிக் கொண்டிருந்ததையே கேட்டு அவருக்குச் சலித்துவிட்டது. ஒரு ஞாயிற்றுக்கிழமை அனைவரும் ஆலயத்துக்கு வந்தபோது அறிவித்தார்.



''இன்னும் ஒரு மனிதர் என்னிடம் வந்து, தான் ஒழுக்கம் தவறியதாகச் சொன்னால் நான் பதவி விலகிவிடுவேன்'' என்று எல்லோருக்கும் அவரைப் பிடித்திருந்தது. எனவே அவர்கள் அதற்கு மாறாக ஒரு குறியீட்டு வார்த்தையோடு வந்தார்கள். ஒருவன் தான் ஒழுக்கம் தவறிவிட்டேன் என்று சொல்ல மாட்டார். ''நான் கீழே விழுந்துவிட்டேன்'' என்பதாகச் சொல்லுவார். இது இந்தப் பழைய முதிய பாதிரியாருக்குத் திருப்தி கொடுத்தது. எல்லாம் நன்றாகப் போய்க்கொண்டிருந்தது. வயதானது. அவரும் இறந்து விட்டார். அதற்குப் பிறகு புதிய பாதிரியார் வந்தார். கொஞ்ச நாள்களுக்குப் பிறகு பின் அந்த நகரத்துடைய மேயரைப் பார்த்து அவர் சொன்னார். ''இந்த நகரத்தினுடைய நடைபாதைகளைப் பற்றி நீங்கள் கொஞ்சம் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் என்னிடம் பாவமன்னிப்புக்கு வருகிறவர்கள் எல்லோரும் தாங்கள் விழுந்துவிட்டதாகச் சொல்கிறார்கள்'' என்றார். மேயர் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கிவிட்டார். ஏனென்றால் அந்தக் குறியீட்டுச் சொல்லின் உண்மையான அர்த்தத்தை அந்தப் புதிய பாதிரியாருக்கு யாரும் சொல்லவில்லை என்பதைப் புரிந்துகொண்டார். அவர் விளக்க முற்படுவதற்கு முன்பே கோபத்தோடு அந்தப் பாதிரியார் எழுந்து சத்தம் போட்டார். ''நீங்கள் ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஒன்று தெரியுமா? இந்த வாரத்தில் உங்கள் மனைவி மூன்று முறை விழுந்திருக்கிறார்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்

நண்பர்கள் சிலர் உங்களை நம்பி பொறுப்பான வேலைகளை ஒப்படைக்கலாம். கசப்பான அல்லது இனிப்பான செய்தியைக் கேட்கலாம். பயணங்கள் சந்தோஷம், மகிழ்ச்சி தருவதாக அமையும். தந்தை உடல் நலன் தொடர்பாக ஏற்பட்ட கவலைகள் தீரும். சேமித்த பணம் ஒன்றை திடீரென செலவு செய்வீர்கள். கடன் நீங்கும்.

### இடபம்

உறவினர்கள் உங்களுக்கு உதவிக் கரம் நீட்டுவர். காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். எதிர்பார்த்த சில காரியங்கள் நடப்பதால், மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். மூத்த உடன் பிறப்புக்களின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பல நாள் கனவுகள் நனவாகலாம்.

### மிதுனம்

அதிகமான செலவுகளால் பணத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளலாம். அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே, சில வேலைகளை முடிக்க முற்படுவீர்கள். சிலரைத தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு அவர்கள் கிடைக்காமல் போகலாம். பிள்ளைகள் வழியில் அன்புத் தொல்லையுண்டு.

### கடகம்

எதிர்ப்புகள், போட்டிகளை முறியடித்து வெற்றி காணும் நாள். உடன் பிறப்புக்கள் உறுதுணையாக இருப்பர். வெளிநாட்டுத் தொடர்புடையவர்கள் நல்ல செய்திகளைக் கேட்கலாம். பிள்ளைகள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். வரவாக வந்த பணம் ஒன்றை மற்றவர்களுக்கு கைமாத்தாகக் கொடுக்கலாம். நட்பு வட்டம் விரிவடையும்.

### சிங்கம்

வீண் பிடிவாதங்களால் பிரச்சினைகளை, இழப்புகளைச் சந்திக்கலாம். ஆதாயம் தராத வேலை ஒன்றில் ஈடுபட்டு அதிருப்தி அடையலாம். தொழில் ரீதியாகச் சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். திட்டமிட்ட பயணம் ஒன்றை மாற்றி அமைக்கலாம். வீட்டுக்கு தேவையான பொருட்களை அதிக விலைக்கு வாங்குவீர்கள்.

### கன்னி

ஒருவர் செய்த உதவியை மறக்காமல், பதில் உதவி செய்வீர்கள். தொழில் ரீதியாக ஏற்பட்ட தாமத நிலைமை மாறி சுறுசுறுப்பு, உற்சாகம் கூடும். வியாபாரிகளுக்கு கடன் பாக்கிகள் நீங்கும். கடிதங்கள் மூலம் எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வந்து சேரலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும்.

### துலாம்

பல நாள் கடன் பாக்கி ஒன்றைத் தீர்ப்பீர்கள். ஒரு விடயத்தில் அதிக சிரமம் இருந்தாலும், அதை எப்பாடுபட்டாவது முடிப்பீர்கள். தாய் வழியில் அனுகூலமான உதவி கிடைக்கலாம். சக ஊழியர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் கூடும். அனுகூலமான நாள்.

### விருச்சிகம்

நடந்து விடுவது போல தோன்றிய சில காரியங்கள் நடக்காமல் போகலாம். உங்களின் தொழில் ரீதியான செயற்பாடுகளை சிலர் விமர்சனம் செய்யலாம். நண்பர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பல நாள்களாக பார்க்காத உறவினர் ஒருவரைப் பார்க்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள்.

### தனுசு

குறைந்த செலவில் முடியும் என நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த நண் பர்கள் அதைக் காப்பாற்றாமல் தவிக்க விடலாம். சக ஊழியர்கள் திடீர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளு ஏற்படும். ஓய்வாக இருக்கும் நேரத்தை வீணடித்து விட்டு, பின்னர் அவசரமாகச் செயற்படுவீர்கள்.

### மகரம்

உறவினர்கள் சந்திப்பால் உற்சாகம் பெறும் நாள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். அரசியல் தொடர்புடையவர்கள் மேலிடத்தின் பாராட்டைப் பெறலாம். இதோ, அதோ என, இழுத்த கடன் மீதிகள் வரலாம். ஆடம்பரமான விடயங்களுக்காக பணத்தைத் தாராளமாகச் செலவு செய்வீர்கள்.

### கும்பம்

நாளைய சில காரியங்களுக்காக இன்றே முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். நண்பர்களுக்குள் ஏற்பட்ட மனஸ்தாபங்களை நீங்கள் தலையிட்டு தீர்த்து வைப்பீர்கள். குடும்ப உறுப்பினர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். திடீர் பணவரவுகள் உண்டு. விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.

### மீனம்

இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நண்பர் ஒருவரிடம் சண்டை போடலாம். சில வேலைகளுக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். சிறிய வேலை ஒன்றுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

---

# சாதாரணதரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று

# யாழ்.மாவட்டக் கல்வித் துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

## லசிகலா சற்குணநாதன்
### யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்



நான் 2009 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி 4ஏ4பிசி பெறுபேற்றைப் பெற்றுள்ளேன்.

புதிய பாடத்திட்டத்திற்கமைவாக பரீட்சைக்குத் தயாராக வேண்டும், கடின முயற்சி செய்து கொள்ள வேண்டும், பயிற்சிகள் மேற்கொள்ளல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொண்டால் சிறந்த பெறுபேற்றை அடையலாம்.

பாடசாலை ஆசிரியர்கள், கல்வி நிறுவனம், பெற்றோர் போன்றோரின் அக்கறைகள் ஊக்கப்படுத்தும் தன்மை போன்றவற்றால்தான் இந்தப் பெறுபேறு கிடைத்துள்ளது.

நான் உயர்தரத்தில் வணிகத்துறையில் கற்று நல்ல கணக்காளராக வந்து நாட்டுக்குச் சேவையாற்றுவதே எனது இலட்சியமாகும்.

## பாலச்சந்திரன் கிறிராம்
### ஹாட்லிக் கல்லூரி



நான் 2004 ஆம் ஆண்டு தரம் 6இல் ஹாட்லிக் கல்லூரியில் இணைந்து எனது ஆங்கில மொழி மூலமான கல்வியைத் தொடங்கினேன். நான் வகுப்பில் கல்வி கற்பிக்கும்போது அவற்றை கவனமாகக் கிரகித்து அவற்றை சிறு குறிப்பு எடுத்து அன்றன்றே மனப்பாடம் செய்வேன். பின்னர் சிறிது நாளின் பின் அவற்றை மீள் ஞாபகப்படுத்திப் பார்ப்பேன். இவ்வாறு பார்ப்பதன் மூலம் அவை மறக்காமல் நிலைத்திருக்கும். எனக்குப் படிக்கும்போது ஏதும் சந்தேகம் வந்தால் அல்லது விளங்காவிட்டால் அன்றன்றே ஆசிரியரிடமோ அல்லது நண்பர்களிடமோ கேட்டே தெளிவுபடுத்திக் கொள்வேன்.

எனக்கு சிறுவயதில் இருந்தே கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களை விரும்பிக் கற்பேன். கணித பாடத்திற்கு நான் தினமும் பல பயிற்சிகளைச் செய்வேன். அதில் தெரியாத விடயங்களை ஆசிரியரிடம் கேட்பேன். இவற்றையெல்லாம் விட நான் கடந்த கால வினாத்தாள்கள் மற்றும் மாதிரி வினாத்தாள்கள் என்பவற்றைச் செய்துபார்ப்பேன். நான் ஆங்கில மொழி மூலம் படித்தாலும் தமிழ் மொழி மூல வினாத்தாள்களையும் செய்வேன். மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றுவேன்.

நான் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் 6ஏபி2சி பெற என்னை ஊக்கப்படுத்திய அதிபர், உப.அதிபர், ஆசிரியர்கள், பெற்றோருக்கும் நண்பர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

## செல்வமனோகரன் திங்கரன்
### ஹாட்லிக் கல்லூரி



நான் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் 6ஏபி2சி எனும் பெறுபேற்றினைப் பெற்றுள்ளேன். எனக்கு இப்பெறுபேறு கிடைக்க குடும்ப அங்கத்தவர்களும் அதிபர், ஆசிரியர்களும் துணைபுரிந்ததோடு தனியார் கல்வி நிலைய நிர்வாகியின் ஊக்குவிப்பும் ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமையும் துணை புரிந்தது.

நான் பாடங்களை அதிகமாக விரும்பிக் கற்பேன். அதற்குக் காரணம் பாட ஆசிரியர்களின் ஊக்குவிப்பும் கற்பித்தல் திறமையும் வகுப்பாசிரியரின் செயற்பாடுகளுமேயாகும். இதன் பயனாக பாடங்களில் என்னால் இயன்றளவு சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளேன்.

கல்வியை சுமையாகக் கருதாது சுகமாகக் கருதும் எவருக்கும் கல்வி எட்டாக்கனியாக எப்போதும் இருக்காது. இலகுவில் கிட்டிவிடும்.

நேர்காணல்: மூர்த்தி, சுகந்தன்

## பிரான்சிஸ் றபாயேல்
### நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்



நான் 2009 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி 3ஏ2பி2சி2எஸ் பெறுபேற்றைப் பெற்றுள்ளேன்.

ஆசிரியர்களின் கற்பித்தலும் எனது கற்றல் முயற்சியும் முழுமையாக கிடைத்தமையால் இந்தப் பெறுபேறு கிடைத்துள்ளது.

வினாக்களுக்குச் சிறந்த முறையில் விடையினை எழுதியமையால் சிறந்த பெறுபேறுபெற வழிவகுத்தது. சிறந்த பெறுபேறு பெற்று உயர்தரத்தில் எனது கல்வியை மீண்டும் தொடரவேண்டும் என என் மனதில் பரீட்சை எழுதும்போது தோன்றியது.சிறு வயதில் இருந்து இதுவரை காலமும் கல்விகற்பித்த ஆசியர்கள், என்னுடன் உறவாடிய பெரியவர்களின் அறிவுரை, பெற்றோரின் ஒத்துழைப்பும் உதவிகளும் சகோதரர்களின் ஒத்துழைப்பும் பக்க பலமும் கல்வி நிறுவனங்களின் கற்பித்தில் செயற்பாடுகள் இவைகள் எல்லாம் ஒன்று கூடியதனாலேயே இந்தப் பெறுபேறு கிடைத்தது.

நான் உயர்தரத்தில் வணிகத்துறையைக் கற்றுக் கணக்காளராக வந்து அரச துறையில் எனது தொழில் முயற்சியினை கொண்டு செல்வதே எனது இலட்சியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

| உயிரியல் | பகுதி - II |
|---|---|

## அமைப்புக் கட்டுரை வினாக்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. A) 1) DNA இன் இரு பிரதான தொழில்கள் தருக.

2) தாவரக்கலத்தில் DNA இன் அமைவிடங்கள் 2 தருக.

3) குழியவன்கூடு என்றால் என்ன?

4) தாங்குதல் தவிர்ந்த குழியவன்கூட்டின் தொழில்கள் 4 தருக.

5) கரடுமுரடான அகமுதலுருச் சிறுவலையின் பிரதான தொழில்கள் 2 தருக.

B) பின்வரும் வர்ணனைகள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான பதத்தை எழுதுக.

1) ஒரு தனியனின் பிறப்புரிமை அமைப்பைத் தீர்மானிப்பதற்கு இரட்டைப் பின்னிடைவு நுகத்துடன் இனங்கலத்தல்.

2) இரு ஓரின நுகங்களுக்கு இடைப்பட்ட இயல்பைக் காட்டும் பல்லின நுக நிலை.

3) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பரம்பரை அலகுகளின் கூட்டுச் செயற்பாட்டால் தோற்ற அமைப்பின் மீது ஏற்படும் விளைவு.

4) ஒரு கலத்தில் இருமடிய நிறமூர்த்த எண்ணிக்கையிலும் கூடிய எண்ணிக்கையில் மடியநிலை காணப்படல்.

C) 1) பூமியில் எப்போது உயிர் தோன்றியதாக நம்பப்படுகிறது?

2) உயிர் தோன்றமுன் வளிமண்டலத்தில் காணப்பட்ட வாயுக்கள் எவை?

3) முதல் உயிர் எங்கு தோன்றியது?

4) முதலில் தோன்றிய உயிரினம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

5) முதலில் தோன்றிய உயிரினம் எவ்வகைப் போசணைக்குரியது?

D) 1) கூர்ப்பு எனும் பதத்தை விளக்குக.

2) ''நியோ டாவினிசம்'' (Neo-Darwinism) கோட்பாட்டின்படி நீண்ட கழுத்துள்ள ஒட்டகச் சிவிங்கிகள் எவ்வாறு தோன்றின எனச் சுருக்கமாக விளக்குக.

3) பரம்பரை அலகு விகாரத்தால் மனிதனில் பிறப்புரிமைத் தொடர் ஒழுங்கு மாறுவது எவ்வாறு அழைக்கப்படும்?


4) பரம்பரை அலகு மீடிறன் மாறாமல் இருப்பதற்கு ஒரு குடித்தொகையில் காணப்படவேண்டிய நிபந்தனைகள் எவை?

02. A) 1) ஒடுக்கற்பிரிவினால் ஏற்படும் இரு உயிரியல் முக்கியத்துவங்கள் எவை?

2) பின்வரும் அங்கிகளில் ஒடுக்கற்பிரிவு நிகழும் கட்டங்களைக் குறிப்பிடுக.

1. Nephrolepis ..........
2. Selaginella ..........
3. Cycas ..........
4. Mucor ..........
5. Agaricus ..........

3) Pogonatum இன் வாழ்க்கை வட்டத்தைக் காட்டும் வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.




a, b, c, d, e எனும் கட்டங்களைப் பெயரிடுக.

a) ..........
b) ..........
c) ..........
d) ..........
e) ..........

4) வித்து மூடியுளியில் e குறிக்கும் கட்டங்கள் எவை?

1. கட்டம் 1: ..........
2. கட்டம் 2: ..........

B) 1) மண்கரைசலில் இருந்து வேரின் மேற்பட்டைக் கலங்களை நீர்மூலக் கூறுகள் எவ்வாறு அசைந்து செல்லும்?

2) மேலே குறிப்பிட்ட நீர் அசைவுக்குரிய பாதைகளைப் பெயரிடுக.

3) இப்பாதைகளில் எதனூடாக நீர் செல்வது அகத்தோலில் தடுக்கப்படும்?

4) அகத்தோலில் இப்பாதையின் ஊடாக நீர் செல்லாமைக்குக் காரணம் யாது?

5) உயரமான தாவரத் தண்டுகளில் நீர் மேலே கொண்டுசெல்லலில் உதவும் காரணிகள் எவை?

C) இருவித்திலைத் தாவரத் தண்டில் காணப்படும் இழையங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**மேற்றோல், தக்கை, அனுக்காழ்**
**மேற்பட்டை, தக்கை மாறிழையம், முதற்காழ்**
**அகத்தோல், கலன்மாறிழையம், முதல் உரியம்**
**பரிவட்டவுறை, துணைமேற்பட்டை, துணை உரியம்**
**கிடை, மூலக்காழ், வல்லுருக்கல இழையம்**

1) மேலேயுள்ள இழையங்களில் புடைக்கலவிழையத்தினால் மாத்திரமான இழையங்கள் 2 தருக.

2) மேலேயுள்ள இழையங்களில் இறந்த கலங்களையுடைய இழையங்கள் 2 தருக.


D) 1) தாவரங்களில் ''வளர்ச்சி'' எனும் பதம் விளக்குவது யாது?

2) வளர்ச்சி, விருத்தியில் சம்பந்தப்பட்ட பிரதான ஓமோன்கள் எவை?

3) பின்வரும் தொழில் ஒவ்வொன்றிற்கும் பொறுப்பான நொதியத்தைப் பெயரிடுக.

1. உச்சி வளர்ச்சி: ..........
2. உச்சி ஆட்சி: ..........
3. கன்னிக்கனியமாதல்: ..........
4. கலப்பிரிவு: ..........
5. உறங்குநிலையை உடைத்தல்: ..........
6. மாறிழையத் தொழிற்பாடு ஊக்குதல்: ..........

03. A) சூலக வட்டத்தின் சில கட்டங்கள் ஒரு தொடராகக் கீழே காட்டப்பட்டுள்ளன.




(13ஆம் பக்கம் பார்க்க)

நன்றி : கொழும்பு வணிக வள நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01.03.1992

✱ ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பாக சந்தேக நபர்களை நாடு கடத்தும் ஒப்பந்தம் எதனையும் இந்தியாவுடன் செய்து கொள்ள இலங்கை அரசு விரும்பவில்லை என பத்திரிகைகள் விமர்சிப்பு.

✱ இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஆஸ்திரேலிய எம்.பி. ஒருவரின் யோசனையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

02.03.1992

✱ ஆனையிறவு சின்ன உப்பளப் பகுதியில் அமைந்திருந்த இராணுவத்தினரின் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டு 2 காவலரண்களை தகர்த்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱ அம்பாறைப் பகுதியில் உள்ள அகதி முகாம்களில் வாழும் தமிழ் மக்களை தத்தமது கிராமங்களுக்குச் சென்று குடியேறுமாறு அமைச்சர் பி.தயாரத்தின கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

03.03.1992

✱ தமிழகத்திலுள்ள ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அழைக்கும் விவகாரத்தில் தாம் தலையிடுவதானால் கொழும்பு அரசு வடக்கு - கிழக்கில் யுத்தத்தை நிறுத்த வேண்டும் என ஐ.நா. அகதிகள் தூதரகம் நிபந்தனை விதிப்பு.

✱ யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர எடுக்கப்படும் நடவடிக்கைகளை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என 'சமாதானத் தீர்வை நோக்கி' என்ற தலைப்பில் லண்டனில் நடந்த மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றம்.

04.03.1992

✱ இராணுவத்தினர் வவுனியாப் பகுதியில் கடந்த ஒரு வார காலமாக மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை குறிப்பிடத்தக்க வெற்றி எதனையும் கொடுக்கவில்லை என பி.பி.ஸி. வானொலி விமர்சிப்பு.

✱ மிக விரைவில் யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வட பகுதித் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்ன தெரிவிப்பு.

05.03.1992

✱ மணலாற்றுப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில் இராணுவத்தரப்பில் 14 படையினர் பலியானதாகத் தெரிவிப்பு.

✱ வவுனியாப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் கோவில்களிலும் தங்கியுள்ளதாகத் தெரிவிப்பு.

06.03.1992

✱ தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதை உடனடியாக நிறுத்திக்கொள்ளுமாறு அகதிகளுக்கான அமெரிக்க நாடாளுமன்றக் குழு இந்திய அரசைக் கேட் டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ யாழ்.குடாநாடு மீதான தாக்குதல் ஒன்றை நடத்துவதா? இல்லையா? என்பது குறித்து இராணுவ உயரதிகாரிகள் தரப்புக்கும் அரசியல் தரப்புக்குமிடையில் கருத்து வேறுபாடு நிலவுவதாகத் தெரிவிப்பு.

07.03.1992

✱ யாழ்.மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்தப்படும் ஷெல் தாக்குதல்களை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபர் ஜனாதிபதிக்கு அவசரக் கோரிக்கை விடுப்பு.

✱ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் பேசுவதா? இல்லையா? என்பது, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவைப் பொறுத்துள்ளது என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு.

08.03.1992

✱ தமது அரசுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை அடுத்து அரசைக் கலைத்து பொதுத் தேர்தலை மீண்டும் நடத்துவது குறித்து இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் ஆலோசித்து வருவதாகத் தெரிவிப்பு.

✱ சட்டவிரோதமாக மரங்களைத் தறிப் போரைக் கண்ட இடத்தில் சுடுவதற்கான அதிகாரம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆயுதப் படையினருக்கும் பொலிஸாருக்கும் வழங்கப்படவிருப்பதாக ஜனாதிபதி தெரிவிப்பு.

09.03.1992

✱ வவுனியா நகருக்கு கடந்த வாரம் வந்திருந்த பிரதமர் டி.பி.விஜயதுங்க தொலைவில் வெடித்த ஷெல் சத்தத்தினால் அதிர்ச்சிக்குள்ளானதாகத் தெரிவிப்பு.

✱ மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினர் தாம் கைது செய்த 42 தமிழர்களை வெட்டிக் கொலை செய்துள்ளதாக தெரியவந்துள்ளதாக அறிவிப்பு.

10.03.1992

✱ இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் ச.சிவகுமாரை தாம் சமர்ப்பித்த யோசனை குறித்து விளக்கம் அளிக்கவுள்ளார் எனத் தெரிவிப்பு.

✱ தெரிவுக் குழுவுக்கு யோசனை தெரிவிக்கவோ அல்லது விளக்கமளிக்கவோ நாம் எவரையும் அனுப்பவில்லை. டாக்டர் சிவகுமாருக்கும் அவரது யோசனைகளுக்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று விடுதலைப் புலிகள் பிரமுகர் ஒருவர் தெரிவிப்பு.

11.03.1992

✱ உலகில் சிறந்த பயிற்சி மற்றும் நல்லொழுக்கம் ஆகியவற்றுடன் கூடிய சிறந்த கெரில்லாப் படை விடுதலைப் புலிகளே என நாம் மதிப்பீடு செய்கிறோம் என்று இலங்கை கூட்டுப்படைத் தளகர்த்தர் ஹமில்டன் வணசிங்க தெரிவிப்பு.

✱ இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் நடத்துவதற்கான பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகள் தளர்த்தப்படும் என இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் சென்னையில் வைத்துத் தெரிவிப்பு.

12.03.1992

✱ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடை விதிப்பது குறித்து இந்திய மத்திய அரசு பரிசீலித்து வருவ தாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் தெரிவிப்பு.

✱ ஆவரங்காலில் அகதி முகாம் ஒன்றின் மூன்று கொட்டகைகள் தீப் பிடித்து எரிந்ததாகவும், தீ விபத்தில் சிக்கி பெண் ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிப்பு.

13.03.1992

✱ தெற்கில் இருந்து வடக்குக்கு நல்லெண்ணத் தூதுக் குழுக்கள் வந்து போவது போன்று வடக்கிலிருந்தும் தெற்குக்கு நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் செல்லவேண்டும் என யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த மெதடிஸ்த திருச்சபையின் நல்லெண்ணத் தூதுக்குழு வேண்டுகோள்.

✱ 'இலங்கை விற்பனைக்கு விடப்பட்டுள்ளது' என்ற கொள்கையைத்தான் ஜனாதிபதி பிரேமதாஸ தற்போது கடைப்பிடித்து வருகிறார் என முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக விமர்சிப்பு.

14.03.1992

✱ இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்து போக விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

✱ இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுமுன் யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் சிவகுமாரன் சாட்சியமெதுவும் அளிக்கவில்லை.

15.03.1992

✱ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்துவதை சுதந்திரக் கட்சி எதிர்க்காது என்று எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு.

✱ இலங்கையில் தனித் தமிழ் ஈழம் அமைய தமிழக அரசு உதவ வேண்டும் என தமிழக முன்னேற்றக்கழக தலைவர் தமிழக மாநில சட்ட சபையில் வேண்டுகோள்.

# ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவை மேம்படுத்த இலங்கை அரசு முயற்சி

கொழும்பு,ஜூன்16

ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்டு வரும் ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டம் நன்மை அளிக்கக் கூடியதென இலங்கை அறிவித்துள்ளது.

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சலுகைத் திட்டத்தை மீளப் பெற்றுக் கொள்வதன் மூலம் நன்மை அடைய முடியும் என இலங்கை தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் சுமூகமான உறவை பேண எதிர்பார்ப்பதாக இலங்கை மேலும் குறிப்பட்டுள்ளது.

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் கடந்த சில மாதங்களில் இலங்கை அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு சாவல்கள் மற்றும் சட்ட சிக்கல்களுக்கு மத்தியில் நல்லாட்சியை மேலும் வலுப்படுத்தும் பல்வேறு முனைப்புக்களை அரசு மேற்கொண்டுள்ளது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்தச் சலுகைத் திட்டத்தை நீடிப்பதன் மூலம் இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராஜதந்திரிகள் அண்மையில் ஐரோப்பாவிற்கு மேற்கொண்ட விஜயங்களின் போது இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தக் கூடிய வகையிலான பல்வேறு நடவடிக்கைகள் குறித்து ஆராயப் பட்டுள்ளன என அவர் குறிப்பட்டுள்ளார்.

(ளி)

# இராணுவ வெற்றி விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு

கொழும்பு, ஜூன், 16

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட இராணுவ வெற்றி விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலிமுகத்திடலில் நடைபெறும் எனவும் ஏற்கனவே வழங்கப்பட்ட அழைப்பிதழ்கள் இந்த வைபவத்துக்குச் செல்லுபடியாகுமென்றும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் இயக்குநர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் கூறுறியவை வருமாறு -

இனிமேல் ஒவ்வொரு வருடமும் ரணவிரு அதிகாரசபையின் ஏற்பாட்டில் மே மாதம் 18 ஆம் திகதி தேசிய படைவீரர் தினம் தொடாந்து ஒரு வார காலத்துக்கு அனுஷ்டிக்கப்படும் - என்றார்.

இராணுவப் பேச்சாளார் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க இங்கு உரையாற்றுகையில், தேசிய படைவீரர் தினத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன. நாளை வியாழக்கிழமை வரை படையணி ஒத்திகை கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறும் என்றும் கூறினார். படை வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் நாடு முழுவதிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ளி)

# மாகாண மட்டத் தமிழ் மொழித்தின போட்டிகளில்-வெற்றியீட்டியோர் விவரம்

வலி.வடக்கு,ஜூன் 16

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண மாவட்ட கல்வி வலயங்களுக்கு இடையே நடைபெற்ற தமிழ் மொழித்தினப் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**திறந்தபோட்டி (நாட்டார் பாடல்)**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி (யாழ்ப்பாணம்), கிளிநொச்சி இந்துக் கல்லூரி, முருங்கன் மகாவித்தியாலயம் (மன்னார்)

**திறந்தபோட்டி(வில்லுப்பாட்டு)**

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி(யாழ்ப்பாணம்), தமிழ் மத்திய மகாவித்தியாலயம் (வவுனியா தெற்கு) ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை(மன்னார்)

**திறந்த போட்டி (விவாதம்)**

யாழ்.இந்துக் கல்லூரி(யாழ்ப்பாணம்), தமிழ் மத்திய மகாவித்தியாலயம் (வவுனியா தெற்கு), கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

**திறந்த போட்டி (தமிழறிவு வினா - விடை)**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி(யாழ்ப்பாணம்), புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி (முல்லைத்தீவு), பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயம்(வவுனியா தெற்கு)

**திறந்தபோட்டி(முஸ்லிம் நிகழ்ச்சி)**

புதுக்குடியிருப்பு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை(மன்னார்), மதீனா மகாவித்தியாலயம் (வவுனியா தெற்கு), ஓஸ்மானியாக் கல்லூரி(யாழ்ப்பாணம்)

(201-86)

*(தொடரும்)*

# வரணியில் வீசிய கடும் காற்றினால் வீட்டுக் கூரைகள் சேதமடைந்தன

தென்மராட்சி,ஜூன்16

வரணிப் பிரதேசத்தில் கடந்த வாரம் வீசிய கடும் காற்றினால் பல சிறிய வீடுகளின் தகரக் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் இருந்து இப்பிரதேசத்தில் வந்து தற்காலிகக் கொட்டில்கள் அமைத்து வசித்து வரும் குடும்பத்தவர்களின் வீட்டுக் கூரைகளே இவ்வாறு காற்றினால் அள்ளப்பட்டு சேதமடைந்துள்ளன.

இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்பு பாதுகாப்புத் தரப்பினால் வறிய குடும்பங்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட சிலரின் வீட்டுக் கூரைகளும் இவ்வாறு காற்றினால் அள்ளப்பட்டு சேதமடைந்துள்ளன.

பாதுகாப்புத் தரப்பினரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகள் யாவும் தகரத்தினால் கூரைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (50-122)

# இரண்டாம் குறுக்குவீதியில் உள்ள வடிகால் புனரமைக்கப்படவில்லை

வண்ணை,ஜூன்16

யாழ்.இரண்டாம் குறுக்கு வீதியில் பிரதான வீதிக்கு தெற்குக் கடற்கரைப் பக்கமாக அமைந்துள்ள வடிகால் இன்னமும் புனரமைக்கப்படாமல் இருந்து வருகிறது.

அதனால் அப்பகுதியில் குடியிருக்கும் மக்களின் சுகாதாரம் சீர்கெட்டுப் போவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

நாளாந்தம் பாவனையில் சிந்தப்படுகின்ற கழிவுநீர் ஆங்காங்கே தேங்கிநின்று துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்பு மற்றும் நோய்பரப்பும் கிருமிகள் பெருகி ஆபத்தை விளைவிக்கும் அபாயம் தோன்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


கடந்த யுத்த அனர்த்தங்களால் முன்னர் அமைக்கப்பட்டிருந்த வடிகால்கள் தூர்ந்து போயுள்ளன. இதனால் கழிவுநீர் கடலுக்குச் சென்றடையும் மார்க்கம் தடைப்பட்டுள்ளது.

மழைநேரங்களில் வெள்ளநீர் வெளியேறாமல் குடியிருப்புகளில் நுழையும் நிலை தோன்றியுள்ளதால் எதிர்வரும் பருவப் பெயர்ச்சி மழை தோன்றுவதற்கு முன்பாக இப்பகுதி வடிகால்களைச் சம்பந்தப்பட்டவர்கள் புனரமைத்து உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(50-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
## சாவகச்சேரி கல்வயல்
## ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
## திவ்விய மகோற்சவ விஞ்ஞாபனம் - 2010



### கிரியாகால நிகழ்வுகள்

- ★ ஆனி 02ஆம்நாள் 16.06.2010 புதன்கிழமை மாலை 6.00மணிக்கு விநாயகர் வழிபாடு, சாந்திகள்
- ★ ஆனி 03ஆம் நாள் 17.06.2010 வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றம்.
- ★ ஆனி 10ஆம் நாள் 24.06.2010 வியாழக்கிழமை இரவு 8.00மணிக்குச் சப்பறம்.
- ★ ஆனி 11ஆம்நாள் 25.06.201 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு இரதோற்சவம்.
- ★ ஆனி 12ஆம்நாள் 26.06.2010 சனிக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு தீர்த்தோற்சவம்.
- ★ ஆனி13ஆம் நாள் 27.06.2010 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00மணிக்குப் பூங்காவனம்.
- ★ ஆனி14ஆம்நாள் 28.06.2010 திங்கட்கிழமை முற்பகல் 9.00மணிக்கு பிராயசித்த அபிடேகம். மாலை 6.00மணிக்கு வைரவசாந்தி.

தேவஸ்தான பிரதம குரு
பிரதிஷ்டா சிரோமணி
சிவஸ்ரீ.க.ச.சோமஸ்கந்தக்குருக்கள்
(பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்)

பரிபாலனசபை

(99479)


**BREAKING NEWS** **UK VISA**

A RATED UK COLLEGES



SPOT ADMISSION FREE ENTRANCE
19TH SATURDAY 2010 10AM-5PM

COURSES IN MANAGEMENT - IT - HOTEL MGT - TRAVEL & TOURISM, BEAUTY CULTURE AND OVER 100 COURSES.

COLLEGE PRINCIPAL WILL INTERVIEW THE STUDENTS AND WILL ISSUE OFFER LETTER ON THE SAME DAY AND CAN CONFIRM THE VISA.

BRING EDUCATIONAL CERTIFICATES (NO NEED IELTS)

HOTLINE
ABDULLAH 0774074203
KASTHURI 0773640136

MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)
# 286, R. A. De Mel Mawatha, Colombo 03.
(Near the Liberty Plaza, Next to Don Karolis)
Tel: (011) 5748720, 5 748721, 0114 335044
Web: www.millmba.com E-mail: mbaslt@yahoo.com


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி பாக்கியரத்தினம் (தேவி) சிவபாதசுந்தரம்

மண்ணுலகில் 27.05.1945 — விண்ணுலகில் 17.05.2010

கடந்த 17.05.2010 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் பாசமும் அன்பும் கொண்ட சகோதரி திருமதி பாக்கியரத்தினம் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும், வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றிய அனைவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (16.06.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

கோத்துக்கட்டி வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

அவரது சகோதரிகளும்
சுகந்தி, சுதா, செனதா (பெறாமக்களும்).

## சமய சந்திதிகளில்

வண்ணை, ஜூன் 16

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலயத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை ஆனி உத்தரவிழா நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகும். 9மணிக்கு சிறப்புச் சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி வீதியுலா எழுந்தருளுவார். (204-160)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 16

சங்கானை மனோன் மணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திரு விழா நேற்று செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழாக் காலங்களில்தினமும்மாலை 5.30 மணியளவில் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலய ஆசிரியர் க.கைலநாதன் 'பெரிய புராணம்' எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவினைநிகழ்த்தி வருகின்றார். (9)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 16

துன்னாலை ஸ்ரீ பூதவராயர் சிவன் ஆலயத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் காலை 7மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9 மணிக்கு சுவாமி திருவீதியுலா வருவார்.

(204)

* * *

கொழும்புத்துறை, ஜூன் 16

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு நடைபெறும். நற்கருணைப் பெருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்று பவனியும் இடம் பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொருபப் பவனியும் இடம் பெறும்.

(204-135)


**டொல்பின் விற்பனைக்குண்டு**
SUPER GI TWELVE AC,252-XXXX
டொல்பின் வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776033720



## மகத்துவமான கல்விக்கு தனித்துவமான பயிற்சி நிலையம்




### பாரம்பரியத்துடன் கூடிய புதிய தலைமுறைக்கான தகவல் தொடர்பாடல் தொழிநுட்பக்கல்வி

இன்று 16.06.2010 புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணிவரையான சுப நேரத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர். K. தேவராஜா அவர்களினால் சாவகச்சேரி கிளை கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திறப்புவிழா சிறப்புச்சலுகை
அனைத்து பாடநெறிகளுக்கும்
40% - 60%
கட்டணக்கழிவு

**CSC-ASIAN COMPUTER EDUCATION**
230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி
(பிரதேச செயலகத்திற்கு முன்பாக)
Tel : 021-3213390


## நெஞ்சைவிட்டகலா ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15.07.1933

மறைவு: 27.06.2009

### அமரர் சுவாமிநாதர் அப்புத்துரை

(முன்னாள் ஒப்பந்தகாரர் - சாவகச்சேரி நகரசபை, பிரதேசசபை)

திதி: பஞ்சமி

எங்கள் இல்லத்தின் ஒளி விளக்காய்
எங்கள் வாழ்வின் விடிவிளக்காய் திகழ்ந்து
எங்கள் இல்வாழ்வுக்கு நல்வழி காட்டிய
எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள்
எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்டு ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மைவிட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

வீரவாணி, புத்தூர். (99457)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்கள் தொடர்பில் அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை

## அங்கு சென்று பார்வையிட்ட ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கிளிநொச்சி,ஜூன்16

ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் வன்னிப் பகுதிக்கு விஜயம் செய்தனர். நேற்றுமுன்தினம் அவர்கள் வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு சென்று அங்கு மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களை சந்தித்து உரையாடியதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரம் தெரிவித்தார்.

யுத்தம் நிறைவடைந்து 13 மாதங்கள் கடந்த பின்னரும் வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்கள் தொடர்பில் அரசாங்கம் எந்த நடவடிக்கையினையும் மேற்கொண்டிருக்கவில்லை என்பது இந்த விஜயத்தின் போது அவதானிக்க முடிந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாம் இடம்பெயர்ந்த மக்களை சந்தித்த வேளையில் காணாமல்போனவர்களின் பெற்றோர்களும் உறவினர்களும் தம்மிடம் கதறி அழுததாக அவர் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்களைக் கண்டுபிடித்துத் தரும்படி தம்மிடம் அவர்கள் கோரியதாக குறிப்பிட்ட அவர், அவர்கள் அனைவரும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே காணாமல் போனோரின் உறவினர்களை கொழும்பில் சந்தித்தமைக்காக, தாம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமையும் சந்திரசேகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் அவர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து எதிர்காலத்தில் நாடாளுமன்றித்திலும், அதற்கு வெளியிலும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க ஜே.வி.பி தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (50)

## கடும் காற்றினால் மரங்கள் முறிந்தன

கிளிநொச்சியில் பல்வேறு பிரதேசங்களிலும் கடந்த 11 ஆம் திகதி வீசிய கடும் காற்றினால் பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

வட்டக்கச்சி பிரதான வீதியில் சந்தையடிக்கு அண்மையில் நாவலடிப் பகுதியில் பெரிய மரம் ஒன்று முறிந்து வீதியின் குறுக்காக வீழ்ந்துள்ளதால் இப்பகுதியூடான போக்குவரத்தில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

மரம் முறிந்து 6 நாள்கள் ஆகியும் இது இன்னும் அகற்றப்படாமையால் பயணிகள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (50-405)

வன்னி வலம்

# வட்டக்கச்சி ஐயப்பன் கோயிலில் 21 ஆம் திகதி நித்திய பூசை ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூன்16

வட்டக்கச்சி அருள்மிகு சபரி ஐயப்பன் திருக்கோயில் பிராயச்சித்த அபிஷேகமும் மணவாளக் கோல சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று நித்திய பூசைகள் ஆரம்பமாகவுள்ளன. அத்துடன் 23 ஆம் திகதி மணவாளக் கோல சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. இவற்றை முன்னிட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி மாலை 6 மணிக்கு விக்னேஸ்வர பூசையும் வாஸ்து சாந்தி, கிராமசாந்தி என்பன நடைபெற்று கணபதி ஓமம், நவக்கிரக ஓமம் என்பனவும் நடைபெறவுள்ளன.

இப்பூசைகளில் ஐயப்பன் அடியார்களை கலந்துகொண்டு அருள் பெறுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (50-405)

# காரிருளில் மூழ்கிக் கிடக்கும் மன்னார் பேருந்து நிலையம்

மன்னார்,ஜூன்16

மன்னாரில் தற்போது இயல்பு வாழ்க்கை வழமைக்குத் திரும்பி விட்டது. இரவு முழுவதும் பேருந்துகள் ஓடித்திரிகின்றன. ஆயினும் மன்னார் அரச பேருந்து நிலையம் மட்டும் இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. மாறாக தனியார் பேருந்து நிலையத்திலும் சுற்றுப் புறங்களிலும் பிரகாச விளக்குகள் எரிகின்றன.

மன்னாரில் இரவு 12 மணிவரையில் கொழும்புக்கான பேருந்துகள் செல்கின்றன. அதேபோல் அதிகாலை 4 மணிக்கே தங்கள் சகல சேவைகளையும் ஆரம்பிக்கின்றன.

இந்த நிலையில் பல நூற்றுக்கணக்கில் பிரயாணிகள் பேருந்து நிலையத்திற்கு வருகின்றனர். ஆயினும் அவர்கள் இரவில் அங்கு நிற்க அஞ்சுகின்றனர். அரச பேருந்து நிலையத்தில் இளைஞர்களதும், முடிச்சுமாறிகளதும், மதுப்பிரியர்களினதும் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

இதைக் காவல் அதிகாரிகள் உட்பட எவருமே கண்டு கொள்வதில்லை. இதன் விளைவாகப் பெண் பயணிகள் அனேகமாக தங்கள் பிரயாணங்களைப் பகல் வேளையிலேயே வைத்துக் கொள்கின்றனர். (50-80)




கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. 15 வயதுப் பெண்களுக்கான வலைபந்தாட்டத்தில் இரண்டாம் இடத்தையும், 19 வயதுப் பெண்களுக்கான கபடியில் மூன்றாம் இடத்தையும் 19 வயது ஆண்களுக்கான கபடியில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்ட கிளிநொச்சி மத்திய கல்லூரி அணிகளை முறையே படங்களில் காணலாம். (படங்கள் : கிளிநொச்சிச் செய்தியாளர்)

## கிளி. மத்திய கல்லூரி வீரர்களுக்கு விளையாட்டுச் சீருடை அன்பளிப்பு

கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆண்கள் கபடி அணியினருக்கான சீருடைகள் கல்லூரியின் பழைய மாணவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

கல்லூரியில் எட்டு அணிகள் மாவட்ட மட்டப் போட்டிகளில் வென்று வட மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள நிலையில் மாணவர்களுக்கான சீருடைகள் தேவையாக உள்ளதாக கல்லூரியின் நிர்வாகம் கோரிக்கை விடுத்திருந்தது. இதனையடுத்து உடனடியாக நேற்றுமுன்தினம் 20 சீருடைகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

கல்லூரியின் 2002/2003 கல்வி ஆண்டில் ஜி.சி.ஈ. உயர்தரத்தில் கற்ற பழைய மாணவர்களின் பங்களிப்பிலேயே கபடி அணிகளுக்கான சீருடைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

கபடி அணியும் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-405)

# மன்னார் மாவட்ட உள்ளூராட்சிச் சபைகள் 'நெல்சிப்' மூலம் அபிவிருத்தி எய்த வேண்டும்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கோரிக்கை

மன்னார்,ஜூன்16

மன்னார் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள் 'நெல்சிப்' என்ற வடக்கு - கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு பிரதேச அபிவிருத்தி எய்தப்பட வேண்டும்.

அதற்கேற்ற வகையில் அனைத்து உள்ளூராட்சி சபை செயலாளர்களும் துரிதமாகச் செயற்பட வேண்டும்.

மன்னார் மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ர.அன்ரன்துரம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, மன்னார் பிரதேசசபை என்பனவற்றுடன் மன்னார் நகர சபை ஆகிய 5 உள்ளூராட்சி சபை களும் மிகவினைத்திறனாக செயற்பட்டு உலக வங்கியினால் வழங்கப்படவுள்ள 200 மில்லியன் ரூபாவினை ஒவ்வொரு சபைகளும் பெறப்பட வேண்டும்.

இதன் ஊடாக இதுவரை எய்தப்படாத வீதி, சுகாதாரம், மின்சாரம், குடிதண்ணீர், சனசமூக நிலையம், முன்பள்ளி மற்றும் பொதுநோக்கு மண்டபம் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியதாக இருக்கும்.

எனவே அனைத்து உள்ளூராட்சி சபைகளும் கொத்தணி ரீதியான கூட்டங்களை உடன் ஆரம்பித்து அதனூடாக திட்டங்களை வரிசைப்படுத்தி முன்னிலைப் படுத்த வேண்டும் என்றார். (50-302)

# கிளி.மத்திய கல்லூரி மைதானம் இராணுவத்தினரால் புனரமைப்பு

கிளிநொச்சி,ஜூன்16

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் மைதானப் பகுதி இராணுவத்தினரால் சுத்தப்படுத்தப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது. புல்டோசர் மூலம் இராணுவத்தினர் இப்பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி கிளிநொச்சிப் பகுதி மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கான இடைத்தங்கல் முகாமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இம்மாத ஆரம்பத்தில் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மைதானத்தின் தென்பகுதியில் தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு அதில் இயங்க ஆரம்பித்துள்ளது. எனினும் இடைநிலைப் பிரிவு வகுப்புக்கள், ரீ.ஆர்.ரெக் மற்றும் கிளி.ரெக் வளாகத்தில் இயங்கிவருகின்றது.

இந்த இடைநிலைப் பிரிவினை மைதானத்தின் வடபகுதியில் தற்காலிகக் கொட்டகைகள் அமைத்து ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக கூறப்படுகின்றது. (50-405)

# கிளிநொச்சி - வட்டக்கச்சி பிரதான வீதி திருத்தப்படாமையால் பயணிகள் சிரமம்

கிளிநொச்சி,ஜூன்16

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி இராமநாதபுரம் செல்லும் பிரதான வீதி திருத்தப்படாதுள்ளதால் அவ்வீதியூடாக பயணம் செய்யும் பயணிகள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வீதியூடாக வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதிக்குமட்டுமல்லாது கல்மடு ஊடாக தருமபுரம் மற்றும் விசுவமடு பகுதிக்கும் பேருந்து சேவைகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வீதியூடாகப் பல பேருந்துசேவைகள் நடைபெறுவதுடன் தனியார் வாகனங்களும் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. அத்துடன் தென்பகுதி வர்த்தகர்களது வர்த்தக வாகனங்களும், இராணுவ வாகனங்களும் போக்குவரத்துச் செய்கின்றன.

இந்தவீதி யுத்தத்திற்கு முன்னர் வட்டக்கச்சிவரை கிரவல் இடப்பட்டு தார் இடப்பட்டிருந்தது. தற்போது இந்த இடத்தில் தார் அகன்றுள்ளதால் குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன் வீதி புழுதியாகவும் காணப்படுகின்றது. இதனால் இவ்வீதியூடாக சைக்கிள், மோட்டார்சைக்கிள்களில் செல்வோரும் நடந்து செல்வோரும் நிறம் மாறியே பயணிக்கவேண்டியுள்ளது. இதனால் வேலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள்,பணியாளர்களும் பாடசாலை மாணவர்களும் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் வீதிக்கு அருகில் குடியிருப்போரும் கிரவல் குளியலுக்கு உள்ளாக வேண்டியுள்ளது.

இந்த வீதி மட்டுமல்லாது ஏ-9 வீதி தவிர்ந்த ஏனைய வீதிகளில் அனேகமானவை இந்நிலையிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது. சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதி திருத்தப் பணிகளை துரிதப்படுத்தி உதவவேண்டும் என மக்கள் கோருகின்றனர். (50-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணத்துக்கு விஜயம்மேற்கொண்டுள்ள இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜென்ஸ் புளொட்னர் யாழ். அரச அதிபரை நேற்று யாழ். செயலகத்தில் சந்திக்க வந்திருந்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவரை அரச அதிபர் கைலாகுகொடுத்து வரவேற்பதையும் செயலகத்தில் இருவரும் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : சுகந்தன்)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நிக்கொட் திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றும் திரு.இராமநாதன் சிவரூபன் அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் சரவணமுத்து இராமநாதன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக் கழகம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி/568391)

## கண்ணீர் அஞ்சலி



எமது உற்ற குடும்ப நண்பர்
திரு.சண்முகசுந்தரம்
(செல்லமுத்தூஸ்)
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**சுப்பிரமணியம் செல்லமுத்து**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வராஜா குடும்பம்,
கென்ஸ்மன் லேன்,
சாவகச்சேரி.

மணிவர்ணன் குடும்பம்,
வாணி ரெக்ஸ்,
யாழ்ப்பாணம்.

(சி/568394)

## சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம் (வ.து) சுன்னாகம்
## வெற்றுபரல் விற்பனை

எமது சங்கத்தில் 100 வெற்றுபரல்கள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர், சங்க வேலை நாள்களில் பரல்களைப் பார்வையிட்டு, தங்கள் விண்ணப்பங்களை 25.06.2010க்கு முன்னர் பொது முகாமையாளர், சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்
சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம், சுன்னாகம்.

(சி/568396)

## யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
## நூற்றாண்டு 1910–2010
## நூற்றாண்டு முத்திரை வெளியீடு





**இடம்:**
பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்,
யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

**நாள்:**
18.06.2010 வெள்ளிக்கிழமை

**காலம்:**
மு.ப 10.00 மணி

**தலைமை**
திருமதி சிவமலர் அனந்தசயனன், அதிபர், யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

**முதன்மை அதிதி**
கௌரவ. ஜீவன் குமாரணதுங்க, நா.உ. தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர்

**சிறப்பு அதிதிகள்**
திரு. எம்.கே.ரி. பிரநாயக்க, தபால் மா அதிபர்
திரு. ஜே.எம்.டி.என். அஸ்நேசன், பணிப்பாளர், முத்திரைப் பணியகம், அஞ்சல் திணைக்களம்.

**கௌரவ அதிதிகள்**
பேராசிரியர் நா. சண்முகலிங்கன்
மகாஜனன் 1960–1972 – துணை வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வைத்தியகலாநிதி ச. சிறி பவானந்தராஜா
மகாஜனன் 1970–1980 – பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை.

பாடசாலைச் சமூகம்,
யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

[சி/568392]

## காணி தேவை

யாழ் நகரில் அல்லது அண்மித்த கரையோரப் பகுதியில் ஹோட்டல் நிர்மாணத்திற்கான காணி தேவை. மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் வசதிகள் இருத்தல் வேண்டும். காணியின் விஸ்தீரணம், அமைந்துள்ள இடம் மற்றும் உத்தேசவிலை என்பவற்றுடன் காணியின் படப்பிரதி ஒன்றையும் உடனடியாக எமக்கு அனுப்பிவைக்கவும். கடித உறையின் முற்பக்கத்தின் இடதுபக்க மேல் மூலையில் "LAND FOR HOTEL PROJECT" என எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு உடன் அனுப்பி வைக்கவும்.

The Advertiser
C/o Esjay Corporate Services (Pvt) Ltd.
Level - 4, No 2, Castle Lane,
Colombo - 4.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க
நியூட்டன் /குமார்
தொ.பேசி : 5444420/21
ETN. 517 or 507

## வீடு வாடகைக்குத் தேவை

மூன்று பேர்கொண்ட, அரச தொழில் புரிபவருக்கு யாழ்.நகருக்கும் நல்லூருக்கும் இடையில் வீடு வாடகைக்குத் தேவை. முற்பணமும் வாடகையும் கொடுக்கப்படும். தொடர்பு: 0771751318


## கால் நூற்றாண்டாக திருத்தப்படாத வீதி

யாழ்ப்பாணம்,ஜூன் 16

கடந்த 25 ஆண்டுகளாகத் திருத்தப்படாத நிலையில் மோசமாகக் காணப்படும் புங்குடுதீவிலுள்ள பெருங்காடு- இறுப்பிட்டி வீதிக்கு விடிவுகாலம் பிறக்காத என இப்பகுதி மக்கள் ஏக்கம் வெளியிட்டுள்ளனர்.

இந்த வீதியின் மோசமான நிலை காரணமாக இதனூடாக பஸ் சேவைகள் நடைபெறுவதில்லை. இதனால் பாடசாலை மாணவர்கள் சுமார் மூன்று மைல் தூரம் நடந்து தமது பாடசாலைகளுக்குத் தாமதமாகச் செல்ல வேண்டிய அவல நிலையில் உள்ளனர். இதனைத் திருத்துவதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டபோதும் இதுவரை வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. இனியும் தாமதிக்காது இந்த வீதியைப் புனரமைத்து இப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கு உதவவேண்டும் என்பதே பலரினதும் வேண்டுகோள் ஆகும். (க-111)

## அச்சிட்ட படிவங்கள் வந்து சேர்ந்தன

யாழ்.மாவட்ட கல்வி வலய அலுவலகங்களில் நீண்டகால மாக தட்டுப்பாடாக இருந்த திணைக்கள அச்சிட்டபடிவங்கள் அண்மையில் வந்துள்ளன.

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினர் அண்மையில் கொழும்பில் உள்ள அரச அச்சகத்திற்குச் சென்று தேவையான படிவங்களைக் கொள்வனவு செய்து கொண்டு வந்து ஏனைய வலயங்களுக்கும் விநியோகித்ததால் படிவங்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டு ஓரளவு நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. படிவங்கள் தட்டுப்பாடாக இருந்த காலத்தில் வலய அலுவலகங்களில்றோணியோசெய்யப்பட்ட படிவங்கள் [illegible] தெரிவிக்கப்பட்டது. (50-207)

## தற்காலிக பஸ்தரிப்பிடத்தை அமைத்த படையினர்

சாவகச்சேரி,ஜூன்16

தென்மராட்சி ஏ-9 வீதி இராமாவில் நலன்புரி நிலையச் சந்தியில் படையினரும் நலன்புரி நிலைய தொண்டர்களும் இணைந்து வீதியின் இரு புறமும் தற்காலிக பஸ்தரிப்பு நிலையங்களை அமைத்துள்ளனர். (50-131)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற எமது நிறுவன ஆசிரியர்களான



திரு.மகாலிங்கம் சுதன்
B.com



திரு.செல்லன் குகன்
B.A (Hons)

ஆகியோரை பாராட்டி வாழ்த்துவதுடன் மென்மேலும் பல பட்டங்கள் பெற்று பார் போற்ற பல்லாண்டுகாலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

நாவலடி வீதி,
திருநெல்வேலி.

[99515]

ஒக்ஸ்போட் அக்கடமி
ஆசிரியர்கள், மாணவர்கள்.

## கொக்குவில் நந்தாவில்
## கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய
## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

- 16.06.2010 புதன்கிழமை முற்பகல் 10.30மணிக்கு கொடியேற்றம்.
- 18.06.2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு வசந்தமண்டபப்பூஜை - அதனைத் தொடர்ந்து அம்பாள் மஞ்சத்தில் திருவீதியுலா
- 22.06.2010 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு வசந்தமண்டபப் பூஜை - அதனைத் தொடர்ந்து அம்பாள் கைலாயவாகனத்தில் திருவீதியுலா
- 24.06.2010 வியாழக்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு வசந்தமண்டபப் பூஜை - அதனைத் தொடர்ந்து அம்பாள் சப்பறத்தில் திருவீதியுலா
- 25.06.2010 வெள்ளிக்கிழமை காலை 7.00மணிக்கு வசந்தமண்டபப் பூஜை - அதனைத் தொடர்ந்து இரதோற்சவம் (தேர்வீதியுலா) நடைபெறும்.
- 26.06.2010 சனிக்கிழமை காலை 6.30மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

நந்தாவில்,
கொக்குவில்.

ஆலயபரிபாலன சபையினர்.

TNT sure we can

## உலகளாவிய துரித தபால், பொதிகள் சேவை



பிரான்ஸ், லண்டன், கனடா, ஜேர்மனி, நோர்வே, இத்தாலி மற்றும் உலகின் எப்பாகத்துக்கும் துரித கதியில் மூன்று நாள்களில் பாதுகாப்பாக உங்கள் உறவினர்களிடம் நேரடியாக ஒப்படைக்கப்படும்.



யாழ் காரியாலயம்
56/15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம் (சம்பத் வங்கி அருகாமை)
தொலைபேசி இல. 021 222 3771, 021 5677000, 0722467247
e-mail : acejaffna@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற வவுனியா றம்பைக்குளம் அரசினர் மகா வித்தியாலயம், 2ஆம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரி, 3ஆம் இடத்தைப்பெற்ற இளவாலை புனித கன்னியர் மடம் மகாவித்தியாலய அணிகளைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

## வடமாகாண வலைப்பந்தாட்டம்

# யூனியன் கல்லூரியின் விறுவிறுப்பான ஆட்டம்; வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிச் சென்றது!

வடமாகாணக் கல்வித் திணைக்களம் மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் 19 வயதுப் பிரிவினருக்காக நடத்திய வலைப் பந்தாட்டப் போட்டியில் சம்பியனானது தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும் மோதின.

ஆட்டம் ஆரம்பமானது முதல் இறுதி வரை யூனியன் கல்லூரியின் கையே மேலோங்கியிருந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் வீரர்கள் யூனியன் கல்லூரி வீரர்களுக்கு ஈடுகொடுத்து ஆடிய போதும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் சோமஸ்கந்தா அணியினர் உற்சாகமிழந்த வர்களாகவே ஆடினர்.

யூனியன் கல்லூரி முதல் பாதி ஆட்டத்தை 16:12 புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாகவும் வேகமாகவும் அமைந்தது. யூனியன் கல்லூரி அதிவேகமாகப் புள்ளிகளைப் பெற்றது. 24:08 புள்ளிகள் அடிப்படையில் இரண்டாம் பாதி ஆட்டத்தைக் கைப்பற்றியது.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 40:20 எனும் புள்ளிகள் அடிப்படையில் புத்தூர் சோமஸ்கந்தவை வென்று சம்பியனானது. (6-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

### ரேஞ்சர்ஸ் வி.கவுக்கு இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் இரண்டாமிடத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் பெற்றுக்கொண்டது. (6)

## ஜனாதிபதியின் பணிப்பில் வடமாகாண கல்வி வலயங்களின் விளையாட்டு விழா

### 27 ஆம், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில்

வலி. வடக்கு, ஜூன் 16

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் வடமாகாண கல்வி வலயமட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் எதிர் வரும் 27 ஆம் திகதியில் இருந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இப் போட்டிகளில் பெரு விளையாட்டுக்களான ஆண்கள், பெண்களுக்கான உதைபந்தாட்டம், கிரிக்கெட், எல்லே, கபடி, கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மேசைப் பந்தாட்டம், பூப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இத்துடன் 17,19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் வடமாகாண ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடைபெற்ற உதைபந்தாட்டம், கிரிக்கெட்போட்டிகளில் வெற்றிபெற்ற யாழ்.மாவட்ட அணிகளின் வீரர்களுக்கு பெருந்தொகைப்பணம் பரிசாக வழங்கப்பட்டமையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

அவைகள் உரியமுறையில் வீரர்களுக்கு வழங்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளமையும் சுட்டிக்காட்ட வேண்டியதாகும். (6-86)

## வடமாகாண கல்வித் திணைக்களத்தின் எல்லேப் போட்டிகளில் மோதும் அணிகள்

வலி. வடக்கு, ஜூன் 16

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் மன்னார் புனித வளனார் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.
* கிளிநொச்சி பூநகரி மகாவித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு முதலாம் இடம்பெற்ற பாடசாலை.
* வவுனியா இந்துக் கல்லூரி எதிர் மன்னார் அடம்பன் மத்திய மகாவித்தியாலயம்.
* முல்லைத்தீவு மூன்றாம் இடம்பெற்ற பாடசாலை எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
* வவுனியா பூவரசங்குளம் மகா வித்தியாலயம் எதிர் மன்னார் பாத்திமா மத்திய மகாவித்தியாலயம்.
* கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு இரண்டாம் இடம்.
* கிளிநொச்சி மத்திய கல்லூரி எதிர் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம்.
* இரண்டாம் சுற்றில் இருந்து கொக்குவில் இந்துக் கல்லூரி மோதவுள்ளது.

(6-86)

## மாவட்ட செயலகத்தின் கபடிப்போட்டி

# எவர் வெல்வர் என ரசிகர்கள் பரபரக்க இரு புள்ளிகளால் சம்பியனானது பருத்தித்துறை பி.செ.

வலி.வடக்கு, ஜூன் 16

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான கபடிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி சம்பியனானது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் ஒரு அணிக்கு மற்றைய அணி சளைத்தவர்கள் இல்லையென் பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி ஆதிக்கம் செலுத்திய போதிலும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியின் கைகள் ஓங்கின.

முதல் பாதி ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 12:10 புள்ளிகள் என்று முன்னிலை வகிக்க ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகிய சிலநிமிட நேரத்தில் தெல்லிப்பழை வீராங்கனை ஒருவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியின் கைகள் மேலோங்கத் தொடங்கின.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 19:15 புள்ளிகள் முன்னிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 29:27 புள்ளிகள் என்ற அடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை வெற்றிபெற்று யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (6-86)

## வடமாகாண மென்பந்துக் கிரிக்கெட் இன்றும் நாளையும் மோதும் அணிகள்

வலி.வடக்கு, ஜூன் 16

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* வேலணை மத்திய கல்லூரி எதிர் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்.
* கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு மூன்றாம் இடம்.
* யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் முல்லைத்தீவு இரண்டாமிடம்.
* மன்னார் பாத்திமா மத்திய மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி பளை மகாவித்தியாலயம்.
* வவுனியா பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயம் எதிர் மன்னார் சென் சேவியர் ஆண்கள் கல்லூரி.
* முல்லைத்தீவு முதலாம் இடம்பெற்ற பாடசாலை எதிர் கிளிநொச்சி ஜெயபுரம் மகாவித்தியாலயம்.
* வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம், எதிர் மன்னார் சென்ஜோசேப் வாஸ் மகாவித்தியாலயம்.
* இரண்டாம் சுற்றில் இருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மோதவுள்ளது.

(6-86)

## செயலகத்தின் ஹொக்கிப் போட்டி; அரையிறுதியாட்ட முடிவுகள்

வலி.வடக்கு , ஜூன் 16

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான ஹொக்கிச் சுற்றுப் போட்டிகளின் அரையிறுதி ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:

சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணிக்கும் கோப்பாய் பிரதேச செயலக அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் கோல்கள் போடாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு அடிகளைத் தொடர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 2:1 என்ற கோல் கணக்கில் கோப்பாய் பிரதேச செயலக அணியை வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை பிரதேச செயலக அணிக்கும், கரவெட்டி பிரதேச செயலக அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 01:00 என்ற கோல் கணக்கில் கரவெட்டி பிரதேச செயலக அணியை வெற்றிபெற்றது. (6-86)

## இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு,ஜூன் 16

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டக் கல்வி வலய அணிகளுக்கு இடையிலான ஹொக்கிப் போட்டியில் இன்று யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும் ஆண்களுக்கான போட்டியில் மோதும் அணிகள் வருமாறு:

* மன்னார் புனித வளனார் றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலை எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
* யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி. (6-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

# டக்ளஸ் குற்றவாளியெனத் தெரிந்தும் தீர்ப்பு வரட்டும் பார்க்கலாம் என்பதா?

## அமைச்சர் சிதம்பரத்துக்கு பா.ஜ.க. கடும் கண்டனம்

சென்னை,ஜூன் 16

இலங்கைத் தமிழர் எதிர்ப்பு நிலையை மத்திய அரசு கைவிட வேண்டும். இதனை மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் - என்று தமிழகப் பா.ஜ.க கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன், டக்ளஸ் தேவானந்தா குற்றவாளி எனத் தெளிவாகத் தெரிந்தும், தீர்ப்பு வரட்டும் பார்க்கலாம் என்று ப.சிதம்பரம் கூறியிருக்கின்றமை கண்டனத்துக்குரியது - என்று பா.ஜ.கவின் மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழ்நாட்டிலேயே தமிழர் ஒருவரைச் சுட்டுக் கொன்ற குற்றவாளி டக்ளஸ் தேவானந்தா. அவர் இப்போது பொலிஸாரின்



நடவடிக்கையிலிருந்து தப்பித்து கொழும்பு சென்றுவிட்டார். மத்திய அரசால் தப்பிக்க வைத்து, அனுப்பப்பட்டுள்ளார் என்பதே சரியானதாகும்.

டக்ளஸ் தேவானந்தா பற்றிய தகவல் டில்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது என தமிழகப் பொலிஸ் துறைத் தலைவர் கூறியிருக்கிறார். ஆனால், தேவானந்தா குறித்து டில்லிக்கு எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறியிருக்கிறார்.

டக்ளஸ் தேவானந்தாவை கைதுசெய்ய வேண்டும் என்று கோரி தொடரப்பட்ட வழக்கு உயர் நீதிமன்றத்தில் உள்ளது.

இந்நிலையில் அவருடன் பிரதமர் மன்மோகன் சிங் கை குலுக்கியுள்ளார். அவர் கொழும்புக்கு திரும்பிச் சென்றுள்ளமை ஒரு குற்றவாளியைத் தப்பிக்க வைக்கும் மத்திய அரசின் உள்நோக்கத்தை தெளிவாகக் காட்டுகிறது.

டக்ளஸ் தேவானந்தா குற்றவாளி என தெளிவாகத் தெரிந்தும், தீர்ப்பு வரட்டும். பார்க்கலாம் என்று ப.சிதம்பரம் கூறியிருக்கின்றமை கண்டனத்துக்குரியது.

தமிழர்களுக்கு என்ன அநீதி இழைக்கப்பட்டாலும் அதைப் பற்றி சிறிதும் கவலைப்படாத மத்திய அரசு இப்போதுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து சென்ற தமிழ் அமைச்சர்களும் அவ்வாறுதான் உள்ளனர். இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு துணை போயிருக்கும் மத்திய அரசு, தமிழர்களுக்கு வீடு கட்ட நிதியுதவி அளிக்கப்படும் என்று இப்போது கூறியிருக்கிறது.

இதற்கு முன்பு அளிக்கப்பட்ட ரூபா 1000 கோடி தமிழர்களுக்காகச் செலவிடப்பட்டதாகத் தெரியவில்லை. அதைப் பற்றிய தெளிவான விவரங்களைப் பெற மத்திய அரசு முயற்சிக்கவில்லை. இந்நிலையில் தமிழர்களின் பெயரில் கொடுக்கப்படும் பணம், அவர்களுக்குத்தான் பயன்படும் என்ற உத்தரவாதம் எதுவும் இல்லை.

தொடர்ந்து தமிழர் எதிர்ப்பு நிலையையே மத்திய அரசு எடுத்து வருவது மிகவும் கண்டிக்கத்தக்கது. இந்தத் தமிழர் எதிர்ப்பு நிலையை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதனை மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்.

இந்த நிலையிலும் இப் பிரச்சினையில் முதல்வர் கருணாநிதி பாராமுகமாக இருப்பது நல்லதல்ல. எனவே, இவ்விடயத்தில் கருணாநிதி உடனே தலையிட வேண்டும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விழுப்புரம் குண்டுவெடிப்பு வழக்கு: விரைவில் குற்றவாளிகள் கைதாவர்

## உளவுத்துறை தெரிவிப்பு

விழுப்புரம் அருகே ரயில் தண்டவாளம் வெடிகுண்டு வைத்து தகர்க்கப்பட்ட வழக்கு விசாரணை சரியான பாதையில் செல்வதால் விரைவில் குற்றவாளிகள் கைதுசெய்யப்படுவார்கள் - என்று உளவுத்துறை ஐ.ஜி.ஜாபர்சேட் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் அருகே சித்தணியில் கடந்த 12 ஆம் திகதி வெடிகுண்டு வைத்து ரயில் தண்டவாளம் தகர்க்கப்பட்டது.

இதுகுறித்த வழக்கு, சட்டம் - ஒழுங்கு பொலிஸாரிடமிருந்து கியூ பிரிவுப் பொலிஸாருக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில் விழுப்புரம் டி.ஐ.ஜி. அலுவலகத்தில் உளவுத்துறை ஐ.ஜி. ஜாபர்சேட் தலைமையில், ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் ஜாபர்சேட் கூறுகையில்,

தனிப்படை அமைக்கப்பட்டு 33 பேரிடம் இதுவரை விசாரணை நடந்துள்ளது. விசாரணை சரியான பாதையில் செல்வதால் விரைவில் குற்றவாளிகள் பிடிபடுவர்- என்றார்.

## இந்தியச் செய்திகள்



தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பாதுகாப்புப் பணிக்காக வெளி மாவட்டத்தில் இருந்து கோவை வந்துள்ள பொலிஸ் மோப்ப நாய்களுக்கு ரயில் நிலையத்தில் நேற்றுமுன்தினம் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டபோது....

# இந்திய - இலங்கை ஒப்பந்தங்களை எதிர்த்து தமிழகமெங்கும் போராட்டம்

## தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி அறிவிப்பு

சென்னை,ஜூன்16

இந்திய - இலங்கை அரசுகள் புதிதாகச் செய்துள்ள ஒப்பந்தங்களைக் கண்டித்து தமிழகமெங்கும் நாளைமறுதினம் 18 ஆம் திகதி ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் - என்று தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் தலைமைச் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

ஈழத்தமிழர்களுக்கெதிரான ஐந்தாம் கட்டப்போரை இலங்கையும், இந்தியாவும் புதிய முறையில் தொடங்கியுள்ளன என்பதற்கான அடையாளம்தான் மன்மோகன் சிங் - மஹிந்த ராஜபக்ஷவின் உடன்பாடுகள்.

புதுடில்லியில் சிவப்புக் கம்பளம் விரித்து மஹிந்தவை வரவேற்ற இந்தியா கடந்த 9 ஆம் திகதி இலங்கையுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் ஈழத்தமிழர் தாயகத்தைப் பறிப்பதையும், ஈழத்தமிழ் இனத்தைச் சிதைத்துச் சின்னா பின்னமாக்கி விரட்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

இந்தியாவும், இலங்கையும் போர்படைகளைப் பரிமாற்றிக் கொள்ளவும் சிங்களப் படையினருக்கு இந்தியா உயர்தரப் பயிற்சி அளிக்கவும் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

பலாலி விமானப் படைத்தளத்தை மேலும் வலுப்படுத்திக் கொடுக்க இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது. இத்தனை போர்த் தயாரிப்புகளும் எந்தப் பகை நாட்டிற்கு எதிராக? இலங்கையில் இந்தியாவும் சிங்கள அரசும் ஈழத்தமிழர்களைத்தான் ஒரே பகை சக்தியாகக் கருதுகின்றன.

இந்தியா தனது துணைத் தூதரகங்களை யாழ்ப்பாணத்திலும் அம்பாந்தோட்டையிலும் திறக்க உடன்பாடு போட்டுள்ளது. அந்தச் சுண்டைக்காய் நாட்டிற்குக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் போதாதா? தமிழர் தாயகப் பகுதிகளில் தூதரகப் பெயரில் படை சார் உளவுப் பிரிவுகளை நிறுத்துவதுதான் இந்தியாவின் நோக்கம்.

தமிழகத்திலிருந்து கடல் வழியாக இலங்கைக்கு மின்சாரம் வழங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது. இதனால் நெய்வேலி மின்சாரத்தை இலங்கைக்கு அனுப்பக்கூடிய ஆபத்துள்ளது. பண்பாட்டுப் பரிமாற்றம் என்ற பெயரில் சிங்களப் பண்பாட்டையும், பௌத்த மதத்தையும் ஈழத்தில் திணிப்பதும் சிங்களக் குடியேற்றங்களை அங்கு அதிகப்படுத்துவதும்தான் நடந்து வருகின்றன.

எனவே, இந்திய அரசும் இலங்கை அரசும் செய்துள்ள ஒப்பந்தங்கள் ஒவ்வொரு தமிழரையும் இராணுவக் கண்காணிப்பின் கீழ்வைத்து, உரிமைக்குக் குரல் கொடுப்போரை நசுக்கவே பயன்படும்.

இந்த ஒப்பந்தங்களை நீக்க வலியுறுத்தி தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமிழகமெங்கும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்நீதிமன்றில் வழக்காடும் மொழியாக தமிழ் விளங்க கருணாநிதி நடவடிக்கை

## துரைமுருகன் உறுதியளிப்பு

உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக விளங்க அனைத்து நடவடிக்கையையும் தமிழக அரசு விரைந்து மேற்கொள்ளும் - என்று அமைச்சர் துரைமுருகன் உறுதி அளித்துள்ளார்.

நீதிமன்றத்தில் தமிழை வழக்காடும் மொழியாக்கக் கோரி, மதுரையில் சட்டத்தரணிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டத்தைக் கைவிடக் கோரி அமைச்சர் துரைமுருகன் செய்திக்குறிப்பு மூலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விடுத்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

உயர் நீதிமன்றத்தில் தமிழ் அங்கீகாரம் பெற்ற வழக்காடு மொழியாக இருக்க வேண்டுமென்பதற்காக தமிழக சட்டப் பேரவையில் கடந்த 2006 ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் திகதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் நீதித்துறைக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. இதன்மீது மத்திய அரசு விரைவில் நடவடிக்கை எடுத்து குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத் தர வேண்டும் என்று பிரதமர், உள்துறை அமைச்சர், சட்டத்துறை அமைச்சர் ஆகியோருக்கு முதல்வர் கடிதங்களை எழுதினார்.

அதன்பின், இந்தக் கருத்துருவை வலியுறுத்தி குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத்தர மத்திய அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க கடந்த 2008 ஆம் ஆண்டில் பெப்ரவரி, ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நினைவூட்டல் கடிதங்களை கருணாநிதி எழுதியுள்ளார்.

இதைத்தொடர்ந்து, தமிழக அரசின் கருத்துரு மத்திய அரசின் சீரிய பரிசீலனையில் உள்ளது என்று மத்திய சட்டத்துறை அமைச்சர் வீரப்பமொய்லி பதிலளித்தார். தமிழக அரசின் உள்துறை அலுவலர்கள் அளவில் மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதித்துறைக்கு தொடர்ந்து நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

- இப்படி அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழரின் உரிமையை நிலைநாட்ட தமிழில் வழக்காட அனுமதிக்குக!

## வைகோ வலியுறுத்து



சென்னை,ஜூன் 16

நீதிமன்றங்களில் தமிழை வழக்கு மொழியாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் சட்டத்தரணிகள் பகவத்சிங், நடராஜன், ராஜா, ராஜேந்திரன், எழிலரசு, பாரதி ஆகியோர் தமிழை உயர் நீதிமன்ற அலுவலக மொழியாக ஆக்கிடவும், தமிழில் வழக்காடும் உரிமை கோரியும் சாகும்வரை உண்ணாநோன்பு மேற்கொண்டுள்ளனர்.

உண்ணாவிரதம் ஆறாவது நாளாகத் தொடர்கிறது. அவர்களது கோரிக்கை நியாயமானது. அதை மறுமலர்ச்சி தி.மு.க. ஆதரிக்கிறது. அவர்களது கோரிக்கை வெற்றி அடைய வேண்டும் என்று வாழ்த்துகிறது.

தமிழை, மத்திய அரசின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாகவும், உயர் நீதிமன்றத்தில் வழக்கு மொழியாகவும் அனுமதிக்க வேண்டும் என ம.தி.மு.க. வலியுறுத்தி வந்திருக்கிறது.

ஏழு கோடித் தமிழர்களின் உரிமையை நிலைநாட்டிடும் வகையில், உடனடியாக இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிர்கிஸ்தானில் இனக்கலவரம் நீடிப்பு

# ஒரு இலட்சம் உஸ்பெக் மக்கள் அகதிகளாக வெளியேறும் நிலை!

## ஒரு கிராமமே தீக்கிரை; அகதிகள் எல்லைப் பகுதியில்

பிஷ்கெக்,ஜூன்16

கிர்கிஸ்தானில் நடைபெற்றுவரும் இனக் கலவரத்தால் ஒரு இலட்சம் உஸ்பெக் இன மக்கள் நாட்டை விட்டு அகதிகளாக வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

கிர்கிஸ்தானின் தெற்குப் பகுதியில் கிர்கிஸ் மக்களுக்கும் உஸ்பெக் இன மக்களுக்குமிடையே கடும் கலவரம் மூண்டுள்ளது. இந்தக் கலவரங்களில் சிக்கி இதுவரை 117 பேர் உயிரிழந்துள்ளனர். 1,400 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

கலவரக்காரர்களிடையே நடைபெறும் துப்பாக்கிச் சண்டையால் கிர்கிஸ்தான் நகரப் பகுதிகள் போர்க்களமாக மாறி வருகின்றன. இந்நிலையில், இந்தக் கலவரங்களிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள பல்லாயிரக் கணக்கான மக்கள் கிர்கிஸ்தானை விட்டு வெளியேறி வருகின்றனர்.

கிர்கிஸ்தானின் அண்டை நாடான உஸ்பெகிஸ்தான் எல்லைப் பகுதியில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான உஸ்பெக் இன மக்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளுமாவர்.

மேலும், அவர்களில் பலருக்கு குண்டடி காயங்கள் ஏற்பட்டுள்ளன என உஸ்பெகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. கலவரக்காரர்களின் அட்டூழியத்தால் ஒரு கிராமம் முழுவதுமே தீக்கிரையாகியுள்ளது.

ஓஷ், ஜலாலாபாத் ஆகிய பகுதிகளில் திங்கட்கிழமை தொடர்ந்த கலவரத்தால் அப்பகுதியில் உள்ள கடைகள், வர்த்தக நிறுவனங்கள் ஆகியவை தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. அங்கு நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, கலவரத்தில் ஈடுபடுபவர்களைக் கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கலவரத்தைக் கட்டுப்படுத்த, இடைக்கால ஜனாதிபதி ரோசா ஒட்டுன்பயேவா தலைமையிலான அரசு இத்தகைய முடிவை எடுத்துள்ளது.

கலவரத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள ஓஷ், ஜலாலாபாத் ஆகிய பகுதிகளில் நெருக்கடி நிலையும் ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, கலவரப்பகுதிகளில் சிக்கியுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட இந்தியர்களைப் பத்திரமாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என இங்குள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள். தக்க தருணம் கிடைக்கும்போது இந்தியர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப் படுவார்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிர்கிஸ்தானில் உள்ள ரஷ்ய விமானப் படைத் தளத்தைப் பாதுகாப்பதற்கு ரஷ்ய இராணுவச் சிப்பாய்கள் அங்கு விரைந்துள்ளனர். கலவரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ரஷ்யாவின் உதவியை இடைக்கால அரசு நாடியது. ஆனால், அரசின் கோரிக்கையை ஏற்க ரஷ்யா மறுத்து விட்டது.

## கலிபோர்னியாவில பூகம்பம்

சான்பிரான்சிஸ்கோ,ஜூன்16

. அமெரிக்க மெக்சினோ எல்லையில் அமைந்துள்ள கலிபோர்னியாவில் நேற்று செவ்வாய்க்கிழமை பூகம்பம் ஏற்பட்டது. அதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.7 புள்ளிகளாகப் பதிவானது.

பூகம்பத்தால் வீடுகள், கட்டடங்கள் ஆகியவை குலுங்கின. பீதியடைந்த மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

இந்த பூகம்பம் கலிபோர்னியாவின் மேற்கு கடற்கரையில் உள்ள ஜான்டைஜியோ நகரத்திலும் உணரப்பட்டது. சேத விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

## உலக அரங்கில்

## போபால் வழக்குத் தீர்ப்புக்கு அமெரிக்காவிலும் ஆட்சேபனை

வாஷிங்டன்,ஜூன்16

போபால் விஷவாயு கசிவு வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு இந்தியா முழுவதும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அதே போல, அமெரிக்காவிலும் எதிர்ப்பு அலைகள் கிளம்பியுள்ளன.

போபால் விஷவாயு கசிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க வழி செய்ய இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு, அமெரிக்கா வலியுறுத்த வேண்டும் என வலியுறுத்தி அமெரிக்காவிலிருக்கும் இந்திய தூதரகம் முன்பு பொதுநல ஆர்வலர்கள், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

யூனியன் கார்பைட், டோ கெமிக்கல்ஸ் நிறுவனங்களுக்கு எதிரான வாசகங்கள் தாங்கிய பதாதைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர். மேலும் யூனியன் கார்பைட் அப்போ தைய சி.இ.ஓ., வாரன் ஆண்டர்சன் மீதான வழக்கை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இந்திய தூதரகத்துக்கு எதிரே இருக்கும் காந்தி சிலை முன் ஆர்ப்பாட்டம் நடந்தது.

# 300 தலிபான் ஆதரவாளர்களை விடுவிக்க பாகிஸ்தான் இணக்கம்

இஸ்லாமாபாத்,ஜூன் 16

பாகிஸ்தானில் தலிபான் அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டு தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள 300 பேரை விடுவிக்க அரசு சம்மதித்துள்ளது.

இவர்கள் அனைவரும் மௌலான ஃபஸ்லுர் ரஹ்மான் தலைமையிலான ஜம்மியத் உலேமா-இ-இஸ்லாம் (ஜெ.யூ.ஐ.) கட்சியின் ஆதரவாளர்களாவர்.

பாகிஸ்தானில் தற்போது பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு ஆட்சி செய்கிறது. இந்தக் கூட்டணியில் ஜெ.யூ.ஐ. கட்சியும் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், தலிபான் அமைப்புடன் தொடர்பு கொண்டிருந்தமை, அந்த அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு உதவி செய்து வந்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக, கைபர் - பக்துன்குவா மாகாணத்தை சேர்ந்த இந்த 300 பேரை பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் கடந்த ஆண்டு கைதுசெய்தனர்.

இவர்கள் அனைவரும் ஜெ.யூ.ஐ. கட்சியைச் சேர்ந்தவர்கள். எனவே, அவர்களை விடுதலை செய்யவேண்டும். இல்லையெனில், அரசுக்கு அளித்துவரும் ஆதரவு வாபஸ் பெறப்படும் என அக்கட்சியின் தலைவர் ஃபஸ்லுர் ரஹ்மான் வலியுறுத்தி வந்தார்.

இதையடுத்து, அவர்கள் அனைவரையும் விடுவிக்க அரசு முடிவு செய்துள்ளது. மேலும், இஸ்லாமிய தத்துவப் பேரவைத் தலைவராக அக்கட்சியைச் சேர்ந்த மௌலானா முகமது கான் ஷீரணியை நியமிக்கவும் அரசு சம்மதம் தெரிவித்துள்ளது என எக்ஸ்பிரஸ் டிரைபியூனல் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்லாமிய தத்துவப் பேரவையின் பரிந்துரைகளைப் பின்பற்றியே பாகிஸ்தானிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் என்பது ஜெ.யூ.ஐ. கோரிக்கைகளுள் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.



பிரிட்டிஷ் மன்னர் இரண்டாம் எட்வர்ட் கால அரண்மனையின் பழைமையான (1348 ஆம் ஆண்டு முதல்) பாதுகாப்புப்படை அமைப்பில் புதிய சிப்பாய்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் அணிவகுப்பு நிகழ்ச்சியில் இரண்டாம் எலிசபெத் மகாராணியார் கலந்துகொண்டார்.

# பிரிவினைவாதக் கட்சி பெல்ஜியத்தில் வெற்றி

பிரஸ்ஸல்ஸ்,ஜூன் 16

ஐரோப்பிய நாடுகளுள் ஒன்றான பெல்ஜியத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பிரிவினைவாதக் கட்சியான, 'புதிய ப்ளமிஷ் கட்சி' வெற்றி பெற்றுள்ளது. இதனால் அந்நாடு இரண்டாகப் பிரியுமா? பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீளுமா? என்ற சர்ச்சை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

பெல்ஜியத்தின் வட பகுதியில் டச்சு மொழி பேசும் மக்களும், தென்பகுதியில் பிரெஞ்சு மொழி பேசும் மக்களும் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். நிலவியல் அடிப்படையில் வடபகுதியை 'ப்ளாண்டர்' என்றும், தென்பகுதியை 'வலோனியா' என்றும் அழைப்பர்.

கடந்த 2007இல் பிரான்ஸ் மக்களின் ஆதரவைப் பெற்ற கிறிஸ்தவ குடியரசுக் கட்சி, முற்போக்குக் கட்சி, பிரெஞ்சு சோஷியலிஸ்ட் (பி.எஸ்.,) ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து ஆட்சி அமைத்தது.

இக்கூட்டணிக்கு டச்சு மக்களின், 'புதிய ப்ளமிஷ் கட்சி'யும் தனது ஆதரவைத் தெரிவித்திருந்தது. இக்கூட்டணி அமைய அப்போது ஒன்பது மாதங்கள் தேவைப்பட்டன. இருப்பினும், இதுவரையில் மூன்று தடவைகள் இக்கூட்டணி தனது இராஜிநாமாவை ஒப்படைத்துள்ளது. அந்த அளவுக்கு அங்கு அரசியல் உச்சக் கட்ட குழப்பத்தை அடைந்துள்ளது.

'யூரோ' நாணயத்தைப் பயன்படுத்தும் 16 ஐரோப்பிய நாடுகளுள் கிரீஸ், இத்தாலி ஆகிய இரண்டு நாடுகளும் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றன. மூன்றாவது இடத்தில் பெல்ஜியம் இருக்கிறது.

இதற்கிடையில், ஜூலை 1ஆம் திகதி முதல், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை பெல்ஜியம் ஏற்கிறது.

இந்நிலையில்தான், ஆளும் கிறிஸ்தவ குடியரசுக் கட்சியின் இராஜிநாமாவுக்குப் பின்னர் சமீபத்தில் தேர்தல் நடத்தப்பட்டது. மொத்தமுள்ள 150 இடங்களில், டச்சு மக்களின் 30 சதவீத வாக்குகள் பெற்று புதிய ப்ளமிஷ் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

இக்கட்சி பெல்ஜியம் டச்சு பேசும் நாடாகவும், பிரெஞ்சு பேசும் நாடு தனியாகவும் பிரிய வேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட கட்சியாகும். இதனால் இப்போது ஐரோப்பாவில் பெல்ஜியத்தின் எதிர்கால அரசியல் பெரும் கேள்விக் குறியாக உள்ளது.

அந்நாட்டுத் தேர்தல் ஆணைக்குழுவின் விதிப்படி, கூட்டணிக்குக் குறைந்தது நான்கு கட்சிகளாவது வேண்டும். ஆனால், புதிய ப்ளமிஷ் கட்சி, கிறிஸ்தவ குடியரசுக் கட்சியுடனான கூட்டணிக்கு மறுத்துள்ளது. இதனால் கூட்டணி அமைவதில் நீண்ட கால இழுபறி நீடிக்கும் என்று கூறப்படுகிறது. அத்துடன் நாட்டின் பொருளாதாரம் மேலும் சீர் குலையும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கென்யாவில் குண்டு வெடிப்பு: 3 பேர் மரணம்; 79 பேர் காயம்!

கென்யாவில் புதிய அரசமைப்பை எதிர்த்து நடந்த பேரணியில் குண்டு வெடித்து 3 பேர் பலியாயினர். இதில் 79 பேர் காயமடைந்தனர்.

இவாஞ்சலிகல் புராடெஸ்டென்ட் தேவாலய அமைப்பினர் நைரோபியில் ஞாயிற்றுக்கிழமை இப்பேரணிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். பேரணியின் முடிவில் நைரோபியில் உள்ள உஹூரு சுதந்திர பூங்காவில் மக்களின் பிரார்த்தனை நடைபெற்றது.

அப்போது, அவர்கள் மத்தியில் இக் இடங்களில் குண்டுகள் வெடித்தன.

கென்ய பிரதமர் ரைலா ஒடிங்கா காயமடைந்த மக்களை வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டார்.

# ஏழு ஆண்டுகளுக்குப் பின் ஜப். விண்கலம் திரும்பியது

டோக்கியோ, ஜூன் 16

பூமியிலிருந்து 30 கோடி கிலோ மீற்றர் தூரத்திலுள்ள சிறிய கிரகத்துக்கு அனுப்பப்பட்ட ஜப்பானின் 'ஹயபுசா' விண்கலம் ஏழாண்டுகளுக்குப் பின்னர் பூமிக்குத் திரும்பியுள்ளது.

பூமியிலிருந்து 30 கோடி கிலோமீற்றர் தூரத்தில் 'இட்டோகவா' என்ற சிறிய கிரகம் உள்ளது. இந்தக் கிரகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய 'ஜப்பான் ஏரோஸ்பேஸ் எக்ஸ்புளோரேஷன் ஏஜென்சி' கடந்த 2003ஆம் ஆண்டு மே மாதம் 'ஹயபுசா' என்ற விண்கலத்தை அனுப்பியது.

இட்டோகவா கிரகத்தில் உள்ள மண்ணையும் கல்லையும் கொண்டு ஆராய்ச்சி செய்வதன் மூலம் சூரிய குடும்பம் தோன்றிய விதத்தைக் கண்டறிய முடியும் என ஜப்பானிய விஞ்ஞானிகள் நம்பினர். இட்டோகவா கிரகத்திலிருந்து மண்ணையும், கல்லையும் சேகரித்துக்கொண்டு 'ஹயபுசா' விண்கலம் ஞாயிற்றுக்கிழமை பூமிக்குத் திரும்பியது.

ஆஸ்திரேலியாவின் அடிலெய்டு நகரத் தருகே உள்ள ஊமரா என்ற இடத்தில் தரையிறங்கிய 'ஹயபுசா' விண்கலம், இட்டோகவா கிரகத்திலிருந்து 18 கிலோ மண்ணை உலோக உரைக்குள்( கேப்சூல்) பாதுகாப்பாக வைத்து எடுத்து வந்துள்ளது.

பல்வேறு தொழில்நுட்பக் கோளாறு காரணமாக 'ஹயபுசா' விண்கலம் மூன்று ஆண்டு காலம் தாமதமாக பூமிக்குத் திரும்பியுள்ளது.

'ஹயபுசா' விண்கலம் கொண்டு வந்துள்ள இட்டோகவா கிரக மண் மாதிரி மூலம் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப் பட உள்ளன. இதன் மூலம் சில உண்மைகள் தெரியவரும் என ஜப்பான், ஆஸ்திரேலியா, அமெரிக்க விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில்
ஆசிரியராகக் கடமையாற்றி
இலங்கை அதிபர் சேவை
தரம் III இற்குப் பதவி
உயர்வு பெற்றுச் செல்லும்

**திரு. கி.தர்மஜீலன் (B.A)**

அவர்களை மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று கல்வித்துறையில் சிறந்தோங்க வாழ்த்துகின்றோம்.

யா/ நல்லூர் காசிப்பிள்ளை
வித்தியாலயம்,
ராஜவீதி, நல்லூர். (99528) பாடசாலைச் சமூகம்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு நல்லையா**

பிறப்பு
12★06★1946
இறப்பு
08★06★2008

ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
பூர்வ பஞ்சாமி திதியும் ஆயிலியமும்
கூடிய நன்நாளில் குமரவடி
சேர்ந்து விட்டீர் கந்தன் கொடியேறும்
காலமெல்லாம் உங்கள் நினைவுகள்
என்றும் நிறைந்திருக்கும்

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
பாப்பா தோட்ட வீதி,
இணுவில் மேற்கு. (வ/568211) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



கொழும்பில் 14.06.2010 திங்கட்கிழமை அன்று காலமான

**திருமதி சுப்பிரமணியம் செல்லமுத்து**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபம் அடைகிறோம். அன்னாரை இழந்த அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நா.தெய்வேந்திரன்,
நெல்லியடி. இந்திரா கபே.

## மரண அறிவித்தல்



**சரவணமுத்து இராமநாதன்**

நீலியம்பனை, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து இராமநாதன் 14.06.2010 திங்கட்கிழமையன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்வி நாகரத்தினம், இராசநாயகம், முத்துக்குமாரசாமி மற்றும் கனகரத்தினம் ஆகியோரின் சகோதரரும் லோகேஸ்வரி (ஜேர்மனி), நந்தினி (லண்டன்), தவநிதி, சிவரூபன் (பிரதித்திட்டப் பணிப்பாளர், நிக்கொட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சண் முகேந்திரன் (ஜேர்மனி), கணேசலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் அபிராமி (சிரேஷ்ட விரிவுரையாளர், விலங்கியல்துறை, யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமனும் பிரசன்னா பிரவீண், பிரியங்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.06.2010) புதன் கிழமை நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீலியம்பனை,
மல்லாகம்.
தொ.பே. 021 224 1010

இ.சிவரூபன்
(மகன்).

### இளைஞர், யுவதிகளுக்கு மந்திகையில் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 16

பருத்தித்துறைப் பிரதேச செயலக விதாதா வள நிலையமும் கரித்தாஸ்-கியூடெக் நிறுவனமும் இணைந்து இளைஞர், யுவதிகளுக்குத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளை நடத்தவுள்ளன.

இந்தப் பயிற்சிநெறி மந்திகையிலுள்ள இளைஞர் தொழிற்பயிற்சி நிலையத்தில் கிழமை நாள்களில் நடத்தப்படவுள்ளது. பயிற்சி முடிவில் தகுதிவாய்ந்த அரச சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இக்கற்கை நெறியைப் பயில விரும்புபவர்கள் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் உள்ள விதாதா வள நிலையத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக வேலைநாள்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-6)

### கால்நடை உத்தியோகத்தர்: போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 16

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் வகுப்பு II 'ஆ' மற்றும் பயிற்சித் தரத்துக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், வவுனியாவில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனவே, அனுமதி அட்டைகள் கிடைக்காத விண்ணப்பதாரிகள் 026 3262951, 026 222 6951 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

### கைவிடப்பட்ட சைக்கிள்

யாழ்ப்பாணம், ஜூன் 16

மீசாலை வடக்கு புத்தூர் சந்திக்கு அருகில் கைவிடப்பட்ட சைக்கிள் ஒன்று அப்பகுதியில் உள்ள ஒருவரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சைக்கிளைக் கைவிட்டுச் சென்றவர் உரிய ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கண்டெடுத்தவரான வீரசிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-207)

## ST. JOHN'S COLLEGE JAFFNA OLD BOYS' ASSOCIATION ANNUAL GENERAL MEETING

The 94th Annual General Meeting of the Old Boys' Association will be held on Saturday the 26th of June 2010 at 9.00 a.m. in the College Auditorium.

**PROGRAMME FOR THE DAY**

07.00 a.m. - Holy Communion
08.00 a.m. - Service Fellowship Breakfast
09.00 a.m. - Annual General Meeting

**AGENDA**

1. Prayer
2. Vote of condolence
3. Minutes of the last AGM
4. Principals review
5. Annual report
6. Statement of accounts
7. Election of office bearers
8. Any other Business
9. College Song

10.30 a.m. - Group photograph
11.00 am. - Cricket match (Old Boys' Vs Present Boys')
12.30 a.m. - Fellowship lunch
01.30 p.m. - Cricket match (Old Boys' Vs Present Boys')
04.30 p.m. - Principals Tea
05.00 p.m. - Soccer match (Old Boys' Vs Present Boys')

Breakfast (Rs.100/-), Lunch (Rs.300/-). Tickets are available from the Treasure Mr.T.Nanthakumaran at the college till 25th of June 2010.

(c/568208) V.Sanjeev, Secretary

## வவுனியாவில் வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கும் பிரபல விருந்தினர் விடுதியான சுவர்க்கா ஹோட்டலுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்).

* முகாமையாளர் (அனுபவமுள்ளவர்)
* காசாளர் (பெண்கள்)
* கணக்காளர், வரவேற்பாளர் (பெண்கள்)
* உணவு பரிமாறுபவர்
* களஞ்சியப் பொறுப்பாளர்
* ஐஸ்கிறீம், புரூட்சலட், ஜூஸ் தயாரிப்பாளர்
* பிரதான சமையலாளர், உதவி சமையலாளர் (ஆண், பெண்)
* சைனீஸ், மேலைத்தேச உணவு தயாரிப்பாளர்
* அறைகள் சுத்திகரிப்பாளர்
* கிச்சின் உதவியாளர் (கைவேலை)

இலவசமாகத் தங்குமிட வசதியும் உணவும் வழங்கப்படும். கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும். கீழ்வரும் முகவரிக்கு நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

நெல்லியடியில்: நெல்லை முருகன் திருமண மண்டபம்
17.06.2010 வியாழக்கிழமை, மு.ப. 9-12, பி.ப. 2-5 மணிவரை.

யாழ்ப்பாணத்தில்: உதயன் கேட்போர் கூடம்
(உதயன் பத்திரிகை பணிமனை), 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
18.06.2010 வெள்ளிக்கிழமை மு.ப.9-12, பி.ப. 2-5 வரை நடைபெறும்

**தொடர்புகளுக்கு:**
**தொ.பே: 0773405396**

(99524)

## Spoken English




நவீன நுட்பங்களுடன் அடிப்படையில் இருந்து இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலலாம்.

**veta** ®
Experts in English Training
An ISO 9001:2000 Company

veta ஆசியாவில் 140 நகரங்களில் 250 கிளைகள் மூலம் ஆங்கிலத்தை பயிற்றுவிப்பதில் வல்லுநர்கள், 25 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் பேச்சுத் திறமைக்கு ஒளி விளக்காக விளங்கியவர்கள்.

veta Foundation ENGLISH — For beginners who want to read and write English.

veta Fluent English First Step — For people who are doubtful about their English and want to speak English fluently.

veta Fluent English Next Step — For sperkers of English who want to master diction and style.

**For whom ?**

உயர் கல்விகற்போர், பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்லவுள்ளோர், Student Visa க்கு விண்ணப்பிக்க இருப்போர்க்கு.

யாழில் முதன்முறையாக Online பயிற்சி பாடங்கள். (கணினி ஊடான ஒலி - ஒளி வாயிலான பயிற்சிபாடங்கள்.)

சிங்கப்பூரில் இருந்து பாடப்புத்தகங்கள் மற்றும் சர்வதேச சான்றிதழ்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

*Batch I - Sat,Sun 9.00 a.m.* *Batch II - Sat,Sun 3.30 p.m.*
*Batch III - Mon,Wed, Fri 9.00 a.m.* *Batch IV - Mon,Wed, Fri 5.15 p.m.*

**DMI COMPUTER EDUCATION**
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிமுக அணி ஸ்லோவாக்கியா அதிரடியான ஆட்டம்; இறுதி நிமிடத்தில் போட்டியை சமன் செய்தது நியூசிலாந்து

ரஸ்டன்பேர்க், ஜூன் 16

நியூசிலாந்து அணி வீரர் ரெய்ட்டின் கடைசி நிமிடக் கோலால் ஸ்லோவாக்கியா அணியுடனான ஆட்டத்தை சமன் செய்தது நியூசிலாந்து.



ஆட்டத்தை மாற்றிய இறுதிநிமிடக் கோல்...

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் 19ஆவது உலகக்கிண்ணப் போட்டி களில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பலமான நியூசிலாந்து அணியும் அறிமுக அணியான ஸ்லோவாக்கியாவும் மோதின.

இந்தப் போட்டியே ஸ்லோவாக்கியா அணிக்கு உலகக்கிண்ண ஆட்டத்தில் முதல் தடவையாக அறிமுகமானதால் நியூ சிலாந்து ஸ்லோவாக்கியாவை இலகுவாக வெற்றிகொண்டு விடும் என்றே எதிர் பார்க்கப்பட்டது.

நியூசிலாந்து அணி நெல்சென் தலை மையிலும் ஸ்லோவாக்கியா அணி ஹம்சின் தலைமையிலும் களமிறங்கியது.

புதிய அணியாக இருந்தபோதும் ஸ்லோ வாக்கியா நியூசிலாந்துக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது. இரு அணிகளும் விறுவிறுப்பை ஏற்படுத்தும் விதத்தில் ஆடின. முதல் பாதி ஆட்டம் கோல்கள் எது வும் பெறப்படாமல் சமநிலையில் முடிவ டைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் ஆரம்பத் தில் ஸ்லோவாக்கியாவின் கை ஓங்கியது. ஆட்டத்தின் 50ஆவது நிமிடத்தில் ஸ்லோ வாக்கிய வீரர் விற்றெக் தலையினால் முட்டி அதிரடிக் கோல் ஒன்றைப் போட் டார்.

பதிலுக்குக் கோல் போடுவதற்கு நியூ சிலாந்து அணி கடுமையாக முயற்சி செய் தது. ஆட்டம் முடிவை எட்டும் கடைசி நிமிடத்திலேயே நியூசிலாந்தின் முயற்சிக் குப் பலன் கிடைத்தது.

அணித்தலைவர் நெல்சென் அடித்த பந்தைத் தனது தலையினால் முட்டி கோலாக்கினார் ரெய்ட். இதனால் ஆட்டம் 1:1 என சமநிலையில் முடிவடைந்தது.


தனது அறிமுகப் போட்டியிலேயே வெற்றிபெறும் வாய்ப்பு இருந்து இறுதித் தருணத்தில் அந்த வாய்ப்புப் பறிபோன தால் ஸலோவாக்கியாவின் வீரர்களும் ரசிகர்களும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

ஆட்டநாயகனாக ஸ்லோவாக்கியாவின் விற்ஹெக் தெரிவானார். (6)

## இத்தாலி - பராகுவே ஆட்டமும் சமநிலையில்

கேப்பரவுண், ஜூன் 16

இத்தாலி பராகுவே அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 1:1 எனும் கோல்க் கணக்கில் சமநிலையில் முடிந்தது. தென் னாபிரிக்காவில் நடந்து வரும் 19 உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி யில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட் டத்தில் இத்தாலியும் பராகுவேயும் மோதின.



டிரோசி

ஆட்டம் ஆரம்பித்த மூன்றாவது நிமி டத்திலேயே இத்தாலிக்கு கோல் அடிக்க வாய்ப்புக் கிடைத்த போதிலும் அந்த வாய்ப்பை தவறவிட்டுவிட்டது.

இத்தாலிவீரர்கள்அடிக்கடிதவறு செய்யவே அவற்றைத் தமக்கு சாதகமாகப் பயன்படு தினர் பராகுவே அணியின் வீரர்கள்.

ஆட்டத்தின் 39 ஆவது நிமிடதில் பராகுவே வீரர் டரஸ் அடித்த பந்தை லாபகமாக தலையினால் முட்டி கோலாக் கினார் அன்ரோலின் அக்கரஸ்ட்.

முதல்பாதி ஆட்டம 1:0 கோல் அடிப் படையில் பராகுவே முன்னிலை வகிக்க முடிவடைந்தது. இரண்டாம் பாதி ஆட்டத் தில் உஷாரான இத்தாலி வீரர்கள் அதிரடி யாக ஆடினர். ஆட்டத்தில 63 ஆவது நிமி டத்தில் இத்தாலிய வீரர் டிரோசி கோல் ஒன்றைப் போட்டார்.

பின்னரும் இத்தாலிய அணியினர் கோல் போடுவதற்கு முயற்சித்த போதும் பராகுவே அணியின் தற்காப்பு வீரர்கள் இறுக்கமாக ஆட ஏனைய வீரர்களும் தடுத்தாடினார் இதனால் இத்தாலிய அணி யால் கோல் எதனையும் பெற முடிய வில்லை.


ஆட்ட முடிவில் 1:1 என்னும் கோல்கள் அடிப்படையில் இத்தாலி - பராகுவே அணியினரின் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

(6)

## ரொனால்டோவின் அதிரடி முயற்சிகள் வீணாகின; ஐவரிகோஸ்ட் - போர்த்துக்கல் ஆட்டம் சமன்!

போர்ட் எலிஸபெத், ஜூன் 16

ஐவரிகோஸ்ட் - போர்த்துக்கல் அணிகளுக்கிடையிலான ஆட்டம் கோல்கள் எதுவும் பெறப்படாத நிலையிலேயே சமநிலையில் முடிவடைந்தது.



போட்டி ஆரம்ப மாகிய 10 ஆவது நிமிடத்திலேயே போர்த் துக்கல் அணிக்கு கோல் போடும் சந் தர்ப்பம் ஒன்று கிடைத்தது.

கிறிஸ்ரியானோ ரொனல்டோ அடித்த அந்தப் பந்து கோல் கம் பத்தில்பட்டு வெளியேறியது.

ஐவரிகோஸ்டின் வீரர்கள் ரொனால்டோவின் கால்களையே குறி வைத்துத் தாக்கினார். இதனால் கோபமடைந்த ரொனால்டோ அவர் களுடன்வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இரு அணிகளும்வெற்றிக்காகப போராடியதுடன் கோல் அடிக்கும் பல சந்தர்ப்பங்களையும் தவற விட்டன. இதனால் கோல்கள் எதுவும் பெறப்படாமலே ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

ஆட்டநாயகனாக போர்த்துக்கல்லின் கிறிஸ்டியானோ ரொனால்டோ தெரிவானார். (6)

## வன்னி மாவட்ட இணைப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவசக்தி ஆனந்தன் ஆகியோரே கலந்து கொண்ட கூட்டமைப்பு உறுப்பி னராவார்.

மக்களின் மீள் குடியமர்வுடன் தொடர்பு டைய அதிகாரிகள், திணைக்களத் தலை வர்களும் கூட்டத்தில் பங்குபற்றினர்.

கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற நாடா ளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் அரசால் நியமிக்கப்பட்ட இணைத் தலைவர்களின் கீழ் இடம்பெறும் முதலாவது கூட்டம் இது வாகும்.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்த லின் பின் இணைப்புக்குழுக் கூட்டங்கள் இடையிடையே இடம்பெற்ற போதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக் கள் அக் கூட்டங்களைப் புறக்கணித்து வந்தனர்.

நேற்று நடந்த முதலாவது கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப் பினர்கள் பல்வேறு பிரச்சினைகளை முன் வைத்தனர்.

அங்கு ஆராயப்பட்ட மற்றும் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் வருமாறு:

✱ முள்ளிவாய்க்கால் பகுதியில் பொது மக்களால் கைவிடப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள், டிராக்டர் கள், லான்ட்மாஸ்டர்கள், வள்ளங்கள் ஆகிய வற்றை மக்களுக்கு மீள்வளங்க வசதியாக அரச அதிபரிடம் கையளிக்குமாறு கூட்ட மைப்பினர் கேட்டுக்கொண்டனர். விரை வாக அவற்றை அரச அதிபரிடம் கைய ளிக்க ஏற்பாடு செய்வதாக ஆளுநர் தெரி வித்தார்.

✱ கடந்தகால போர் நிலைமை காரணமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, மல்லாவி, மடு, வவுனியா தெற்கு ஆகிய பகுதிகளில் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர் களாகப் பணியாற்றி வருபவர்கள் நிரந்திர மாக்கப்படவில்லை. அவர்கள் நிரந்தரமாக் கப்பட வேண்டும் என்று கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

✱ பிரஸ்தாபத் தொண்டர் ஆசிரியர் களுக்கு நேர்முகப்பரீட்சை நடத்தி நிரந்தர நியமனம் வழங்க அமைச்சரவைப் பத் திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று ஆளு நர் தெரிவித்தார்.

✱ நெற்செய்கையில் ஈடுபடுபவர் களுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்க வேண்டும் என்று கூட்டமைப்பினர் விடுத்த கோரிக்கையை ஆளுநர் ஏற்று நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

✱ மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 50 வீத மானியத்துக்கு வழங்கப்படும் கோழிக் குஞ்சுகளை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமெனக் கூட்டமைப்பினர் கோரினர். இலவசமாக வழங்க ஏற்பாடு செய்வதாக ஆளுநர் உறுதி கூறினார்.

✱ மீளக்குடியமர்ந்தோர் தமது காணி தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்து உறுதிகளைப் பெறக் காணிக் கச்சேரி நடத்த வேண்டும் என்று கூட்டமைப்பினர் முன் வைத்த கோரிக்கையையும் ஆளுநர் ஏற் றுக்கொண்டார்.

✱ பாடசாலைகளில் நிலைகொண் டுள்ள படையினரை விலக்கி பாடசாலை கள் இயங்க ஏற்பாடு செய்ய வேண்டு என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஆளுநர் விரைவாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

✱ வன்னியிலுள்ள வைத்தியசாலை களில் நிலவும் டாக்டர்கள், தாதிகள் பற் றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கூட்டமைப்பினர் கோரினர். புதிதா கப் பயிற்சிபெற்று வெளி யேறும் டாக்டர் கள், தாதிகளை நியமிக்க ஏற்பாடு செய்வ தாக ஆளுநர் உறுதிகூறினார்.

✱ கூட்டுறவுச் சங்கங்களில் பொதுமக்கள் வைப்பிலிட்ட பணத்தை மீளப்பெற ஏற்பாடு செய்யுமாறு விடுத்த கோரிக்கை குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் பதில் அளித்தார். (ஓ-1)

## இலங்கை மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் தொடர்ந்து தகவல் தருகை யில் கூறியவை வருமாறு:-

அனைவரும் எமது அழைப்பின் பேரி லேயே இங்கு விஜயம் செய்கின்றனர். எமது ஜனாதிபதி இந்திய விஜயத்தின்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த அரசியல் கட்சி களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 21 உறுப் பினர்களைச் சந்தித்திருந்தார். அந்த 21 பேரையும் இலங்கைக்கு வருமாறு ஜனா திபதி அழைப்பு விடுத்திருந்தார்.

அவர்கள் ஒருவேளை அடுத்த வாரம் விஜயம் மேற்கொண்டால் இந்தக் கேள்வி கள் மேலும் தீவிரமடையலாம். விடுதலைப் புலிகளுக்கு முழுமையான ஆதரவு வழங் கினர் எனக் கருதப்படும் தமிழ்நாட்டைச் சேர்ந் தவர்கள் இங்கு வந்து நாலாபக்கமும் செல்கின்றனரே, என்ன விடயம் இது என்ற கேள்விகளும் அப்போது எழக்கூடும்.

யாரைவிடவும் தமிழ்நாட்டைச் சேர்ந் தவர்கள் வந்தால் இங்குள்ளவர்களுக்குச் சந்தேகம் அதிகரிக்கக்கூடும். அவர்களுக்கு ஜனாதிபதி, அழைப்பு விடுத்தமை மட்டு மன்றி நாம் கூறுகின்ற விடயங்களின் உண் மையை வடக்கிற்குச் சென்று நேரில் பார்த்து அறியுமாறும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய நிலையில், இவ்வாறான செயற்பாடுகள் அவசியமானவை. ஏனெ னில், இலங்கை தொடர்பாக உலகில் வெவ்வேறான கருத்துகள் தற்போது வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. நேற்றைய தினம் பிரிட்டிஷ் நாடாளுமன் றத்தில் இலங்கைப் பிரச்சினை தொடர் பாக விவாதம் நடத்துவதற்கு விடுக்கப் பட்ட கோரிக்கைகள் தொடர்பான செய் திகளையும் நீங்கள் அறிவீர்கள்.

இதன்போது எம்மால் செய்யக்கூடிய சிறந்த விடயம் என்னவென்றால், அவர் களை இங்கு அழைத்து அவர்களிடம் குற் றச்சாட்டுகள் இருக்குமானால், அவற்றில் உண்மையில்லை என்பதைத் தெளிவு படுத்த இது துணைபுரியும். - என்றார்.

(அ-சி)

## இந்திய நீதிமன்றிலோ,.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

1989முதல் 1990 வரையான காலப் பகுதிகளில் சூளைமேடு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவ வழக்கு சென்னை நீதி மன்றில் இருந்தபோது மேற்படி வாசகத்தை எனது சட்டத்தரணி எனக்கு வாசித்துக் காட் டினார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து எனக்கு எதிராக எந்த வழக்கும் இல்லை என அவர் மேலும் கூறினார்.

அதன் பின்னர் சூளைமேட்டு துப்பாக் கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் சென் னையிலோ அல்லது வேறெந்த இடத்தி லுமோ எவரும் பிரச்சினை கிளப்பவில்லை.

பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதன் பின்னர் நான் தனிப்பட்ட மற்றும் அரசியல் காரணங்களுக்காகப் பல தடவைகள் இந்தியா சென்று வந்துள்ளேன்.

குறுகிய அரசியல் கரணங்களுக்கா கவே இந்த விடயம் இப்போது மீண்டும் சென்னை நீதிமன்றத்துக்கு கொண்டுவரப் பட்டுள்ளது. இது செல்லுபடியற்ற ஒரு வழக்கு. இது தொடர்பில் என்னை சென்னை நீதிமன்றத்திலோ அல்லது இலங்கை நீதிமன்றத்திலோ ஆஜர்படுத்த முடி யாது.'' - என்றார். (சி)

## சரத் பொன்சேகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இதனை அங்கீகரித்திருந்தார்.

இந்த நிலையில், நாடா ளுமன்றம் சரத் பொன்சேகாவை மாநாட்டுக்குச் செல்ல அனுமதித்திருந்தபோதிலும் நாட்டின் சட்டத்திற்கு அமையவே இந்த விடயத் தில் நடந்துகொள்ள முடியும் என அமைச் சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள் ளார்.

இதனடிப்படையில் தடுப்புக் காவலில் உள்ள சரத் பொன்சேகாவை குறித்த மாநாட் டுக்கு அனுப்பமுடியாது என அவர் தெரி வித்தார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயா கமகேயின் நியமனம் ரத்தாகுமா? மீள்பரிசீலனை என்கின்றார் ரணில்

## கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் சூடுபிடிக்கிறது

கொழும்பு, ஜூன் 16

கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் மீள் பரிசீலனை செய்யப்படும் என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக்காலை முஸ்லிம் காங்கிரஸுக்கு உறுதியளித்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம். எம்.ரி.ஹஸன் அலி இந்தத் தகவலைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் நேற்றுக்காலை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருடன் பேச்சு நடத்தினர். அப்போது கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் குறித்தும் பேச்சு இடம்பெற்றது. அதன்போதே ரணில் விக்கிரமசிங்க இந்தப் பிரச்சினை குறித்து சாதகமான வகையில் மீள் பரிசீலனை செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்த பஷீர் சேகு தாவூத் கடந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டமையை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது. இந்த நிலையில் ஐ.தே.கட்சி தன்னிச்சையாக தயா கமகேயை கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக நியமித்தது. கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் ஐ.தே.கட்சியுடன் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிட்டது. தேர்தலில் 9 முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் 5 ஐக்கிய தேசியக் உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்தாமல் ஐ.தே.கட்சி தன்னிச்சையாக செயற்பட்டமையால் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டது.

இதனை அடுத்து இந்த நியமனத்தை மீள் பரிசீலனை செய்யப்போவதாக ஐ.தே.க. தலைவர் உறுதி அளித்துள்ளார்.

# பல்கலை மாணவனுக்கு கத்திக்குத்து

திருகோணமலை, ஜூன் 19

பல்கலைக்கழக மாணவர்கள் இருவருக்கிடையேஏற்பட்ட தகராறில் ஒருவர் கத்திக் குத்துக்கு உள்ளான நிலையில் திருகோணமலை வைத்தியசாலையி[ல்] சேர்க்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை உவர் மலைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் கல்வி பயிலும் சிந்திக உபுல் திஸாநாயக்க எனும் 24 வயதுடைய மாணவரே காயம் அடைந்தவர் ஆவார். காதல் விவகாரமே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# வவுனியாவில் வாகன விபத்து; தாயும் மகனும் பரிதாபப் பலி!

வவுனியா, ஜூன் 16

வவுனியா பொதுவைத்தியசாலை அருகாமையில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐயனார் வீதியைச் சேர்ந்த சிவநேசன் பிரேமிளாதேவி, மற்றும் அவரது ஐந்து வயதுடைய மகன் சிவநேசன் சயந்தன் ஆகியோரே இச் சம்பவத்தில் பலியானோர் ஆவர்.

இவர்களது சடலங்கைள் வைத்திய சாலை யில் வைக்கப்பட்டுள்ளன என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமாலை 6.30 மணியளவில் ஏ - 9 வீதியில் மோட்டார் சைக்கிளும் ட்ரக் ரக வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

# தொண்டு நிறுவனச் செயலகம் பாதுகாப்பு அமைச்சின் கீழ்!

கொழும்பு, ஜூன் 16

தன்னார்வத் தொண்டு நிறுவன செயலகம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் மாற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவன செயலகம் முன்னர் சமூகச் சேவைகள் அமைச்சின் கீழ் காணப்பட்டது. அத்துடன், பின்னர் உள்விவகார அமைச்சின் கீழ் கடந்த காலங்களில் இயங்கி வந்தது.

புதிய நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமான காலம் முதல் தன்னார்வத் தொண்டு நிறுவன செயலகம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் செயலகம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் என தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைக் கண்காணிக்கும் நோக்கில் இந்த மாற்றம் நிகழ்த்தப்படவில்லை எனவும், இது ஓர் நிர்வாகக் கட்டமைப்பு மாற்றம் மட்டுமே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உள்துறை அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் குடிவரவு குடியகழ்வுத் திணைக்களம், தன்னார்வத் தொண்டு நிறுவன செயலகம், கடவுச்சீட்டுத் திணைக்களம் ஆகியன அவரது கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர் ரியூசன் செல்வதை சட்டத்தால் தடுக்க முடியாது!

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

மாணவர்கள் டியூசன் வகுப்புகளுக்குச் செல்வதை சட்டத்தால் தடுக்கமுடியாது. இருந்தும் பௌர்ணமி தினத்தன்று ரியூசன் வகுப்புகளைத் தடைசெய்து மாணவர்களை சமூக வகுப்புகளுக்குச் செல்லத் தூண்டுவதை ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்கின்றது.

கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி உறுப்பினர் மொகான்லால் கிரேரு நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியவை வருமாறு:-

தமது பிள்ளைகளுக்குச் சீரான கல்வியை வழங்குவது பெற்றோரின் கடமை. கல்வியை விடச் சிறந்ததை பெற்றோரால் பிள்ளைகளுக்குக் கொடுக்க முடியாது. ரியூசன் வகுப்புகளைத் தடைசெய்வது பெற்றோரின் மனித உரிமைகளை மீறுவதாகும்.

முன்னர் உயர்வகுப்பு மாணவர்கள் மாத்திரமே ரியூசன் வகுப்புகளுக்குச் சென்றனர். இப்போது நான்காம் ஆண்டு மாணவர் முதல் உயர் வகுப்பு மாணவர்கள் வரை ரியூசன் வகுப்புகளுக்குச் செல்கின்றனர். பாடசாலைகளில் பாடத்திட்டங்கள் முறையாகப் பூர்த்தி செய்யப்படாததும், ஆசியரியர் பற்றாக்குறையுமே இதற்குக் காரணமாகும்.

அரசு பத்து வயதுக்குக் குறைந்த மாணவர்களுக்கான ரியூசன் வகுப்புகளைத் தடைசெய்யவேண்டும். ஏனென்றால், இந்த வயது வரைதான் அறிவுக்கான மூளையிலுள்ள கோடிக்கணக்கான செல்கள் உயிருடனிருக்கும். பத்து வயது வரை ஒரு பிள்ளை அனுபவங்கள் மூலம் அறிவைத் தானாகவே பெற்றுக்கொள்கின்றது. இதைத் தடுக்கும் வகையில் பிள்ளை மீது டியூசன் போன்ற இன்னோரன்ன விடயங்களைத் திணிக்க முற்படக்கூடாது.

ரியூசன் வகுப்புகள் நடக்கும் கட்டடங்கள் குறித்தும் அங்கு மலசலகூட வசதிகள் மற்றும் குறிப்பிட்ட பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியரின் தகுதி என்பன குறித்தும் கண்காணிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஒ-சி)

---

## பருத்தித்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவானாகப் பணியாற்றினார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாக எதிர்வரும் திங்கள் முதல் அவர் நீதிச் சேவை ஆணைக்குழுவால் பதவியுயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார். (அ-1)

---

## சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானாக எஸ். அப்துல்லா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மாணவன் கபிலநாத் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நீதிவான் ரி.ஜே. பிரபாகரன் முன் விசாரணை செய்யப்பட்டு வருவது தெரிந்ததே. (அ-1)

# பிச்சைக்காரர் ஒருவர் நேற்று கற்களால் தாக்கப்பட்டுக் கொலை!

## கொம்பனித்தெருவில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 16

கொழும்பு - கொம்பனித் தெருவில் பிச்சைக்காரர் ஒருவர் நேற்றுக் கற்களால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை கொம்பனித்தெரு வீதியில் இருந்த இவரை இனந்தெரியாத சிலர் கற்களால் தாக்கிக் கொலை செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக கொம்பனித்தெருப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

---

## யுத்தக் குற்றச் சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளவை வருமாறு -

பலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் நிவாரணங்களை ஏற்றிச் சென்ற கப்பல் மீது இஸ்ரேலிய இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச ரீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென இலங்கை வலியுறுத்தியுள்ளது.

குறித்த விசாரணை ஆணைக்குழுவின் தலைமைப் பொறுப்புக்கும் ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதிநிதியே நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகிறது. இலங்கை மற்றும் இஸ்ரேல் சம்பந்தப்பட்ட யுத்தக் குற்ற விவகாரங்கள் சர்வதேச ரீதியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதே எனது உறுதியான நிலைப்பாடு. இலங்கை இந்த விடயத்தில் அதன் உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் சுயாதீனத் தன்மை, பாரபட்சமற்ற செயற்பாடு ஆகியன குறித்து சந்தேகம் எழுந்துள்ளது. ஆணைக்குழுவின் உறுப்பினர் நியமனம் தொடர்பாக திருப்தி கொள்ள முடியாமல் உள்ளது.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் குறித்த ஆணைக் குழுவின் பிரதான நோக்கங்கள் பட்டியல் படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் அதில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவோ அல்லது யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பாகவோ ஒரு வார்த்தையேனும் இல்லை. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் உருவாக்கப் படவில்லை.

எதிர்கால நலன்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. எனவே கடந்த காலக் குற்றச் செயல்கள் உதாசீனம் செய்யப்படும் என்பதா அதன் அர்த்தம்?.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு, சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக செயற்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகிறனவா என்பதும் சந்தேகமே.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

(அ-சி)

Seminar
மாபெரும் 6 நாள் கருத்தரங்கு
A/L 2010
LOGIC
எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம்: 29.06.2010 செவ்வாய் 8 மணி
(அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்க)
BEACON யாழ்.நகர்
(சி-568366)

வீடு வாடகைக்குத் தேவை
4 பேர் கொண்ட குருக்கள் குடும்பத்திற்கு கொக்குவில் பகுதியில் வீடு ஒன்று வாடகைக் குத் தேவை.
தொடர்பு: 021 373 7816, 0776589046

LAVA HOSPITALS
பற் சிகிச்சைக் கிளினிக்
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 2224333
நிரந்தரக் கிளிப்போடுதல், நிரந்தர பல் பொருத்துதல் உட்பட சகல வகையான பற் சிகிச்சைகளும் நவீன உபகரணங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.
தினமும் மாலை 4.30 மணி முதல் 7.00 மணிவரை




நீங்கள் 16 வயதுக்கு மேற்பட்டவரா!
A/L, O/L தேவையில்லை கவலையை விடுங்கள்.
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்க, தொழில்வாய்ப்புக்களை பெற
மேலதிக விபரங்களுக்கு,
MCS
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Campus Junction Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புற்று நோயாளிகளுக்கு உதவும் யோகாசனம்



உடலை ஆரோக்கியமாகவும், புத்துணர்ச்சியாகவும் வைத்துக் கொள்வதில் யோகாசனத்திற்கு ஈடு இணையே கிடையாது. அப்படிப்பட்ட யோகாசனம் செய்வதால் புற்று நோயாளிகள் நல்ல தூக்கத்தைப் பெறமுடியும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

புற்று நோயாளிகள் யோகாசனம் செய்தால் நன்றாகத் தூக்கம்வரும், உடல் களைப்பு மாறி அதிக சக்தி கிடைக்கும் என்று ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. குறிப்பாக மார்பக புற்று நோய்க்கு ஹீமோ தெரபி சிகிச்சை பெற்றவர்களுக்கு இந்த யோகாசனம் நல்ல பலனை அளித்ததாகக் கண்டறியபட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள ரோச்செஸ்டர் மருத்துவ மையம் என்ற பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் 400 இற்கும் மேற்பட்டவர்களிடம் இந்த ஆய்வை நடத்தினார்கள்.

குறிப்பாக மார்பகப் புற்று நோய்க்கு ஹீமோ தெரப சிகிச்சை பெற்றவர்களிடம் ஆய்வு மேற்கொண்டனர். ஒரு பிரிவினர் வாரம் 2 முறை விதம் ஒரு மாதத்துக்கு யோகாசனம் செய்ய வைத்து ஆய்வு நடத்தப்பட்டது. அவர்களுக்கு நன்கு தூக்கம் வந்ததாகவும், அதிக சக்தியும், புத்துணர்ச்சியும் பெற்றதாகவும் தெரியவந்தது.

இதனால் அவர்கள் தூக்க மாத்திரை உட்கொள்வதைவிட்டு விட்டதையும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். யோகாசனம் செய்யாத புற்று நோயாளிகளுக்கு தூக்கம் வருவதில் பிரச்சினையும் இருந்தது, புத்துணர்ச்சி இல்லாமல் எப்போதும் களைப்புற்றும் காணப்பட்டனர்.

யோகாசனம் செய்வதால், புற்று நோய் பாதித்தவர்கள் தூக்கம் வருவதற்கு தூக்க மாத்திரை சாப்பிட வேண்டிய அவசியம் வராது என்றும், தங்களது நோயினால் ஏற்பட்ட உடல் களைப்பும், மன அழுத்தமும் குறைகிறது என்றும் பெண் ஆராய்ச்சியாளர் கரென் முடியாசுன் தெரிவித்துள்ளார். ★★★




இந்திய ரோமிங் கட்டணங்களில் மிகச் சிறந்த சலுகைகள்!

vodafone

இந்த சலுகையினைப் பெற, இந்தியாவைச் சென்றடைந்ததும், உங்கள் மொபைலில் ரோமிங் இனை செயற்படுத்தி, ரோமிங் பங்காளராக **Vodafone** ஐ தெரிவுசெய்யுங்கள்.

- ரோமிங் இன் போது **உள்வரும் அழைப்புகள் இலவசம்** *
- நாளொன்றிற்கு **10 US $** என்ற மிகக்குறைந்த கட்டணத்தில் **வரையறையற்ற தரவு Download கள்** (நியாயமான பாவனைக் கோட்பாட்டிற்கு உட்பட்டது)
- வெளிச்செல்லும் அழைப்புகள், மற்றும் **SMS** களில் **50% கட்டணக் கழிவு**

இச்சலுகை பிரத்தியேகமாக பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே
**+94 777 999 777**

* ரோமிங் நிலையில் இருக்கும் வேளையில், இலங்கையிலிருந்து வரும் உள்வரும் அழைப்புகளுக்கு, இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு அழைப்பதற்கான IDD கட்டணங்கள் பிரயோகிக்கப்படும்.

சில நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்

Mobile

an axiata company www.dialog.lk

Dialog



நாம் இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்...

E-tel மற்றும் Sony Ericsson கையடக்கத் தொலைபேசிகளின் இலங்கையின் அதிகாரம் பெற்ற முகவர்களான Brantel Lanka நிறுவனமாகிய நாம் யாழ் குடாநாட்டில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

E-tel



V358 KN B58 V809 E390 V001 V636

கடன் அட்டை வைத்திருப்பவர்களுக்கு வட்டியின்றிய இலகு முறை மாதாந்த தவணைக் கொடுப்பனவு சேவை.

SampathBank HNB BOC HSBC SEYLAN

Sony Ericsson



Aino

Naite W205

Brantel நிறுவனத்தின் யாழ் பிரதேச ஏக விநியோகஸ்தர்களாகவும் சேவை வழங்குனர்களாகவும் ராம் சுப்பர் சிடி நிறுவனம் செயற்படவுள்ளதனையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ராம் சுப்பர் சிடி
306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 1252

brantel

BRANTEL LANKA (PVT) LTD.
06, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 04.
Web : www.brantel.lk

Hotlines:
077 265 3060 / 011 4315666
நாடு பூராகவும் பரந்து காணப்படும் விற்பனை முகவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்தின் கல்விச் செயற்பாடுகளுக்கு ஆளுநர் இடையூறு என்கிறார் மாகாணக் கல்வி அமைச்சர்

## குற்றச்சாட்டை மறுகிறார் ஆளுநர்

மட்டக்களப்பு, ஜூன் 16

கிழக்கு மாகாண ஆளுநர் பதவியிலிருக்கும்வரை தம்மால் கல்வி சம்பந்தமாக எந்தவொரு பொறுப்பையும் ஏற்கமுடியாது என்று மாகாணக்கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் தராதரீதியிலான அதிபர்களை நியமிப்பதில் தன்னிச்சையாகச் செயல்படுகிறார். அதில் எனக்கு உடன்பாடு இல்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நான் கிழக்கு மாகாண மக்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இதேவேளை, ஆளுநர் கிழக்கு மாகாண மக்களின் இறையாண்மைக்கு எதிராக செயற்பட்டு வருகின்றார். அதற்கு நானும் ஒத்துழைத்தால் பொதுமக்களுக்கும் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் பதில் கூறவேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு விடுவேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் எனது பொறுப்புக்களைச் சரிவர நிறைவு செய்ய முடியாத நிலையில் உள்ளேன். வடக்கு, கிழக்கில் அமைதியை நிலைநாட்டுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார். எனினும், ஆளுநரின் நடவடிக்கை இவற்றுக்கு முரணாக உள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆளுநரின் நடவடிக்கை விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். அத்துடன், சர்வதேசச் சமூகமும் இதன் நிலைப்பாடு குறித்து கவனம் செலுத்திவருகின்றது என்றும் மாகாணக் கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இக் குற்றச்சாட்டுக்களை ஆளுநர் ரெயார் எட்மிரல் மெஹான் விஜேவிக்கிரம அடியோடு மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அளித்துள்ள விளக்கத்தில், கல்வி சம்பந்தமான நடைமுறைக்கு சாத்தியமான நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்கப்படும். தன்னிச்சையான போக்கிற்கு இடமில்லை என குறிப்பிட்டுள்ளார்.

கல்வியை அரசியல் மயப்படுத்த முடியாது. அத்துடன் பதவி உயர்வு வழங்குதல், ஆசிரியர்களைவேலைக்கு அமர்த்துதல் ஆகியவை ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவை தொடர்பான நடவடிக்கைகளும் மாகாண கல்விச் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் ஆகியோருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட ஒருவரின் செயற்பாடு மாத்திரம் இதில் இடம்பெறுவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் கிழக்கு மாகாண அமைச்சர்களுக்கான அதிகாரங்கள் மறுக்கப்பட்டுள்ளன என்றும் பாடசாலை நடவடிக்கைளில் எனது தலையீடு உண்டென்றும் முறையிடப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டுக்களை நான் நிராகரிக்கின்றேன் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் பதவிகள் கல்வித் தகைமைகளின் அடிப்படையிலும், நியமனத்திட்ட விதிகளுக்கமைவாகவும் வழங்கப்படுகின்றன. கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரும், இதர அனைத்து அமைச்சர்களும் என்னுடன் இணைந்தே செயற்படுகின்றார்கள். ஆனால், கல்விஅமைச்சர் மாத்திரம் எனக்கு விரோதமாக செயற்படுகின்றார் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

(ளி)



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்துக்கான நினைவுப் படிகத்தை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க திரைநீக்கம் செய்துவைப்பதை முதலாவது படத்திலும், பல்கலைக்கழக மாணவர்களுடன் அமைச்சர் உரையாடிக் கொண்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைமைப்பதவி; மு.கா. எந்தக் கோரிக்கையும் முன்வைக்கவில்லை!

## ஐ.தே.கட்சி திட்டவட்டமாக அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 16

கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்தவொரு கோரிக்கையையும் முன்வைக்கவில்லை என ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கயந்த கருணாதிலக நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றது. செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:

கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் விடயம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்று ஆகும். இது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் எதுவித கோரிக்கையையும் முன்வைக்கவில்லை. அத்துடன், கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெற்று நீண்ட காலமாகிவிட்டது.

**செய்தியாளர்:-** கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பஷீர் சேகுதாவூத் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பின்னரே எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது. இந்த வெற்றிடத்தை நிரப்பும் போது முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்தப்படவில்லையா?

பதில்:- கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை.

**செய்தியாளர்:-** கிழக்கு மாகாண சபையில் 9முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஐ.தே.கட்சி சார்பில் ஐந்து




பேரே இருக்கின்றனர். எனவே அவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் குறித்து பேச்சு நடத்த வேண்டுமல்லவா?

பதில்:- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இது குறித்து இப்போது வேண்டுமானாலும் எம்முடன் பேச்சு நடத்தலாம். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த வாரமும் எமது நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார். இருந்தும், இது குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் இப்போதும் பேச்சு நடத்தலாம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ளி)

# உடுகம தோட்ட லயன் தொகுதி மீது தாக்குதல் இரு பெண்கள் உட்பட ஐவர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூன் 16

உடுகம - ஹோமதொல தோட்ட லயன்கள் மீது கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் இரு பெண்கள் உட்பட ஐவர் காயமடைந்து உடுகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.




இத் தாக்குதலில் ஐந்து லயன்கள் சேதமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் நடத்தியவர்களை உடன் கைது செய்யுமாறு கோரி தோட்டத் தொழிலாளர் கள் உடுகம பொலிஸ் நிலையத்திற்கு முன்பு கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தி னர். இதனையடுத்து ஐந்து சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோழியொன்றை வாங்கும்போது ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதாலேயே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற தாகத் தெரிவிக் கப்படுகிறது.

இவ்விடயத்தில் பொலிஸார் பாரபட் சமற்ற நடவடிக்கை எடுப்பர் என்ற நம் பிக்கை எமக்குண்டு - எனத் தொழிலா ளகள் தெரிவித் துள்ளனர்.

தாக்குதலால் வீடுகளுக்கும், கோழிக் கூட்டுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. (ளி)

# அப்புத்தளை உணவு விடுதியில் மோதல் மூவர் வைத்தியசாலையில்; இருவர் கைது

கண்டி, ஜூன் 16

அப்புத்தளை நகர உணவுவிடுதி ஒன்றில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டவர்களில் முக்கிய அரசியல்வாதி ஒரு வரும் அடங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உணவுவிடுதியில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இவ்வாறு கைகலப்பில் முடிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்திய அப்புத்தளைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைதுசெய்துள்ளனர்.

ஏனையோரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(ளி)

# கஷ்டப் பிரதேசத்திற்கான கொடுப்பனவுகள் இன்றி மொக்கா தமிழ் வித்தியாலய ஆசிரியர்கள் விசனம்

## கவனிக்குமா சம்பந்தப்பட்ட திணைக்களம்?

கண்டி, ஜூன் 16

ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட மஸ்கெலியா மொக்கா தோட்ட தமிழ் வித்தியா லயத்தில் கடமைபுரியும் ஆசியர்களுக்கு சுமார் ஒருவருடத்திற்கும் மேலாக கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக அங்கு கற்பிக்கும் சுமார் 28 ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனப் பாடசாலை அதிபர் அன்ரனி பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதுகுறித்து ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர் தரப்பில் கூறப்பட்டவை வருமாறு:-

மொக்கா தோட்டமானது மஸ்கெலியா பிரதேசத்தின் மிகவும் பின்தங்கிய பகுதி என்பது பலரும் அறிந்ததே. இப்பாடசாலை அரச நிர்வாகத்தினுள் உள்ளீர்க்கப்பட்ட நாள்முதல் கஷ்டப்பிரதேசப் பாடசாலையாகவே கணிக்கப்பட்டு வந்துள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டில் மத்திய மாகாண கல்வித்திணைக்களத்தால் ஹற்றன் வலயத்திலுள்ள கஷ்டப்பிரதேச பாடசாலைகள் கணக்கெடுக்கப்பட்டன. அப்போது இப்பாடசாலையும் உள்வாங்கப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பு நடைபெற்று பத்துவருடங்கள் கடந்துவிட்டன.

இந்தநிலையில் கடந்த 2009 இல் மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தால் ஹற்றன் வலயக்கல்விப் பணிமனைக்கு அனுப்பப்பட்ட சுற்றிக்கையில் கஷ்டப்பிரதேச பாடசாலைகள் பட்டியலில் இப்பாடசாலை உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

இவ்விடயம் பாடசாலை அதிபரால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. எனினும் இதுவரை எவ்வித பயனும் கிட்டவில்லை.

இதேவேளை, இப்பிரதேசத்திலுள்ள ஏனைய பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேசத்திற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

இத்தகைய நிலைமையால் இப்பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் வேறு வசதியான பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் எத்தனங்களில் ஈடுபட்டுள்ளனர்.

அவ்வாறு அவர்கள் செல்வார்களானால் இப்பாடசாலை மாணவர்களின் கல்வி எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

எனவே, மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம் மேற்படி பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் - எனக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

(ளி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org